
# சாந்தி

செங்கை ஆழியான்



# காற்றில் கலக்கும் பெருமூச்சுகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

GAQ, GSQ, BCom.
BA, BSc LLB.

தேசிய கல்விக் கழகம்

வெளிநிலைக் கல்விச் சேவையில்-
இலங்கையில் தன்னிகரற்ற-
கல்வி நிறுவனம்- (INS)

101/10, Stanley Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் கலக்கும் பெருமூச்சுகள்

செங்கை ஆழியான்.

சாந்தி

ரூபா: 7-90

சுஜாதா பப்ளிக்கேசன்ஸ்

50/29, வைரவர் கோவில் ஒழுங்கை.
கொட்டடி, யாழ்ப்பாணம்.
இலங்கை.

இலங்கை ஏக விநியோகஸ்தர்கள்:
பூபாலசிங்கம் புத்தக சாலை - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் சாந்தி.....

இலங்கை மண்ணின் இலக்கிய உலகில் புதிய சகாப்தத்தை தோற்றுவிக்க வேண்டுமென்று எம் இதயத்தில் ஓர் உந்துதல் தோன்றிய அதே வேளை.....

இந்திய மண்ணிலிருந்து புற்றீசல் போல் தோன்றிவரும் இன்னோரன்ன பத்திரிகைகள், நாவல்கள். அவை குப்பை கூளங்களாக இருந்தாலும் கண்ணுக்கு கவர்ச்சியாகவும் கச்சிதமாகவும் மிளிர்வது கண்டு வரும் எமக்கு உள்ளத்தில் ஓர் அரிப்பு.....

ஜனரஞ்சிதமாகவும், கற்பனை வளத்தோடும் காவியம் படைத்திடும் பலதரப்பட்ட எழுத்தாளர்களையும் ஆற்றலுள்ள அறிஞர்களையும் பெற்றுத் திகழ்கின்ற இம் மண் தன் இலக்கிய வளத்தை ஏன் மெருகேற்றக் கூடாது. இந்திய பத்திரிகைகளின் கவர்ச்சிக்கும் பொலிவுக்கும் ஈடாக இம் மண்ணிலும் பல வண்ணங்களில் நாவல்கள் ஜொலிக்கக் கூடாதா? திரைவானில் மின்னுகின்ற நட்சத்திரங்கள் போல் நம் நாவலாசிரியர்களும் மின்னக் கூடாதா? இக் கேள்விகளுக்குப் பிறந்த பதிலே செங்கையாழியானின் "காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்".

அழகிய பலவர்ண அட்டையுடன் வாசகர்களின் இதயத்தை ஊடறுத்துச் செல்லக் கூடிய சம்பவங்களை உள்ளடக்கிய கதையம்சத்தை கொண்டதுமான ஓர் நாவலை அச்சேற்றித் தர வேண்டுமென சுஜாதா பப்ளிக்கேசன் நிறுவனத்தாருக்கு ஏற்பட்ட தாகம் பெருமூச்சுக்களாக வெடித்து காற்றோடு கலந்து சங்கமமாகிக் கொண்டிருந்த வேளை எண்பத்தி மூன்றாம் ஆண்டு புதிய உத்வேகத்தை தந்தது. அதன் பயனே "சாந்தி" எனும் நாமம் தாங்கி உங்கள் மலர்க் கரத்தில் தவழ்கின்றது.

எமது இம்முயற்சி செங்கையாழியானுடன் முற்றுப் பெற்று விடப் போவதில்லை. இக் கதையின் நாயகி, அவள் பிரச்சனைகளுக்கு மத்தியிலே உழலுகின்ற ஓர் பரிதாபத்துக்குரிய உயிர். தியாகமென்றால் கிலோ என்ன விலையென்று கேட்டு, பகட்டும், படாடோபமும், நானே எல்லாம் என்ற எண்ண மேலீட்டில் தங்களை உயர்ந்த மனிதர்கள் என்று உளுத்துப் போன இவ்வுலகத்துக்குக் காட்டித் திரியும் உள்மந்தம் கொண்ட மனிதர்களுக்கு மத்தியில் அவள் ஓர் சுமைதாங்கி, துயரத்தின் சின்னம், துன்பத்தின் பிறப்பிடம், தியாகத்தின் தீபம் சோதனைகள், துயரங்கள், அத்தனையும் எவ்வண்ணமோ தாங்கி வெடித்துச் சிதறும் நிலைக்கு வந்துவிடும் உள்ளத்தை பெருமூச்சுக்களால் தேற்றி நிலை தழும்பாமல் நிமிர்ந்து நிற்கிறாள். அவள் நிலை போல் இலக்கிய உலகுடன் வாழத் துணிந்துவிட்ட சுஜாதா பப்ளிக்கேசன் நிறுவனம் சோதனைகள், குறுக்கீடுகள் அவைகளால் ஏற்படும் துயரங்கள் யாவற்றையும் தாங்கி கற்பனைவாதிகளையும், காரியவாதிகளையும் அணுகி பிரதேச ரீதியாக இந்நாவல் போல் வரிசைக்கிரமமாக தந்திடும் என்ற உறுதிமொழியை அள்ளி வழங்கிடும் இவ் வேளையில், வாசகர்களாகிய உங்கள் ஒத்துழைப்பு புதிய யுகத்தை படைத்திட எமக்கு ஊன்றுகோலாக அமையும் என்பதை மகிழ்வோடு தெரிவித்து மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம் என்று கூறி விடை பெறுவது-

—யாழூர் துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் கலக்கும் பெருமூச்சுகள்

செங்கை ஆழியான்.



நெற்றியில் திலகம் இட முயன்ற வலதுகரச் சுட்டு விரல் அப்படியே நிலைத்து நின்றுவிட்டது. அவள் விழிகள் உச்சியில் ஓரிடத்தில் ஒருகணம் நிலைத்தன.

நெஞ்சில் பகீர் என ஒரு எரிவு.

கரிய மயிர்த் திரள்களுக்கு இடையில் வெள்ளிக் கம்பியாக ஒரு மயிரிழை. அவள் கண்களுக்கு அது எப்படி இவ்வளவு காலமும் தட்டுப்படவில்லை?

அவள் வலக்கரம் சோர்ந்தது. விரலில் அப்பியிருந்த சாந்து சிந்தியது.

கண்ணாடியில் தெரியும் தன் உருவைப் பார்த்தாள். கண்களில் ஏக்கம்.

கவலை, விரக்தி, எல்லாவற்றிற்கும் மேலாக ஏமாற்றம்.

அவள் ஒரு பருவத்தைக் கடந்து இன்னொரு பருவத்தில் கால் வைக்கிறாளா? நெஞ்சத்து அறையில் அற்ப நம்பிக்கையுடன் எரிந்த தீபம் அணைந்ததுபோல உணர்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் கலங்கிவிடுவன போலத் தவிப்பு.

சிலையாகக் கண்ணாடி முன் நின்றுவிட்டாள், மனோ ரஞ்சிதம்.

காலம் இவ்வளவு விரைவாகவா பறக்கிறது? முந்தா நாள், நேற்று, இன்று, நாளை?

ரேடியோ தன்பாட்டிற்கு எதையோ அறிவிக்கின்றது.

'அக்கா, பொங்கும் பூம்புனல் முடிஞ்சிது, பள்ளிக்கு நேரமாகிவிட்டது.'

அவளின் தங்கை மல்லிகா அறைக்குள் வந்தாள். கண்ணாடி முன் திக்பிரமை பிடித்து நிற்கும் அக்கா.

'அக்கா... பள்ளிக்கு நேரமாகிவிட்டது. இண்டைக்குப் பேச்சு வாங்கப்போகிறாய் மிஸ் கனகசபையிடம்' என்றாள் மல்லிகா மீண்டும்.

விழிப்பு. கண்ணாடிக்குள்ளால் தங்கையைப் பார்த்தாள்.

காஃப் ஸ்கேட் பிளவுஸ். அவளிலும் ஆறுவயது

இளமை. அவளுக்கே வயதாகிவிட்டது.

''என்ன அக்கா?''

''மல்லி... என் தலை உச்சியில் ஒரு நரைமயிர் இருக்குது. பிடுங்கிவிடு.''

தீயை மிதித்தவள் போல மல்லிகா. கண்கள் அளவிலாக் கவலையுடன் நோக்கின.

இரு பெண்களின் கண்களும் கண்ணாடிக்குள் சந்தித் தன. கவலை, ஏக்கம், ஆற்றாமை.

மல்லிகா தமக்கையை நெருங்கி வந்தாள்.

''வேண்டாம் மல்லி, இருக்கட்டும்.''

நெற்றியில் திலகம் இட்டுக்கொண்டாள். கண்களின் கீழ் சுருக்கம் படர்ந்திருக்கிறதா?

''அக்கா உனக்குத் துணிச்சல் இல்லை.''

திரும்பிய கண்கள் மல்லிகாவின் முகத்தில் ஒரு கணம் நிலைத்தன.

மனோரஞ்சிதத்தின் உதடுகள் அளவிலா அர்த்தங் களுடன் பிரிந்தன.

அவள் அறையை விட்டு வெளியில் வந்தாள். ராசதுரை கந்தோருக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி அடுக்களையில் இடியப்பத்துடன். அவன் ஐந்து குழந்தைகளில் இரண்டு முற்றத்தில். மூத்தவன் பாடசாலைக்குப் புறப்பட்டுப் போய்விட்டான். மற்ற இரண்டையும் காணவில்லை.

'மனோ உனக்கு எப்ப சம்பளம் இந்த மாதம்? இருபத்திரண்டிற்கா?'

அவள் தலையைத் திரும்பிப் பார்த்தாள்.

'எனக்கு இம்முறை கொஞ்சக் காசு தேவை. தந்திடு.

அவள் முற்றத்தில் இறங்கினாள். கைகளில் பாடசாலை நூல்கள். அவள் ஆசிரியை. பட்டதாரி.

'உனக்கு எந்த மாதம் தான் காசு தேவைப்படவில்லை? ஒவ்வொரு மாதமும் சம்பளநாளிற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன் உனக்குக் காசு தேவைப்பட்டுவிடும். கடந்த பதின்மூன்று வரியமாகத்தான் தருகிறன்.' மனந்தான். வார்த்தைகள் உள்ளத்திற்குள்.

எல்லாவற்றையும் சொல்லிவிட முடிகிறதா? அண்ணிக்கும் அவள் வயதுதான் இருக்கும்.

சொல்லிவிட முடிகிறதா?

''பள்ளிக்கு வெளிக்கிட்டிட்டியா பிள்ளை. நாளைக்கே சம்பளம்?''

எதிரில் அவளைப் பெற்றவன். அவளில் ஒருவருக்கும் கவலையில்லை.

அவளின் சம்பளத்தில் தான். சம்பளத்தில் தான்.

'இண்டைக்கும் வேலைக்குப் போகவில்லையா ஐயா?

'உடம்பு சுகமில்லை பிள்ளை. அதுதான் போயிட்டு திரும்பி வந்திட்டன். சாதுவாய் தலையைச் சுத்துது '

'அவர் ஏன் வேலைக்குப் போகவேண்டும்! நான்தான் இருக்கிறேனே மாதா மாதம் நூற்றுக்கணக்கில் கொடுக்க?' அவள் என்றைக்கு வேலைக்குப் போகத் தொடங்கினாளோ அன்றையிலிருந்து ஐயா அடிக்கடி வேலைக்குப் போகாமல் வீட்டில் இருக்கத் தொடங்கிவிட்டார்.

வயதாகிவிட்டதாம். கொஞ்சநாளைக்கு 'றெஸ்ற்' எடுக்கப்போறாராம். கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக 'றெஸ்ற்' எடுக்கிறார். அதன் பிறகு தான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு இப்போது பதினொரு வயதில் ஒரு தங்கை இருக்கிறாள்.

அவள் வெளிக்கேற்றைத் திறந்துகொண்டு நடந்தாள்.

'குட்மோர்னிங் ரீச்சர்...'

'குட்மோர்னிங் லதா...'

லதா அவளைப் பார்த்துச் சிரிக்கிறாள். அவள் கற்பிக்கும் பாடசாலையில்தான் லதா படிக்கிறாள். நான்காம் வகுப்பு.

அவள் மனதில் மீண்டும் தலையின் உச்சி வகிட்டில் வெள்ளிக் கம்பியாகத் தலை நீட்டியது மயிர். இயற்கை தன் கடமையைச் சரியாகத்தான் செய்கிறது. மனிதர்கள் தான் கடமைகளை மறந்துவிடுகிறார்கள்.

இயற்கையின் நியதிகள் சில தப்பிவிடுகின்றன. உதாரணம் அவள்.

எல்லாம் சரிவர நடந்திருந்தால், எல்லாரும் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்திருந்தால்... இன்று அவள் இப்படியா இருப்பாள்? முப்பத்தாறு வயதிற்குப் பின்னரும் அவள்—

'மிஸ். சிவராமன்... மிஸ். சிவராமன்...'

ஒழுங்கை முகட்டில் அவள் திரும்பும்போது படலையைத் திறந்தபடி சந்திரா நின்றாள்.

அவள் இடுப்பில் ஒரு வயதுக் கைக்குழந்தை. அவளைப் போலவே சிவப்பு.

'அக்கா...'

'இப்பத்தான் உன்னை நினைத்தேன் சந்திரா...'

'இப்பத்தான் பள்ளிக்குப் போறியளா? லேற்றாகி விட்டது...'

'எல்லாம் தான் லேற்றாகிவிட்டது...' என மனோரஞ்சிதம் முணுமுணுத்துக் கொண்டாள்.

'என்ன அக்கா...'

'கண்ணன் எப்படி?'

'சரியான குழப்படி அக்கா. அவரைப்போலத்தான்.'

மல்லிக்குப் பின்னர் பிறந்த பெண் சந்திரா. புத்திசாலி. சம்பிரதாயங்கள், கட்டுகள் எல்லாவற்றாலும் அவளைக் கட்டிப் போட முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் தூள்... தூள்.

'என் கண்ணில் இனி முழிக்காதை ..'—அண்ணர்.

'இனி நீ எனக்குப் பிள்ளையில்லை...'—ஐயா.

'என்ர பிணத்திலும் முழிக்காதையடி...'—அம்மா

'எங்கடை குடும்பத்திற்கு வசையைத் தேடிவிட்டாள் பாவி, ஆட்டக்காரி...'—அண்ணி.

உடலில் ஒட்டிய தூசுகளைத் தட்டி விடுவதுபோல அலட்சியமாகத் தட்டிவிட்டு அவள் அவன் பின்னால் நடந்தாள்.

'அன்ரிக்கு டாட்டா சொல்லடா...'

கண்ணன் தன் பிஞ்சுக்கரத்தை அசைக்கிறான்.

'டாட்டா... வாறன் சந்திரா'

அவள் கல்லூரிக்குள் காலடி எடுத்து வைக்க மணி அடித்தது. அவள் சுந்தோருக்கு விரைந்து சென்றாள். பிறேயர் ஆரம்பமாகிவிட்டது.

அற்றண்டன்ஸ் றிஜிஸ்ரரில் றெட்லைன் அடிப்பதற்கு ஆயத்தமாகப் பிரின்சிப்பல் மிஸ். கனகசபை நிற்கிறாள். சுந்தோருக்குள் கையெழுத்து இடுவதற்கு நுழைந்த மனோரஞ்சிதத்தைத் தன் தடித்த கண்ணாடிகளூடாக ஊன்றிப் பார்த்தாள் மிஸ் கனகசபை.

'என்ன மிஸ். சிவராமன்... லேற்றாகிவிட்டது?'

அற்றண்டன்ஸ் றிஜிஸ்ரரை அலட்சியமாக அவள் முன் தள்ளிவிட்டாள்.

அவள் எதுவும் பேசாமல் கையெழுத்திட்டுவிட்டு திரும்பும்போது அதிபரின் குரல்.

'மிஸ். சிவராமன்...'

அவள் அதிபரை நிமிர்ந்து பார்த்தாள். முன்நெற்றிக்கு மேல் வாரி இழுத்திருந்த தலைமயிர். நரைக்கம்பிகள்.

மிஸ். கனகசபை அதிபர்.

'தேட்பீரியட் இங்க ஒருக்கா வாரும். உம்முடைய கிளாஸ் வசந்தியைப் பற்றி ஒரு முடிவெடுக்கவேண்டும்.

அவள் திகைப்புடன் பார்த்தாள். அவள் கிளாசில் வசந்தி ஒரு நல்ல மாணவி.

ஸ்ராஃப் ரூமிற்கு வந்தாள். அவளுக்கு முதல் பீரியட் வகுப்பில்லை. ஃபிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேப்பர் பார்த்துக்கொண்டிருந்த கனகம்மா ரீச்சர் அவளைப் பார்த்துச் சிரித்தாள். கழுத்தில் பெரிய வடம் - தாலிக் கொடி. கொண்டையில் மல்லிகைச்சரம்.

'வாரும் மிஸ். சிவராமன்... என்ன பிரின்சிப்பல் இண்டைக்குக் கடுமையாகத் துள்ளுரு? நேற்றைக்கு லாஸ்ற் பீரியட் கொஞ்சம் தலையிடியெண்டு ஒரு வகுப்பிற்குப் போகாமல் விட்டிட்டன். அதுக்கு அவ பெரிதாகத் துள்ளுரு? கொஞ்சமும் மனேசில்லை.

மனோரஞ்சிதம் கனகம்மா ரீச்சரைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

'ஆண்மாரித்தனம்... எப்படி மனேசிருக்கும். கிழடு பத்திட்டுது. கலியாணமா கார்த்திகையா? வடிகாலில்லாமல் பொங்கித் துள்ளுது' என்ற கனகம்மா ரீச்சர் வார்த்தைகளின் நடுவலில் தன் தவற்றை உணர்ந்தவள் போல 'இந்தாரும். பேப்பர் பாரும்' என்றபடி பேப்பரை மனோரஞ்சிதத்தின் முன் தள்ளிவிட்டாள்.

மனோரஞ்சிதம் மௌனமாக வார்த்தைகளை விழுங்கிக் கொண்டாள். இதயம் பொங்குவது முகத்திலா தெரியும்? கல்யாணமா கார்த்திகையா?

அதிபர் மிஸ். கனகசபை எப்போதும் கண்டிப்பு நிறைந்தவள். அக்கல்லூரியில் படித்து ஆசிரியையாக கற்பித்து பின்னர் அக்கல்லூரிக்கே அதிபராக வந்தவள். அவளிற்கு அக்கல்லூரியின் முன்னேற்றம்தான் வாழ்வு, பொழுதுபோக்கு சகலதும்.

அப்படியான ஒரு வாழ்வின் பாதைதான் அவள் முன்னும் விரிந்து கிடக்கின்றதோ?

அவள் வாழ்வின் பாதை பலருக்குடையது போல வளமான பாதையல்ல.

யாழ்ப்பாணத்தின் இன்றைய குமருகளின் தனித்த பாதை கட்டாந்தரைப் பாதை.

வரட்சி, ஏமாற்றம், விரக்தி, அவலம்.

இரண்டாம் பீரியட்டுக்கான மணி ஒலித்தது. அவள் எழுந்து வகுப்பிற்குச் சென்ருள். மாடிப்படிகள் ஏறி வகுப்பிற்குள் நுழைந்தாள். அட்வான்ஸ் லெவல் கிளாஸ்.

'குட்மோர்னிங் ரீச்சர்...' மாணவிகளின் வரவேற்பு வணக்கம்.

'குட்மோர்னிங் சிட் டவுன்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கண்கள் வண்டாக அலைந்தன. மலர்கள். மாணவிகள், ரோஜாக்கள், மல்லிகைகள், செவ்வந்திகள், சூரிய காந்திகள், அவளைக் காணவில்லை.

'வசந்தி வரவில்லையா?'

'இல்லை ரீச்சர்...'

'ஏன்?'— இதென்ன கேள்வி? மாணவிகள் இருந்தாற் போல் வராமல் விடுவது ஒன்றும் அதிசயமல்ல.

ஆனால், அதிபரின் வார்த்தைகள். 'உம்முடன் வசந்தி பற்றி பேசி முடிவெடுக்க...' என்ன முடிவு? பதினைந்து வயது மாணவி பற்றி அவர்கள் என்ன முடிவு எடுக்கப் போகிறார்கள்?

''இன்றைக்கு ரியுற்றோறியல் வகுப்பு ரீச்சர். கவண்மென்றில் கேள்வி தாறன் என்றனீங்கள் ரீச்சர்.''

''சரி கேள்வியை எழுதுங்கள்...''

அவளுக்கு இப்போது தேவை ஓய்வு. தனிமை, நிம்மதி, மாணவிகள் எழுதத் தொடங்கிவிட்டார்கள், மேல்வகுப்பு. பிரச்சினையில்லை.

அவள் தலையை நிமிர்த்திப் பார்த்தாள். அவள் முன் இருபது மாணவிகள். துயரின் கருந் ரேகைகள் படராத முகங்கள். படிக்கிறார்கள். நாளை...? இந்த வாழ்க்கையின் கடும் துயரங்கள், சீதனம்... பணம்... கலியாணம்... ஏக்கங்கள்... பெருமூச்சுகள்...

தலையை உயர்த்திய சுமதி, ரீச்சர் வைத்த கண் வாங்காமல் தங்களைப் பார்ப்பதைக் கண்டாள். சிரித்தாள். பதில் சிரிப்பு.

''ரீச்சர், சுபத்திரா யூனிவேசிற்றிக்கு எடுபட்டிட்டிட்டாவாம்... அன் ஒபிசலாகத் தெரியுமாம்.''

சுபத்திரா கடந்த ஆண்டு அவள் மாணவி. அட்வான்ஸ்லெவல் பரீட்சைஎடுத்துவிட்டுப் பரீட்சைப் பெறுபேற்றிற்காகக் காத்திருக்கும் மாணவிகளில் ஒருத்தி.

யூனிவேசிற்றி... பல்கலைக்கழகம்...?

பட்டாம்பூச்சிகள். எவ்வளவு இனிமையான வேளைகள். நினைவுகள் மலர்ந்தன.

''மனோ ..'' ரவிந்திரன். அவளுடன் கல்வி கற்கும் மாணவன். பட்டதாரி மாணவன். அவன் அவள் பெயரை உச்சரிக்கும் வாத்சல்யம், ''மனோ .. மனோ ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பீரமான வாலிபன். ஏழ்மையின் சுவடுகள் படியாத வளர்ச்சி. அவர்கள் இருவருக்கும் ஒருவரில் ஒருவருக்கு பிடிப்பு ஏற்பட்ட சம்பவம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

லைப்ரரி படிக்கட்டு. படிகள் வளைந்து வளைந்து மேலேறும். அவள் நான்காம் மாடிக்கு ஏறிச் செல்கிறாள். பின்னால் மாணவர்கள் இருவர். தன் பின் மாணவர்கள் ஏறி வருகிறார்கள் என்ற எண்ணம். தயக்கம். கால்களைத் தூக்கி வைத்து ஏற முடியவில்லை. அதே வேளை சேலை காலை இடற அவள் ''ஐயோ'' என்றலறியபடி பின்னால் சரிந்தாள். கண்களைத் திறந்தபோது அந்தக் கம்பீரமான வாலிபனின் கரங்களில் அவள். அவன் அவள் விழுந்துவிடாமல் அணைத்துப் பிடித்திருந்தான்.

அவள் தன்னை வெட்கத்துடன் விடுவித்துக்கொண்டாள்.

''சொரி ''—அவள் உதடுகள் பிரிந்தன.

''பரவாயில்லை மிஸ். மனோ. நீங்கள் நல்லா விழுங்கோ. இற் இஸ் ஏ பிளசர்...''

கண்களில் வியப்பு. பின்னர் வெட்கம். அவள் 'தாங்ஸ்' என்றபடி படிகளில் தாவி ஏறி மறைந்தாள்.

"கவனம் கவனம்'' என்று சிரித்தான் ரவீந்திரன்.

காலம் கரைய, பிணைப்பு இறுக்கம்.

கங்கை பொங்கிப் பிரவாகித்து ஓடியது. மகாவலி கங்கைக் கரையோரம்.

பல்கலைக்கழக வளாக மரங்கள் மலர்களைச் சிந்தின. பல வர்ணங்கள். இலைகளற்ற மலர்கள். சிரிக்கும் மரங்கள். மெல்லிய காற்றின் அசைப்பில் அவை சொரிந்தன மலர்களாய்.

''மனோ......''

மலர்கள் மட்டும் தாம் சொரிந்தனவா? காவிய வாழ்வின் ஏடுகளும் எதிர்காலக் கனவுகளின் கற்பனைகளும் சொரிந்தன.

''மனோ......''

கங்கையின் சலசலப்பு எழுந்தது. மூங்கில் மரங்கள் காற்றில் அசைப்புற்று ஆடின.

அவன் அவள் காதுகளில் குனிந்து ''மனோ.. '' என்றான்.

இறகுகள் எப்படி முளைத்தன? வானத்தில் பறப்பது நினைவுகளா, அவளா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மனோ... மனோ... மனோ... ஓ... மனோ...'' ரவியின் குரல் அவள் காதுகளில் படிப்படியாக... சத்தம் வளர்ந்து... வளர்ந்து...

அவள் தன் நெற்றியை அழுத்திக்கொண்டாள். நீண்டதொரு பெருமூச்சு.

இரண்டாம் பீரியட் முடிந்ததற்கறிகுறியாக கல்லூரி மணி ஒலித்தது.

ஒன்றின் முடிவில் இன்னொன்றின் ஆரம்பம்.

''தேர்ட் பீரியட் ஒருக்கா ஒபீசிற்கு வாரும்......'' அதிபர் அழைப்பு.

மனோரஞ்சிதம் அதிபரின் அறை நோக்கி நடந்தாள்.

● ●



அதிபரின் அறையிலிருந்து மனோரஞ்சிதம் வெளியில் வந்தாள். அவள் உள்ளத்தில் குமைச்சல். அதிபரின் முடிவு சரியானதுதானா? மிஸ் கனகசபை அவசரப்பட்டு முடிவு எடுத்து விட்டதாக அவளுக்குப் பட்டது.

''இந்தக் கல்லூரியில் ஒழுக்கம்தான் முக்கியம். டிசிப்பிளின் பெண்கள் கல்லூரியில் உயிர்போல, மிஸ் சிவராமன். இரண்டாயிரம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை என்னை நம்பித் தான் இக்கல்லூரிக்கு அனுப்புகிறார்கள். அதனால் ஒரு சிறிய அளவிற்கூட ஒழுக்கம் இங்கு கெடக்கூடாது. அதனால் வசந்தியை கல்லூரியைவிட்டு டிஸ்மிஸ் செய்வதைத்தவிர வேறு வழியில்லை...''

அவள் திகைத்துப் போனாள். அதிபரின் முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டது. பின் ஏன் அவளை அழைத்து ஆலோசிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீர் உயர்வகுப்பு ஒன்றிற்கு வகுப்பாசிரியை. உம் வகுப்பில் படிக்கிற ஒரு ஸ்ருடன்ற் அதுவும் கல்லூரி போடிங்கில் இருக்கும் மாணவி ஒருத்தி ஒரு இளைஞனுக்கு லவ் லெற்றர் எழுதுகிறதை என்னால் மன்னிக்க முடியவில்லை. இந்தா பாரும் லெற்றரை வசந்தி எழுதி டேஸ்கொலர் மாணவி ஒருத்தியிடம் போஸ்ற் பண்ணக் கொடுத்திருக்கிறாள். தானும் கெட்டது போதாதென்று இன்னொரு மாணவியையும் பழுதாக்குவது மன்னிக்கமுடியாதது .''

மனோரஞ்சிதத்தின் முன் மிஸ். கனகசபை கவர் ஒன்றைத் தூக்கிப் போட்டாள். அவள் அதை எடுக்கவில்லை.

''வசந்தியை அழைத்து ஒரு தடவை எச்சரித்துவிடக் கூடாதா?'' அவள் மிகவும் அமைதியாகவும் மென்மையாகவும் தான் வார்த்தைகளைக் கொட்டினாள்.

அதிபர் எரிமலை,

''உம்மைத்தான் எச்சரிக்க வேண்டும். நீர் ஒரு உயர் வகுப்பிற்கு வகுப்பாசிரியராக இருக்கவே தகுதியற்றவர். உம் வகுப்பில் இப்படி நடக்க...''

மனோரஞ்சிதம் மெதுவாக பொறுமையை இழக்கத் தொடங்கினாள்.

''மிஸ் நீங்கள் சொல்வதைப் பார்த்தால் ஒவ்வொரு மாணவியின் கொப்பிகளையும், பெட்டிகளையும், மனங்களையும் சோதிக்கச் சொல்வீர்கள் போலிருக்கிறது. அவர்கள் என்ன செய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள்... படிப்பிக்காமல் வேவு பார்க்கச் சொல்கிறியள் போல இருக்குது .''

முகம் செவ்வானச் சிவப்பாக அதிபர் அவளைக் கோபத்துடன் பார்த்தார்.

''நீரே மாணவிகளுக்குச் சொல்லிக் கொடுப்பீர்போல் இருக்குது?''

''மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டியவை எவை என்பது ஒரு பட்டதாரி ஆசிரியைக்குத் தெரியாமல் இருக்காது மிஸ்.''

''மிஸ் சிவராமன்...'' பெரிதாக அதிபர் கத்தினார். ''வசந்தி காதல் கடிதம் எழுதியது சரி. நான்தான் அதைப் பிழை என்று... அப்படிச் சொல்கிறீரா?''

அதிபர் பொறுமையிழப்பதை மனோரஞ்சிதம் கண்டாள். இது முதல்முறையல்ல. சுடுமூஞ்சி. கோபம் எப்போதும் மூக்கில். கல்லூரியில் எல்லா ஆசிரியைகளுடனும் நல்ல உறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிப்பார்ட்மென்ட் செல்வாக்கு அதிகம். டி. ஈ. தூரத்து வழியில் உறவினர்.

மனோ மௌனமாக இருந்தாள். அதிபர் கண்ணாடியைக் கழற்றித் துடைத்து மீண்டும் மாட்டிக்கொண்டார்.

"இது பிழையா பிழையில்லையா?" தன் முடிவிற்கு ஒரு சான்று வேண்டும் என்பதுபோல் அக் கேள்வி.

"சரியோ பிழையோ எனக்குத் தெரியவில்லை மிஸ். ஆனால் மன்னிக்க முடியாத ஒரு பெரிய பிழையை வசந்தி செய்து விடவில்லை. இந்த வயதில் இப்படி விபத்துக்கள்... உணர்வுகள் வரத்தான் செய்யும். கூப்பிட்டு எச்சரித்து விடுவது நல்லது. ஒரு தடவை மன்னிப்பளியுங்கள் மிஸ்! வசந்தி கெட்டிக்கார மாணவி. ஒழுங்கான பெண். இதில் எப்படிச் சிக்கிக்கொண்டதோ தெரியவில்லை. இதைப் பெரிதாக்கி வெளியில் பரவவிடுவது கல்லூரிக்கே அவமானம்."

"கல்லூரியைப் பற்றி நீர் கவலைப்பட வேண்டாம்."— முரண்பாடுகள்.

அவள் எழுந்திருந்தாள். வெளியில் வந்தாள்.

பாவம் வசந்தி, அநியாயமாக ஒரு மாணவியின் கல்வி இடைநடுவில் நின்றுவிடப் போகின்றது. காதலிக்கிறதிற்கு வய திருக்கிறது. காலமிருக்கிறது.

வயது... காலம்...

அவளும் இக்கல்லூரியின் மாணவியாகத்தான் இருந் தாள்.

அவளுக்கு அப்போது பதினாறு வயது. எஸ். எஸ். சி. சித்தியடைந்துவிட்டு அட்வான்ஸ்லெவல் வகுப்பில் முதலாண்டு. அவள் பணக்காரக் குடும்பப் பெண் அல்லள். மத்தியரக வர்க்கம். தகப்பன் சுருட்டுத் தொழிலாளி. அண்ணன் அன்சேற்றிபிக்கேற் ஆசிரியன். வருமானம் அவ்வளவுதான்.

அவளிடமிருந்த வெள்ளை யூனிபோம்கள் இரண்டே இரண்டு. அவற்றை ஒவ்வொரு நாளும் நீலம்போட்டு துவைத்து கசங்காமல் மினுக்கி அணிந்துகொள்வாள். இரட்டைப் பின்னல். ஒற்றைப் பின்னலுக்குள் அவள் கூந்தல் அடங்கிவிடாது. அடர்த்தியும் நீளமும் அப்படி. சுண்டிவிட்டால் கண்டிவிடும் நிறம். மெலிந்துயர்ந்த வடிவம். அழகி.

அவள் கல்லூரிக்கு செல்கின்ற வேளைகளில் பல இளை ஞர்கள் அவளைத் தொடர்வார்கள். அவளை விழுங்கிக் கக்கிவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது போலப் பார்ப்பார்கள். ஆரம்பத்தில் அவள் அவர்கள் தொடர்வதைக் கவனிக்கவில்லை. கவனித்தபோது—

அந்த இளைஞன் சிரித்தான். அவனும் ஒரு கல்லூரி மாணவனாகத்தான் இருக்கவேண்டும்.

சைக்கிளில் அடிக்கடி அவளின் எதிரில் வந்தான்.

அவள் அவனைச் சட்டை செய்யவில்லை.

அவன் ஓராண்டாகத் தொடர்ந்தான். சில காலைகளில் அவன் எதிர்ப்படாமல் இருந்தான். அவ்வேளைகளில் மனோரஞ்சிதத்திற்கு ஏமாற்றமாக இருக்கும். ஏன் என்பது அவளுக்கே புரியவில்லை.

ஒரு நாள் அவள் பின்னேரம் கல்லூரி முடிந்து வந்து கொண்டிருந்தாள். ஒழுங்கை. வழக்கம்போலச் சன நடமாட்டம் இருக்கும் அந்த ஒழுங்கை. அன்று எவரும் எதிர்ப்படவில்லை.

அவள் அருகில் ஒரு சைக்கிள் மெதுவாக வந்தது. அவள் நடக்க... சைக்கிளும் அருகில்.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

அவன்—

அவள் பார்த்ததும் அவனிற்கு முகமெல்லாம் வியர்த்து விட்டது.

''மிஸ்.'' என்றபடி அவன் சேட் பொக்கற்றிலிருந்து ஒரு கவரை எடுத்து அவளிடம் அவசரத்துடன் நீட்டினான். புதுப்பழக்கம். கரம் நடுங்குவது தெரிந்தது.

''என்ன?'' என்றபடி அவள் கோபத்துடன் அவனைப் பார்த்தாள்.

''கடிதம்... ஐ லவ் யூ...''— தமிழில் சொல்ல முடியாதவற்றை ஆங்கிலம் தயக்கமின்றிச் சொல்லவைக்கிறது.

அவள் திகைத்துப் போனாள். ''லவ்?'' அவளிற்குப் பயம் பற்றிக் கொண்டது.

முகத்தில் பயத்துடன் கலவையாகக் கோபம். அவள் கண்களில் தெறித்த கோபத்தின் தாக்கம் அவனைப் பின்வாங்க வைத்தது.

''மன்னிச்சுக்கொள்ளும்'' என்றபடி அவன் வேகமாக சைக்கிளில் விரைந்தான்.

அவள் இதயத்தில் ஏதோ சுரீரெனத் தைத்தது. அந்த வயதில் கூட அவன் தவறு செய்தான் என அவளால் நினைக்க முடியவில்லை. அவள் அண்ணன் ராசதுரை கூட யாரோ ஒருத்திக்குக் கடிதம் கொடுக்கிறான் என்று கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் பெண் என்றிருக்கும்வரை இப்படி நடக்கத்தான் செய்யும்.

இயற்கையின் பிடியில் இருந்து எவரும் தப்ப முடியாது. மழையிலிருந்து தப்ப வீட்டிற்குள் நுழைந்து கொள்ளலாம். மழையை இல்லாமல் செய்யமுடியாது. எல்லாம் ஒரு அளவிற்குத்தான். பாலியலும் அப்படித்தான். பருவம் வந்ததும் கவர்ச்சிகள் ஏற்படத்தான் செய்யும். சம்பிரதாயங்கள், உறவுகள் என்பன தற்காலிகத் தடைகள் தான். மழைக்கு வீடு போல. மனதிற்குத் தடையா?

சந்திராவை இத்தடைகள் என்ன செய்தன? அவளிடம் தோல்வி.

அச்சம்பவத்திற்குப் பின்னர் அவள் அவனைச் சந்திக்கவில்லை. அவள் பாதையில் அவன் எதிர்ப்படவேயில்லை. பேபெக்ற் ஜென்ரில்மன்.

பருவ வயதின் விபத்துக்கள். வசந்தி விதிவிலக்காக முடியாது.

மிஸ். கனகசபைக்குக் காதல் என்ருல் கசப்பு. தனக்கு அமையாத ஒன்று. கிட்டாத ஒன்று என்றதால் ஏற்பட்ட தாழ்வுச் சிக்கலா? அதனுல் ஏற்பட்ட பொறுமையா?

எதுவாகவிருந்தாலும் அதிபரின் முடிவு வசந்தியைப் பொறுத்தளவில் தப்பு.

அவள் ஆசிரியைகள் தங்கும் ஸ்ராஃப் ரூமிற்கு வந்தாள். கனகம்மா ரீச்சர் இப்போதும் பேப்பர் படித்தபடி அங்குதான் இருந்தாள், மிஸ். சின்னராசா ரீச்சரும் இருந்தாள். மிஸ். சின்னராசா மற்ஸ் ரீச்சர். ஸ்பெஷல் றெயின்ட்.

"ஹலே, மனே வாரும்... வாங்கீக் கட்டிக்கொண்டு வாறீர் போல இருக்குது?"

"உமக்கெப்படித் தெரியும் சித்திரா?"

சித்திரா சின்னராசா சிரித்தாள்.

"நீரும் விடாமல் அதிபருக்குக் கொடுத்தீர். ஆட்ஸ் கிராட்யூவேட்டும் இப்படிக் கதைப்பினம் என்று எனக்கு இப்பத்தான் அப்பா தெரியிது?"

எத்தனை வேறுபாடுகள்? சித்திராவிற்குத் தலைக்கனம். தலைக்கனமா?? தான் ஒரு கிராட்யூவேற்ருகவில்லை என்ற ஆற்ருமையா?

மனேரஞ்சிதம் புன்னகைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்களுக்குத்தான் கதைக்கத் தெரியுமோ?''

''நான் அதைச் சொல்லவில்லை மனோ. சும்மா கேட்டேன். பக்கத்து அறையில் ரைப்பிஸ்ற் சரசுடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்ப உம் குரல் கேட்டது. அதுதான். சின்ன விசயத்தை பிரின்சிப்பல் பெரிசாக்குகிறார். எண்டாலும் நீர் அப்படிக் கதைத்திருக்கக் கூடாது மனோ. மனிசி கெதியில் உம்மை ருன்ஸ்பர் பண்ணி தண்ணியில்லாக் காட்டிற்கு அனுப்பிவிடும்.''

கடைசி வார்த்தைகள் இதயத்தில் தைத்தன. அப்படியும் நடக்குமா?

அவள் சிந்தனையின் தடத்தை கனகம்மா ரீச்சர் கலைத்தாள்.

''என்ன மிஸ். சின்னராசா, ஒரு நல்ல விசயம் கேள்விப்பட்டன்...''

''அதுவும் வழக்கம்போலத்தான் ரீச்சர்.'' சித்திராவின் வார்த்தைகளில் ஏக்கம். சோகத்தின் பெருமூச்சுக்கள்.

''என்னப்பா, நல்லா உழைச்சு வைச்சிருக்கிறீர். பத்து வருட சேவிஸ். நியாயமாய் இருக்கும். அவ்வளவு சீதனம் இருந்துமா?''

சித்திரா சிரித்தாள். அச்சிரிப்பினுள் யாழ்ப்பாணப் பெண்களின் விரக்தி.

''சீதனம் மட்டும் போதுமா ரீச்சர். கொஞ்சம் சிவப்பா கண்ணுக்குக் கலர் புல்லா...''

''மனோ திரும்பிப் பார்த்தாள். அழகா இருந்தால் மட்டும் இந்த வெட்கம் கெட்ட இளைஞர்கள் ஓடி வந்து கொத்திக் கொண்டா போகப்போகிறார்கள்? சீதனம் .. சீதனம் . டொனேசன்... எத்தனை குமருகள் இருளுக்குள்? எவ்வளவு ஏக்கப் பெருமூச்சுக்கள், காற்றுடன்?

● ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலட்சியம், புரட்சி. சமூகத்தின் இந்த அவலத்தைப் புரட்டிவிடத் தெரியாத கையாலாகாத இளைஞர்களால் இந்த நாடா உருப்படப்போகிறது?

''என்ன சம்பிராதயங்கள்... எங்கட சமூகத்தில் ஏதோ குறையிருக்குது'' என்றபடி மிஸிஸ் சற்குணம் அறைக்குள் வந்தாள்.

சம்பிரதாயங்கள்... ஊர் உலகம்.

பல்கலைக்கழகத்தில் அவள் அறை நண்பியாக ராஜி இருந்தாள். அவள் ஒரு அற்புதமான பெண். எதையும் ஒரு பிரச்சினையாக எடுக்கத் தெரியாதவள்.

அவள் பல்கலைக்கழகத்திற்கு வந்த ஆறுமாதங்களுக் குள்ளேயே ஒரு இளைஞனின் நட்பு. காதலாகப் பரிணமித்தது. அப்பிடித்தான் எல்லோரும் நம்பினுர்கள்.

ராஜி தன் காதலனுடன் கழித்த நேரங்களைக் கதை கதையாக அன்றிரவு மனோவிற்குச் சொல்வாள். எல்லாம் அள விற்கு மீறிய பழக்கங்கள்.

''அவனைத்தான் கலியாணம் செய்துகொள்ளப் போறியா, ராஜி...''

''அப்படி நம்பிக்கொள்வோம் ''

''ராஜி...''

''பயித்தியக்காரியாக இருக்கிறுயே, மனோ? எனக்கு முதல் பிறந்த பாவிப் பெண்கள் இரண்டுபேர் இன்னமும் குமராகக் கிழடுபத்தி மூலையில் இருக்கிருர்கள். அவர்களுக்கு வருடாவருடம் வயது ஏறிக்கொண்டு போகிறது. அவர்களைக் கரைசேர்க்க ஐயா விடம் சீதனமில்லை. பணமில்லாவிட்டால்..? நான் பேசரியில் படிக்கிறேன். நான் இன்னமும் மூன்றுண்டு படித்து, பாஸ் பண்ணி, உத்தியோகமாகி, வேலைபார்த்து, உழைத்துச் சேமித்துத் தான் இருளில் கிடக்கின்ற என் அக்காமாரை வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும். அதற்குப் பிறகுதான் எனக்கு...'' எத்தனை ஆண்டுகள் தேவை இதற்கு?... என்ன சமூகம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்திற்கு விலை மதிக்கிற உலகம். எல்லாவற்றிற்கும் பணம். என் அக்காமாரைப்போல எத்தனை பெண்களின் இளமையும் இன்பக் கனவுகளும் சிதைந்து உருமாறிக்கொண்டிருக்கின்றன உனக்குத் தெரியுமா?

"அதுக்காக..."

"நான் இச்சமூகத்தைப் பழிவாங்கப் போகிறேன். இந்தச் சமூகம் சொல்கிற சம்பிரதாயங்களை உடைக்கப்போகிறேன், மனோ. சந்தர்ப்பம் கிடைக்கும்போது நான் வாழப்போகிறேன், மனோ. சம்பிரதாயச் சிறைக்குள் அடக்கப்பட்டு முடங்கிக் கிடக்கின்ற என் அக்காமாருக்கு வாழ்வளிக்க முயற்சிக்கின்ற அதேவேளை என் இளமையை அவமாக்க நான் தயாராகவில்லை..."

புரியாத புதிர் ராஜி. சமூகத்தை யார் பழி வாங்குவது?

அவள் கூறிய புதிர் மனோவிற்கு ஓரிரவு புரிந்தது.

ராஜி படுக்கைக்குப் போகுமுன்னர் ஒரு பில்சை விழுங்கினாள்.

"ராஜி, இதென்னடி இது... கலியாணமானவை..."

அவள் சிரித்தாள். சிரிப்பில் பல அர்த்தங்கள்.

"அவரும் என்னைப்போலத்தான், அவரை நம்பி வீட்டில் இரண்டு அக்காமாரும், ஒரு தங்கையும் காத்திருக்கிறார்கள். சீதனப் பேயும் காத்திருக்கிறது...... வீ ஆர் ஜஸ்ற் பிரண்ட்ஸ்... இங்க இருக்கும் வரை வாழ்வோம். வெளியில் போனதும் அவர் யாரோ, நான் யாரோ, எங்கள் முன் கிடக்கும் கடமைகள் முடிய நானும் கிழவியாகி விடுவேன், அவரும் கிழவனாகிவிடுவார்.."

ராஜி செல்கிற பாதை சரிதானா? சரி பிழை சொல்ல எவரால் முடியும்! மனோரஞ்சிதத்திற்கு எதுவும் புரியவில்லை.

ராஜி இன்று கிராமத்தில் படிப்பிக்கிறாள். உழைக்கிறாள். அவளுடைய அக்காமாரும் இன்னமும் வீட்டில்தான் இருக்கிறார்கள். பழைய இருளில். உணவு ஒழுங்காகக் கிடைக்கிறது.

வாழ்வு, உணவு மட்டுந்தானா?

"ஊர் உலகம் இது தெரிந்தால் என்னடி ராஜி சொல்லும்?" என்று அவள் ஒருநாள் கேட்டாள்.

அவள் தூக்கி எறிவது போலச் சிரித்தாள்.

"ஊரும் உலகமும்தான். ஹூ கெயர்ஸ்? கொழுத்த சீதனத்திற்காக ஆண்களை வளர்க்கிற சீதனப் பேய்கள் நிறைஞ்ச உலகம். பெத்து வளர்த்து சாப்பாடு போட்டு படிப்பித்து உத்தியோகமாக்கிவிட்டுவிட்டு ஒவ்வொன்றுக்கும் பிறந்ததிலிருந்து கலியாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை கணக்குப்பார்த்து பெண்களிடம் வாங்கிவிடப் பார்க்கிற பிசாசுகள் நிறைந்த ஊர். என் அக்காமார் மாதிரி எத்தனை பேர்? அவர்களுக்கு இந்த ஊரும் உலகமும் என்னடி செய்து விட்டது? ஒரு அக்காவிற்கு முப்பது வயது. மற்றக்காவிற்கு இருபத்தெட்டு?... அவர்களுக்கு நல்லதொரு வாழ்வை அளிக்க முடியாத இந்த உலகத்தால்... ஆடு கத்தினால்கூட பருவத்திற்கு அழைத்துச் செல்கிற இந்தச் சமூகம்... சீச்சீ... கிழடாகிற குமருகளைப்பற்றி...? அவர்களின் இயல்பான உணர்வுகளைப்பற்றிக் கொஞ்சமாவது சிந்திக்கிறதா?''

''காலம் மாறும் ராஜி''

''எப்ப? சும்மா போ மனோ!''

''விழிப்புணர்வுள்ள இளைஞர்கள்... முற்போக்கு உணர்வுள்ள இளைஞர்கள் உருவாகி வருகிறார்கள்...''!

''உலகம் தெரியாதவளே? பேசுவது முற்போக்கு... வாங்குவது பணக்கட்டுகள். உபதேசம் உலகத்திற்குத்தான். எனக்கல்ல... இந்த இளைஞர்களைப் பற்றியா சொல்கிறாய்? சும்மா ஒருத்தி வருவாள் என்றால் பின்னால் திரிவார்கள்... கல்யாணம் செய்கிறியா என்றால் கம்பிநீட்டி விடுவார்கள். முதுகெலும்பில்லாத இளைஞர்கள் .. ஏதோ உலகத்தை வெட்டிப் புரட்டப் போகிறார்களாம். அவயளுக்கு ஒரு லோங்சும்... சேட்டும்... அதுகளையும் கழற்றிவிட்டு வீதியில் விலைகூறித் திரியட்டுமே. வெட்கம் கெட்டவர்கள்.''

பொரிந்து தள்ளினாள் ராஜி. அவள் குடும்பம் பாதிக்கப்பட்டது. பாதிப்பின் அவலம்.

''நீ என்னடி கதைக்கிறாய்... ராஜி.''

''இன்னும் இதைப்பற்றிக் கதைப்பன். இருந்து பார்... என் ஆத்திரம் தீருமட்டும் கத்துவன். இந்த வெட்கம் கெட்டவர்கள் திருந்தும்வரை கத்துவன். என் அக்காமார் போல இருக்கிற பெண்கள் கரைசேருகிறவரை கத்துவன்...''

மனோரஞ்சிதம் தலையை அழுத்திக் கொண்டாள்.

கல்லூரி மணி ஒலித்தது. அவள் வகுப்பிற்குச் செல்ல எழுந்தாள்.

இரவு சாப்பாட்டு நேரம்.

எல்லாரும் சாப்பிட்ட பின்னர்தான் மனோ சாப்பிடச் செல்வாள். இல்லாவிடில் எல்லாரும் சாப்பிடுவதற்கு முன்னர் செல்வாள். சிறிய குசினிக்குள் சாப்பாட்டுக் கோப்பைகள் முன் பெரிதும் சிறிதுமாக மொய்த்திருப்பது அவளுக்கு விருப்பல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமை. தனிமை!

''உவள் சந்திரா இப்ப சாப்பாட்டிற்கு வலு கஷ்டப்படுகிறுளாம்'' என்ருள் அம்மா.

''அவள் சாப்பாட்டிற்குக் கஷ்டப்பட்டாலும் சந்தோஷமாக வாழ்கிருள்.''

வார்த்தைகள் சற்றுப் பலமாக வெளிவந்தன.

அம்மா ஒரு ஜடம். சொல்வதும் புரியாது. சொன்னுலும் புரியாது. நடிப்போ?

''அவன் என்ன பெரிய உத்தியோகமோ? கடையில் நிற்கிறவன். அவனேடை நம்பி ஓடி... அவள் அனுபவிக்கத்தான் வேணும் ..''

''நீ சும்மா கத்தாதையணை. அவள் அவனேடை ஓடினதில் என்ன பிழை? அவனை நம்பி அவள் ஓடினுள்? உங்களை நம்பியிருந்தால்......? இருக்கிறவைக்கே வழியைக் காணவில்லை. அவள் நல்லாத்தான் இருக்கிருள். பிள்ளையோடை! பெரிசாக் கதைக்க வந்திட்டியள்!''

அம்மா சீறினுள்.

''உனக்கு நல்லா வாய் கொழுத்துப் போச்சுது. உன்ரை உழைப்பிலை சாப்பிடுகிறம் பார். நீ அப்படித்தான் சொல்லுவாய்.''

கண்ணீர். மூக்குச் சிந்துதல். சேலைத் தலைப்பால் துடைப்பு!

அவள் கோபத்துடன் சாப்பாட்டுக் கோப்பையை அரக்கிவிட்டு எழுந்திருந்தாள்.

''அழுகை மட்டும் உனக்கு உடனை வந்திடும். சரிவரக் கடமைகள் செய்யத் தெரியாதவை ஏன் பெறவேண்டும்...?''

மனேவின் உள் எரிச்சல். வார்த்தைகள் கொட்டின. அம்மா பெரிதாகச் சத்தமிட்டாள்.

''ஓமடி ஓமடி... உன்னைக் கேட்டுக்கொண்டுதான் இனி நானும் உன்ர கொப்பனும் கிடக்க வேணும். வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி உன்னைப் படிப்பிச்சுவிட நீ இப்ப இப்படிக் கேக்கிருய். உனக்கு அமரடி ..''

அவள் வேகமாக வெளியேறினுள். தன் அறைக்குள் புகுந்துகொண்டாள்.

''அவளுக்குக் கலியாண விசர்...'' என்று அண்ணனிடம் அண்ணி முணுமுணுத்தாள். அண்ணிக்கு ஐந்து பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற அலுப்பு. அண்ணி ஏதோ சொல்வது அவளுக்குக் கேட்டது. என்னவென்று புரியவில்லை.

மனோ படுக்கையில் விழுந்தாள். கண்கள் வெறித்தன! 'ராஜி, நீ...

சுயநலத்தின் வடிவங்கள். அவள் பூமிக்கு வந்ததே இருவரின் சுயநலத்தால்.

தவம் இருந்து பெற்றார்கள். பெரிதாகத் தவம் இருந்து பெற்றார்கள்.

தவிர்க்க முடியாத தவிப்பின் எச்சம். பிரிக்க முடியாத உறவின் விளைவு.

பெரிதாகத் தவம் இருந்து பெற்றுவிட்டார்கள். தவத்தின் விளைவா? தவிப்பின் விளைவா?

மனோ கண்களை மெதுவாக மூடிக்கொண்டாள். கண்களுள் நினைவுகளின் உருவங்கள். கடந்தகாலம் எவ்வளவு இனிமையானது. கம்பீரமான அந்த இளைஞன். ரவீந்திரன்.

"மனோ ."

காற்றில் பூஞ்செடிகள் அலையெறிந்து தவிக்கின்றன. கங்கையின் மீது இடப்பட்டிருக்கும் தொங்கு பாலத்தில் இருவர் நடந்து வருகிறார்கள். மனோ—ரவி. கீழே மகாவலிகங்கை சலசலத்து ஓடுகிறது. வெண்மணலில் கவரக்கொய்யா ஒன்று ஊர்ந்து சென்று மூங்கில் பற்றைகளுள் நுழைகின்றது.

"மனோ"

"ம்......"

ஆற்றுப் பள்ளத்தாக்கில் வேகமாக இறங்கிய காற்றுத் திணிவொன்று தொங்கு பாலத்தைப் பயங்கரமாக அசைத்தது.

"ஐயோ" என்றாள் அவள். தொங்குபாலம் தொட்டிலாக ஆடியது.

ரவீந்திரன் அவளை அணைத்தபடி சிரித்தான்.

"உண்மையாகப் பயந்தே போய்விட்டேன். நல்ல காலம்..."

"இதுக்கே இப்படிப் பயந்திட்டாய்.. வாழ்க்கையில் இன்னமும் எத்தனை இருக்கிறது. அதுக்கெல்லாம்..."

"எனக்கென்ன? நீங்கள் இருக்கிறியள்."

அவள் அன்று முழு நம்பிக்கையுடனும் எதிர்காலக் கனவுகளுடனும் தான் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்கொரு பொறுப்பும் வீட்டில் இல்லை மனோ. கடைசிவருடப் பரீட்சை முடிந்ததும் கலியாணம்தான். உன் வீட்டிற்கு நானே முதலில் வருவேன்.''

''நீங்கள் வரவேண்டாம். பெரியாக்களை அனுப்புங்கோ பெண் கேட்டு...''

தலை வெட்கத்துடன் குனிந்துகொண்டது. அவன் அவள் கரத்துடன் தன் கரத்தைக் கோர்த்துக் கொண்டான். நம்பிக்கைகள், கனவுகள் விரிந்தன.

மாலை வேளைகள் பல்கலைக்கழகத்தில் இனிமையாகக் கழிந்தன. வாழ்வின் இனிய காலம். வாழ்வு இவ்வளவு இனிமையானதா?

ராஜிபோல அவளில்லை. ராஜியின் 'போய் பிரண்ட்' போல அவனுமில்லை.

''காதல் புனிதமாக இருக்க வேண்டும். நம் சமூகம் சில சம்பிரதாயங்களை வகுத்து வைத்திருக்கிறது மனோ. அவை ஒருபோதும் பிழையாக இருக்காது. எல்லாம் நமது நன்மைக்காக அனுபவ வாயிலாகக் கண்ட உண்மைகள். கலியாணத்திற்குப் பின்னர் தான்... அந்தத்திரியில் இருக்கவேண்டும். அதற்கு முதல் கூடாது...'!

அவள் காதல் இன்றும் — பன்னிரண்டாண்டுகளுக்குப் பின்னரும் புனிதமாகத்தான் இருக்கிறது.

ஆனல்... ஆனல்...

மல்லிகா அறைக்குள் வந்தாள்.

அக்கா மோனத்தில். அக்காவின் மௌனத்தைக் குலைக்க அவள் விரும்பவில்லை.

மெதுவாகச் சென்று அக்காவின் மேசை முன் கிடந்த கதிரையில் அமர்ந்துகொண்டாள். மேசையில் அலங்கோலமாகச் சிதறிக்கிடந்த புத்தகம், கொப்பிகளை எடுத்து ஒழுங்காக அடுக்கி வைத்தாள்.

அறைக்குள் எவரோ நுழைந்தது மனோரஞ்சிதத்திற்குத் தெரிந்தது. கண்களைத் திறக்காமல் அவள் அப்படியே படுத்திருந்தாள்.

வெகு நேரத்தின் பின்னர் கண்களைத் திறந்தாள். எதிரில் மல்லிகா.

''அக்கா நித்திரையெண்டு நினைச்சன் ''

சிரிப்பு.

''அக்கா, ஏன் நீ சாப்பிடாமல் எழும்பி வந்திட்டாய் . அம்மா அண்ணருடன் கத்துகிறு.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னவாம்...?''

''வழக்கம்போலத்தான்''

''உடனே ஒரு கலியாணத்தைப் பேசச் சொல்லும்படி அம்மா கூறுவா. அவளை இப்ப கட்டிக்கொடுத்தால் குடும்பம் என்ன ஆவது? நடு ரோட்டில்தான் நிக்கவேணும்' என்பார் அண்ணர். ஐயா அதற்கு ஒத்து ஊதுவார். எல்லாருக்கும் பணம் காய்க்கும் மரத்தை வெளியில் அனுப்பிவிட விருப்பமில்லை. இல்லாவிட்டால்...'' எதையோ சொல்ல முயன்ற மனோ இடையில் நிறுத்திக்கொண்டாள்.

''இன்னொரு விசயம் அக்கா.''

விழிகளில் வினாக்குறி. வியப்பு.

''என்ன மல்லி...''

''எனக்குப் பெரும்பாலும் இன்னமும் இரண்டு மாதத்தில் வேலை கிடைக்குமாம். ரீச்சிங் தான். எம். பி. அனுப்பிய லிஸ்ற்றில் என் பெயர் இருக்கிறதாம். அண்ணர் மூவாயிரம் கொடுத்தாராம் அதுக்கு. வேலை கிடைத்துப் போயிட்டால் போதும். இந்த நரகம் வேண்டாம். எங்காவது போய் உழைத்துச் சீவிக்கலாம்...''

மனோ விருட்டென்று எழுந்து கட்டிலில் அமர்ந்தாள். அவள் விழிகள் மல்லியின் முகத்தில்.

''மல்லி நீ வேலைக்குப் போகாதே...!''

''அக்கா?''

''உண்மையாகத்தான் சொல்லுறன் மல்லி. நீ உழைச்சுக் காட்டினியெண்டால் பின்னர் ஒருக்காலும் உன்னால் இந்த வாழ்வில் இருந்து மீளமுடியாது; சந்திரா போல இருக்க வேண்டும்...''

''இல்லையக்கா நானும் உழைக்கப் போகிறேன். உனக்காக உழைக்கப் போறன். உன் சீதனத்திற்கு உழைக்கப் போகிறேன்...''

வியப்பு. அன்பு. கவலை.

''பயித்தியக்காரி...'' மனோ சிரித்தாள். ''மல்லி, சீதனக்குறைவுதான் என் கலியாணத்திற்குத் தடங்கல் என நீ இன்னமும் நம்புகிறாயா?''

''பின்னை...?அண்ணர் சொல்கிறாரே,சீதனம் காணாது... டொனேசன் கேக்கினம்... எங்க போறது என்று...''

மனோ ஏளனமாகச் சிரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது ஒரு திருப்திப்பட்டுக்கொள்ள உதவும் வார்த்தை. என்னைப் பெண் கேட்டு அவர்கள் வந்தார்களே? சீதனம் வேண்டாம்... ஒன்றும் வேண்டாம் என்று... அப்ப இவர்கள் என்ன சொன்னார்கள். 'இப்பத்தான் பாசாகி வந்திருக்கிறாள். படிச்ச கடன் இருக்குது. கொஞ்சநாள் வேலை செய்யட்டும் பார்ப்பம்'... அவர்கள் போய்விட்டார்கள். போடி பைத்தியக்காரி, அண்ணாரும் ஐயாவும் எனக்கு எத்தனை வரியமாகக் கலியாணம் பேசுகிறார்கள். தலையும் நரைத்து... இனி எனக்கொரு கல்யாணம். ராஜி போல சந்திராவைப்போல இந்தக் கட்டுக்களை அறுத்துக்கொண்டு ஓடிவிட எனக்குத் தெரியவில்லை. தெரிந்தும் துணிவில்லை. ஏன்? ஏன்? அவர்கள் மீதுள்ள பாசமா? பரிதாபம்தான்..."

மல்லிகா பேசாமல் அக்காவை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பின்னர்—"அக்கா, நான் உன்போலவும் இருக்க மாட்டேன் சந்திரா போலவும் இருக்கமாட்டன்' இருந்து பாரேன்."

"மல்லி... மல்லி..." வெளியில் அம்மா கூப்பிடுவது கேட்டது. மல்லிகா எழுந்து வெளியில் சென்றாள். மனோ மீண்டும் படுக்கையில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள்.

"மனோ... மனோ..."

காதுகளுள் அக்குரல் இளமையோடு ஓயாமல் ஒலித்துக் கொண்டிருந்தது.

பல்கலைகழகப் படிப்பு முடிந்து ஒரு மாதம். அவள் வீட்டில் இருந்தாள்.

"பத்தாயிரம் ரூபா வரை செலவு உன் படிப்பால். அது இருந்தால் சீதனம் தந்து உனக்குக் கலியாணம் செய்து வைத்திருக்கலாம்." என்றார் அண்ணர்.

"ஊரிலும் கடன் உன் படிப்பால்..."—ஐயா.

"என்ர நகையெல்லாம் அடைவு..."—அண்ணி.

அவள் சிரித்துவிட்டுச் சொன்னாள்; "கொஞ்சம் பொறுங்கோ... வேலை கிடைக்கட்டும் உழைச்சுத் தாறன்."

இளமை, துணிவு.

அண்ணணின் செல்வாக்கால் அவளுக்கு ஆசிரியை வேலை கிடைத்தது. மாவட்ட அடிப்படையில் ஆசிரியப் பதவி கிடைத்ததால் அவளுக்கு இலகுவாகக் கிடைத்தது. போட்டியில்லாத ஒரு மாவட்டத்தில் அவள் பிறந்திருந்தாள்.

அவள் வேலைக்குப் போன மறுமாதம் அவள் வீட்டிற்கு வந்தனர், அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவீந்திரனின் அத்தான் இன்னொருவர்.

அவள் உள்ளம் மகிழ்வால் துள்ளியது. அவள் கண்ட கனவுகள், கட்டிய மனக்கோட்டைகள் எல்லாம் உண்மையாகப் போகின்றன. அவள் இதயம் இன்பத்தால் நிறைந்தது.

வந்தவர்களின் நோக்கம் தெரிந்ததும் அண்ணன் மகிழ்வான். பெற்றோர் மகிழ்வர் என அவள் எண்ணினாள். ''எங்கட மனைவிற்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்.''

ஆனால், அண்ணனின் முகம் வாடியது.

''இப்ப மனைவிற்கு என்ன அவசரம், கலியாணத்திற்கு! இருபத்திரண்டு வயது தானே? இப்பதான் படிச்சிட்டு வெளியில் வந்திருக்கிறாள். அதற்குள் என்ன அவசரம்...''

''அவளை நம்பி ஊரெல்லாம் கடன் பட்டிருக்கிறம், பாருங்கோ. மூன்று நான்கு வரியம் போகட்டும். பார்ப்போம்.''

அவள் முகம் சோம்பியது. 'ரவி... ரவி...'

''நாங்களும் அதைத்தான் சொன்னம், ரவிக்கு அவன் தான் ஒரே பிடிவாதமாக நிற்கிறான். இரண்டு வரியம் தானே? அவனுக்கும் என்ன கன வயதா? பொறுத்துச் செய்வம்.'' என்றார் ரவீந்திரனின் அத்தான்.

இரண்டு ஆண்டுகள் காத்திருக்கத்தான் வேண்டும்.

அவள் கடன்காரி.

அவர்கள் சென்றதும் அம்மா பெருங்குரலில் சத்தமிட்டாள்;

''நீ அங்க படிக்கப்போனியாடி... ஆடப்போனியாடி''

''உவள் மாப்பிளை பிடிக்கத்தான் போயிருக்கிறாள் ''

''நான் அப்பவே சொன்னனான். கேட்டியளே? என்ர நகைகளையெல்லாம் அடைவுவைச்சு படிப்பிச்சியள் ஏதோ தங்கச்சி வந்ததும் உழைச்சுத்தருவா என்று. பாத்தியளே... கையோட மாப்பிள்ளை சொண்டாந்திட்டா...''—அண்ணி.

அவள் கடமைப்பட்டவள். பயம். கவலை மனோ எதுவும் பேசவில்லை. வெருண்டு போய் நின்றிருந்தாள். எதிர் பார்த்தது என்ன? நடந்தது என்ன?

அவள் முல்லைத்தீவிற்கு முதன் முதல் ஆசிரியையாகச் சென்றாள்.

புதிய இடம். புதிய அனுபவம். புதிய சூழல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனோ, இரண்டாண்டுகள் தானே பொறுத்திருப்போம். இங்கே என் அம்மா ஒரே கரைச்சல். எப்ப தன் மருமகளை வீட்டிற்குக் கொண்டு வரப் போகிறாய் என்று. நான்தான் நீயில்லாமல் இருப்புக் கொள்ளாமல் தவிக்கிறேன். மனோ எப்போது இரண்டாண்டு கழியும்?..." ரவீந்திரன் கடிதங்கள். அவைதான் அவள் நிம்மதி, துணை, காத்திருப்பு.

• •



இருபத்திமூன்று வயதுச் சிந்தனைகள். இன்று—? அவளுக்கு முப்பத்தாறு.

கண்களின் ஓரத்தில் கசிவு, அவள் கரம் விழிகளைக் கசக்கிக்கொண்டது.

"அன்ரி... நித்திரையா?

அவள் விழிகளை திறந்து பார்த்தாள்.

ஜெயந்தன் அண்ணனின் மூத்த மகன்.

"என்னடா ...?"

அவனுக்கு இப்போது வயது. பதினாறு. அவள் அட்வான்ஸ் லெவல் பாஸாகிப் பல்கலைக்கழகத்திற்கு நுழையும்போது... அவன் ஆடினானா? அண்ணி ஆடினாளா?

ஒருநாள் அவளுக்கு நல்ல நினைவு, மாலை நேரம்.

அண்ணன் தயங்கித் தயங்கி வீட்டிற்கு வந்தான். அவன் 'அன் சேட்டிபிகேற்' ஆசிரியனாகச் சேர்ந்து மூன்று மாதங்கள் தான். பாடசாலைக்கு அருகில்தான் அண்ணியின் வீடு. கண்டிருக்கிறார்கள். பேசியிருக்கிறார்கள். பேச்சுடன் மட்டும் நின்றுவிடவில்லை. ராஜி போல அண்ணி புத்திசாலியுமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— மூன்று மாதங்கள்.

அம்மா துள்ளிக் குதித்தாள். ஐயா அண்ணரை அறைந்தார்.

''நீங்கள் வேண்டாமெண்டால்... அம்மா, மருந்து குடிக்கிறதைத் தவிர வேறை வழியில்லை.'' என்றான் அண்ணன்.

''வீட்டில உன்னை நம்பி மூன்று குமர் இருக்கிறதை மறந்து... பாவி... இப்படிக் குறுக்கால போனியே... இதுகளை நான் இனி என்ன செய்வேன்?''

கடைசியில் வென்றது அண்ணன்தான். அண்ணி வீட்டிற்கு வந்தாள்.

ஏழு மாதங்களில் ஜெயந்தன்.

''என்ன அன்ரி... நான் ஏதோ கேக்கிறேன். நீங்கள் என்னவோ யோசித்துக் கொண்டு...''

அவள் முன் ஜெயந்தன் நின்றான்.

''என்ன ஜெயந்தன்''

''தமிழ் ருபிற் ஒன்று... ஈழத்து இலக்கியத்தில் பிரதேசப் பண்பு... இதுக்கு என்ன எழுதுவது? விசர் கேள்வியெல்லாம்இப்ப கேக்கினம்? நீங்கள் படிக்கேக்கயும் இப்படித்தானே அன்ரி?'' அண்ணி மாப்பிள்ளை பிடித்த கதை—ஜெயந்தன்!

''என்ன கேட்டாய்?... தலையிடிக்குது'' ஜெயந்தன். நாளைக்குச் சொல்லித்தாறன்.''

அவன் செல்லத் திரும்பியவன், தயங்கி அவளைப் பார்த்தான்.

''அன்ரி... உங்க பள்ளியிலை வசந்தியென்று ஒரு பிள்ளை படிக்குதா?''

துடிப்பு. பதைப்பு அவளுக்குத்தான்.

''ஓம்... ஏன் கேட்டாய்...''

''சும்மாதான்...''

அவன் வெளியேறினான். லைபிற் ஒளியில் ஜெயந்தனுக்கு முகத்தில் மீசை அரும்புவது அப்போதுதான் அவளுக்குத் தெரிகிறது.

* * *

வசந்தி வகுப்பில் இருந்தாள்.

மனோரஞ்சிதம் அவளை எதிர்பார்க்கவேயில்லை. கடந்த ஒரு வாரமாகக் கல்லூரிக்கே வராத வசந்தி இன்று வந்திருக்கிறாள். வசந்தியைக் கல்லூரியை விட்டு நீக்கிவிட்டதாகவே அவள் அறிந்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தி தலையைக் குனிந்தபடி வகுப்பில் அமர்ந்திருந் தாள். ஏதோ செய்யத்தகாத குற்றத்தைச் செய்தவள் போல. இந்த வயதில் காதலிக்கப் புறப்பட்டது தவறு. படிக்கின்ற பருவத் தில் படிப்பில் கவனம் இருக்கவேண்டும். தவறுகள் ஒருக்சாலும் குற்றங்களாகா. அவள் மட்டும்...?

அவளும் ரவீந்திரனை தன் உள்ளமெல்லாம் நிறைந்து வழியக் காதலித்தாள். அதுவும் படிக்கின்ற காலத்தில். கல்லூரி வாழ்வில் அல்ல. பல்கலைக்கழக வாழ்வில்.

''மனோ ..''

ரவியின் இனிமையான குரலின் மயக்கத்தில் அவள் தன் வசமிழந்து அவனையே அடங்கா ஆவலுடன் பார்த்தாள். அரும்பு மீசை துடிக்க அவன் சிரித்தான்.

"நாங்கள் கலியாணம் செய்ததும் தனியனாக ஒரு வீட்டிற்குச் சென்றுவிட வேண்டும். எப்பவும் தனிய இருப்பது தான் இனிமையானது மனோ. நான் மட்டும்தான் வேலைக்குப் போவேனும். நீ வீட்டில் எங்கள் குழந்தைகளை...!''

அவள் முகம் குப்பெனச் சிவந்தது.

அவன் சிரித்தான்.

''மனோ உனக்கு விருப்பமெண்டால் வேலைக்குப் போகலாம். தடுக்கமாட்டேன்.''

நினைவுகள். இனிய கனவுகளின் கழிவுகள்.

அவள் வேலைக்குப் படித்துப் பட்டம் பெற்றதன் பின் னர் செல்ல வேண்டும் என்று ஒருபோதும் எண்ணியவளல்லள். அப்படி வேலைக்குப் போவதென்றாலும் ரவியின் மனைவியாக மாறும்வரைதான்.

ஆனால் நடந்ததோ? எத்தனை ஆண்டுகள்?

வகுப்பில் சத்தம் எழுந்தது. அவள் வகுப்பு மாணவி களைப் பார்த்தாள்.

சத்தம் அடங்கியது. பாடம் தொடங்கியது.

அந்தப் 'பீரியட்'டின் இறுதியில் வசந்தியுடன் தனிமை யில் பேசக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது.

''ரீச்சர் என்னை மன்னியுங்கள்...'' என்றாள் விழிகள் கலங்க வசந்தி.

மனோ அவள் முதுகில் ஆதரவாகத் தட்டிக் கொடுத் தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பைத்தியம்... ரேக்கிற் ஈசி... கனவுபோல மறந்திடு வசந்தி''

''எல்லாரும் என்னை ஏசுகினம் ரீச்சர். எல்லா ரீச்சர் மாரும் ஏசுகினம். நான் கெட்டுப்போனேனு ரீச்சர்? தெரியாமல் கடிதம் மட்டும்தான் எழுதினன். இனி... இனி அப்படிச் செய்ய மாட்டன்.''

தாங்கள் செய்கின்ற ஒன்றைத்தான் வசந்தி செய்தாள். ஆனல் அவளை மன்னிக்க அவர்கள் தயாராகவில்லை. ஒரு பெண்ணின் மனதில் சிறியதொரு தவறைப் பெரியதொரு குற்றமாக வளர்த்துவிட அவர்கள் முயல்கின்ருர்களா? அவள் வசந்தியை இரக்கத்துடன் பார்த்தாள்.

''தவறுகள் செய்யிறது இயல்பு வசந்தி. அதைத் தவறென்றும் நான் சொல்லமாட்டேன். அது ஒரு அக்சிடென்ற்... படிக்கிற காலத்தில் இப்படி நடக்கக்கூடாது. படிக்கவேண்டும்.

''சரி ரீச்சர்''

''வசந்தி பிரின்சிப்பல் எப்படி...'' தொடர்ந்து அவளால் கேட்க முடியவில்லை. சங்கடம்.

''என் மாமா வந்து பிரின்சிப்பலுடன் கதைத்தவர்!''

''மாமா என்ன செய்கிருர்?''

''பீப்பிள்ஸ் பாங்கில மனேஜர்...''

அதிபர் மிஸ். கனகசபை தன் முடிவை மாற்றிக் கொண்டாள் போலும். கனதியானவர்கள் வந்து அதிபருடன் பேசினல் எப்போதும் இப்படித்தான். இல்லாது போன அட்மிசனும் இருக்கும்.

''எந்த பிருன்ச்?''

வசந்தி இடத்தைச் சொன்னுள். அத்துடன்—

''மாமாவிற்கு உங்களை நல்லாத் தெரியுமாம் ரீச்சர். உங்களுடன் தான் அவரும் ஒன்ருகப் படித்தவராம்.''

''மாமாவிற்கு என்ன பெயர்?''

''ரவீந்திரன்...''

சாட்டை அடி, துடித்துப்போய் மனே வசந்தியைப் பார்த்தாள். வியப்பு. கவலை.

அவளின் முகத்தில் திடீரென ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு வசந்தியும் திகைத்துப் போனுள்.

''ஓ...ஓ... தெரியும்...''

'அவர் எப்போது மாற்றலாகி யாழ்ப்பாணம் வந்தார்.'

''வாறன் ரீச்சர்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தி விடைபெற்றுச் சென்றதன் பின்னரும் அவள் செயலிழந்து அமர்ந்திருந்தாள்.

நினைவுகள். ஒருநாள்—

முல்லைத்தீவில் அவள் படிப்பித்து வந்த காலம். கல்லூரிக்கு வந்ததும் அவள் ஆவலுடன் எதிர்பார்ப்பது ரவியின் கடிதம். அவன் ஒவ்வொரு நாளும் கடிதம் எழுதுவான், ஒவ்வொரு கடிதமும் அவன் அன்பை, கனவுகளை, பிரேமையை, ஆசையை, தவிப்பை சுமந்துவரும். அன்று கடிதம் வரவில்லை. அவளுக்கு வகுப்பில் எதுவும் ஓடவில்லை

இரண்டாம் பீரியட், அதிபர் அவளை அலுவலகத்திற்கு வருமாறு அழைப்பு விட்டார். அவள் அங்கு சென்றாள். கண்ணில் வியப்பு. மகிழ்ச்சி. பூரிப்பு. ரவீந்திரன் அதிபரின் அறையில் அமர்ந்திருந்தான்.

"உம்மிடம் ஒரு விசிற்றர்'' என்றார் அதிபர்.

அவள் அவனை மகிழ்வுடன் பார்த்தாள்.

"எப்ப வந்தீங்க?

அவன் முகத்தில் சிரிப்பு. பஸ்சில் வந்த களைப்பும் தெரிந்தது.

''இப்பத்தான் மனே''

''வாறதென்று எழுதவில்லையே?''

''நேற்றுக் கடிதம் போஸ்ற்பண்ண மறந்திட்டன். நீ எங்கே ஏமாந்திடுவியோ என்று உடன் காலமை பஸ் எடுத்து வந்திட்டன்.''

அவள் உருகிப் போனாள். இன்று கடிதம் காணுமல் உண்மையில் அவள் கலங்கித்தான் இருந்தாள். அவன் அன்பில் அவள் கரைந்தாள்.

''அதுக்காக இப்படித் திடீரென வாறதே?''

"நான் என்ன செய்ய மனே?''

''இன்னமும் ஆறு மாதங்கள் தான் இருக்குது இரண்டு வரியம் முடிய. பிறகும் உன் ஆட்கள் மறுப்பினமோ?''

''அப்படியில்லை. ஓமென்பினம்!''

''வாவன் உன் குவாட்டஸ்சுக்கு போவம்.''

''இருங்க லீவு எடுத்திட்டு வாறன்''

அன்று பின்னேரம் வரை அவன் அங்கிருந்தான். அவள் வாழ்வில் மறக்க முடியாத நாள். அவன் எவ்வளவு உயர்வான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் என்பதையும் அவள் அறிய முடிந்தது. அக்குவாட்டஸ்சில் அவனும் இன்னும் இரு கலியாணமாகாத ஆசிரியைகளும் இருந்தார்கள். தனிமை. அவனும் அவளும். அவன் அவளை அணைக்கவோ தொடவோ முயலவில்லை.

அன்று பின்னேரம் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் கடைசி பஸ்சில் அவன் சென்ருன். அவள் தன் உயிர் பிரிவது போல உணர்ந்தாள். இப்படியொரு பிரிவின் துயரை அவள் முன்னர் ஒரு போதும் உணர்ந்ததில்லை.

மனேரஞ்சிதம் நினைவின் இனிமைகளில் அப்படியே ஊறிப்போனுள்.

'இன்ரேவலிற்'கான மணி அடித்தது.

சம்பளதினம். அலுவலகத்திற்கு இப்போது செல்லக் கூடாது. பின்னேரம் போய் எடுக்கலாம்.

அவள் ஆசிரியைகள் தங்கும் அறைக்கு வந்தாள்

பெரும்பாலும் எல்லா ஆசிரியைகளும் அங்கிருந்தனர். அவர்களில் பெரும்பான்மையோர் கல்யாண மாகாதவர்கள். முப்பது வயதிற்கு மேற்பட்டவர்கள். அந்த நினைவையே மறந்தவர்கள் போல அவர்கள் இருந்தார்கள்.

''மிஸ் சின்னராசா இன்றைக்கு லீவாம்'' என்ருள் மிஸிஸ் சற்குணம்.

''ஏன்?'' என்று கேட்டாள் கனகம்மா ரீச்சர்.

''பெண் பார்க்க வருகினமாம். அந்த வீட்டாக்களும் முயலாத இடமில்லை.''

கனகம்மா ரீச்சர் நக்கலாகச் சிரித்தாள்.

''இனி ஒரு கலியாணம் .. முப்பத்திமூன்று வயதாகுது. அந்த வயதில் எனக்கொரு குமர் வீட்டில்.'' கனகம்மா ரீச்சர் பெருமிதத்துடன் கூறுகிருள். அவள் வார்த்தைகள் அங்கிருந்த பலருக்கும் சூடு. கனகம்மா ரீச்சர் பேப்பரில் தலையைப் புதைத்தாள்.

மனேவிற்கும் அவ்வார்த்தைகள் கேட்டன. அவற்றைக் கவனியாதவள் போல 'பிளாஸ்'கில் இருந்த கோப்பியை பிளாஸ்க் மூடியில் வார்த்தாள்.

''பதினறு வயதில நவிப்பில் கலியாணம் கட்டிறது. பண்டிக் குட்டியள் போல வதவதவென்று ஆறேழைப் பெத்துத் தள்ளுறது. ஒன்றையும் சரிவர வளர்க்கத் தெரியாமல் திரியிறது ..'' என்ருள் மிஸ். செல்லப்பா. அவள் வார்த்தைகள் கனகம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீச்சருக்குப் பதில். கனகம்மா ரீச்சருக்கு அவை சுரீரெனத் தைத்தன.

கொல்லென்று சிரிப்பு நிறைந்தது. வெந்த புண்ணில் எண்ணெய். கனகம்மா ரீச்சர் கோபத்துடன் பேப்பரைச் சுழற்றி எறிந்தாள், மேசையில்.

கல்லூரி மணி ஒலி. ஆசிரியைகள் வகுப்புகளுக்குச் செல்ல ஆரம்பித்தனர். மனோரஞ்சிதத்திற்கு நான்காவது பீரியட் ஃபிரி.

அவள் அவ்வறையில் இருந்தாள். அவளுடன் மிஸ் செல்லப்பாவும் இருந்தாள்.

மிஸ். செல்லப்பாவிற்கு அவளிலும் பார்க்க இரு வயது குறைவாக இருக்கும். சயன்ஸ் பட்டதாரி.

''வகுப்பில்லையா?''

''ஃப்ரி...''

''எனக்குந்தான், கனகம்மா ரீச்சருக்கு எங்களைக் கண்டால் ஒரு இளக்காரம்...''

சிரிப்பு.

''தவிர்க்கமுடியாது. பெரும்பான்மை நாங்கள்தான். ஒவ்வொரு வீட்டிலும் எங்களைப்போலக் குமருகள், நல்லதொரு வாழ்வை எதிர்பார்த்துக் காத்திருக்குதுகள். சீதனம் எத்தனை பெண்களுக்கு வாழ்வை அளிக்காது அவர்களது வாழ்வை காலத்தின் கரங்களில்... சீ... என்ன சமூகம்... என்ன சம்பிரதாயம் ''— மிஸ் செல்லப்பா.

மனோ மௌனமாக இருந்தாள்.

''சென்ற வருடம்தான் என் அக்காவிற்குக் கலியாணம் நடந்தது. ஒரு கல்யாணத்துடன் என் அப்பா ஓட்டாண்டியாகி விட்டார். சிறுகச் சிறுகச் சேமித்து வைத்திருந்த சொத்தெல்லாம் ஒருத்தியுடன் சரி. இப்ப பிள்ளைப் பேறிற்காக அக்கா வந்திருக்கிறாள். அது வேறு செலவு. அத்தான் திரும்பியும் பார்க்கமாட்டார். கடமையாம். தலைப் பிள்ளைப் பேறுவைப் பெற்றோர்தான் பார்க்க வேண்டுமாம். எப்படி இருக்குது? ..''

''சித்திரா சின்னராசாவிற்கு இதாவது சரிவர வேண்டும்...'' என்றாள் மனோ. அவள் அறியத்தக்கதாக எத்தனை கலியாணங்கள் குழம்பிவிட்டன. ஒவ்வொரு முறையும் அவள் நம்பிக்கையுடன்தான் காத்திருக்கிறாள்.

சித்திரா மட்டுந்தானா? உலகில் எத்தனை சித்திராக்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை மனுக்கள்?

பெண் கேட்டு... பார்த்து... சீதனம் பேசி... இருள். இருள்.

அவள் முல்லைத்தீவிலிருந்து மார்கழி விடுதலைக்கு யாழ்ப்பாணம் வந்திருந்தாள்.

ஒருநாள். நல்லநாள் பார்த்து ரவீந்திரனின் அத்தானும் இன்னொருவரும் வந்தார்கள்.

ஐயாவின் முகமும் அண்ணனின் முகமும் இருண்டன. அவர்கள் கடந்த இரண்டாண்டுகள்தான் ஓரளவு பணக்கஷ்டம் இல்லாமல் வாழ்ந்து பழகிவிட்டார்கள். அண்ணனின் குறைவான சம்பளம், அண்ணியின் செலவுகள்... ஐயாவிற்குத் தேவைப்படும் குடிப்பணம். இவ்வளவையும் சமாளித்தது மனுவின் சம்பளம். அம்மாவின் கழுத்தில் சங்கிலி. மல்லிகாவின் கழுத்தில் சங்கிலி.

"இருங்கோ" வரவேற்பே கலகலப்பாகவில்லை. அவர்கள் பெண் கேட்டு வந்தார்களா? மாப்பிள்ளை கேட்டு வந்தார்களா?

அவள் தன் அறைக்குள் நம்பிக்கையுடன் காத்திருந்தாள்.

"நீ அவர்களை வரச்சொன்னியாடி?" என்று அம்மா அறைக்குள் வந்து கேட்டாள்.

"இல்லை, அம்மா..."

"உழைக்கிற பொம்பிளை எண்டதும் எப்படியாவது அடிச்சுக் கொண்டு போய் உழைப்பிச்சுத் தின்னப் பாக்கினம். நாங்கள் இப்ப அவசரப்பட்டனாங்களே? ஏன் வலிய வலிய வந்து திரியினம்..." என்று அம்மா எரிந்து விழுந்தாள். உள்ளத்தில் முகிழ்த்த மகிழ்வு மொட்டு விரியாமல் கருகியது.

அம்மா அன்று உணரவில்லையா? உழைக்கிற பெண் என்றாலும் இந்தச் சமூகத்தில் மாப்பிள்ளை எடுப்பது இலகுவான செயலல்ல. பிசாசு ஒன்று கவிந்திருக்கிறது.

அண்ணன் சொன்னான்: "இதில பாருங்க... அவள் சின்னப்பிள்ளை. இப்ப அவசரப்பட்டுக் கலியாணம் செய்ய இப்ப என்ன அவசரம்."

"இப்ப என்ன அவளுக்கு இருபத்திரெண்டு வயது தானே?" என்றார் ஐயா.

ரவீந்திரனின் அத்தானின் முகம் வாடியது.

"சில முறையள் இருக்குது. மாப்பிள்ளை வீட்டார் வந்து பெண் கேக்கிறது, வழக்கமில்லை. நாங்க வலிய வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேக்கிறம்... ஏன் என்றால் என் மச்சான் விரும்பிவிட்டான் என்றதுக்காக..."

அண்ணன் மௌனமாக இருந்தான்.

"இரண்டாண்டுகள் பொறுக்கச் சொன்னியள். இன்னும் பொறுக்க முடியாது. முடிவாகச் சொல்லிவிடுவது நல்லது..."

"இப்ப நாங்கள் கலியாணம் செய்ய..." என்று அண்ணன் இழுத்தான்.

"அவள் உழைக்கிறவள். எப்பவும் கலியாணம் என்றால் நூறு பேர் வருவினம் " —ஐயா.

ரவியின் அத்தான் சிரித்தார்.

"எங்களுக்கு அதுவும் ரவிக்கு இருக்கிற சொத்துக்கு அவர் மூன்று நான்கு பரம்பரையைக் கட்டிக்கொண்டு சாப்பிடப் போதும்... உங்கள் மகளின் உழைப்பிற்காக வந்தம் என்று நினைக்க வேண்டாம்... உங்களுக்குச் சம்மதமில்லையென்றால், நாங்கள் இனி ரவிக்கு வேறிடத்தில் பெண் பார்க்க வேண்டியது தான்..."

"அது உங்கள் விருப்பம்.." —அண்ணன். அவள் துடித்துப் போனாள். இதயத்தில் பேரிடி.

"அக்கா.. இவர்கள் என்ன கதைக்கிறார்கள்?.." என்று மல்லிகா கேட்டாள். தங்கையை நிமிர்ந்து பார்த்த மனோவின் கண்கள் கலங்கின. அப்படியே தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். கடல் பொங்கியது போல அணை உடைந்தது.

ரவியின் அத்தான் கோபத்துடன் வெளியேறினார்.

"அவளின்ரை உழைப்பிற்கு நான் அவளுக்கு ஒரு டொக்டர் அல்லது இன்சினியரை மாப்பிள்ளையாக எடுக்க இருக்கிறன். இவையள் வந்திட்டினம்... இன்னும் ஒரு இரண்டு வரியம் போனால் நல்ல இடத்தில் செய்யலாம்..." ஐயா அம்மாவிற்குக் கூறுகிறார்.

"கொஞ்சம் காசை மிச்சப்படுத்தி, பாங்கிலும் ஒரு லோனை எடுத்து ஒரு வீட்டையும் கட்டி கௌரவமாக ஒரு கலியாணத்தைப் பேசலாம். இப்ப என்ன?" என்றார் அண்ணர்.

அவள் இதயத்தில் கவலை பேரிருளாகக் கவிந்தது; நம்பிக்கைகள் நகர்ந்தன.

அவள் எவ்வளவு நம்பிக்கையுடன் எதிர்பார்த்தாள். ரவி ஏமாந்து போவார். அவரால் இதனைத் தாங்கவே முடியாது. இவர்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ரவி... ரவீ...''

கல்லூரி மணி ஒலித்தது. மணிச்சத்தம் மனோவின் காதுகளில் இறங்கியது.

அவள் எழுந்திருந்தாள்.

''என்னப்பா அப்படி யோசனை?'' என்று மிஸ் செல்லப்பா கேட்டாள்.

பதில் சிரிப்பு.

அன்று பின்னேரம் பாடசாலை முடிந்து வீடு வரும் போது சந்திராவைச் சந்தித்தாள்.

கண்ணனை இடுப்பில் வைத்துக்கொண்டு அவள் நின்றிருந்தாள். அவர்களைக் கண்டதும் அவள் கால்கள் தரித்து நின்றன.

''அக்கா...''

தங்கையை மனோ ஊன்றிப் பார்த்தாள். அவள் வழக்கமாக அணியும் அதே றெசிங்கவுண்; முகத்தில் கவலையின் ரேகைகள்.

''சந்திரா, நீ சந்தோசமாக இல்லையா?''

''ஏனக்கா...?''

''இல்லைக் கேட்டன்...''

''உண்மையா நான் சந்தோசமாகத்தான் இருக்கிறன், அக்கா. அவருடைய சம்பளம் குறைவு. அதனால் கொஞ்சம் கஷ்டம். அவ்வளவு தான். அவர் என்னில் உயிரையே வைத்திருக்கிறார், அக்கா.''

அவள் கண்ணனின் கன்னங்களைத் தட்டினாள் குழந்தை பெரிதாகச் சிரித்தது.

சந்திராக் குழந்தைக்கு ஒரு குழந்தை.

''அக்கா கேக்கிறன் என்று கோவியாதை...'' தயக்கம். கூனிக்குறுகிப்போய் சந்திரா.

''என்ன, சந்திரா?'' குரலில் ஆதரவு; அணைப்பு.

''கண்ணனுக்குப் பால்மா வாங்கவேண்டும். அவருக்குச் சம்பளம் ஐந்து ஆறிலதான். ஒரு இருபது தந்தியெண்டால்... குறை நினையாதை அக்கா. அவருக்குச் சம்பளம் வந்ததும் திருப்பித் தந்துவிடுவன், அக்கா.''

மனோ தங்கையை ஆழமாகப் பார்த்தாள். எவ்வளவு பயப்படுகிறாள், கேட்பதற்கு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கண்கள் கலங்கின.

கான்ட் பாக்கைத் திறந்து அன்று வாங்கிய சம்பள உறையிலிருந்து ஒரு ஐம்பது ரூபாவை உருவிச் சந்திராவிடம் நீட்டினுள்.

''இருபது போதும் அக்கா...''

''பரவாயில்லே... கண்ணனுக்கு நல்லதா ஒரு சட்டை வாங்கிப்போடு ''

சந்திரா விழிகள் கலங்க வாங்கிக்கொண்டாள்.

''அக்கா, அவயள் எல்லாரும் உன் உழைப்பில சோக்குப் பண்ணுகினம். உன் சம்பளத்தைப் பங்குபோடுகினம்... அதில் இப்ப நானும் வந்திட்டன்...'' சந்திரா விம்மினுள்.

''விசர்... விசர்... நான் ஏன்ரி உழைக்கிறன்? உங்கள் எல்லாருக்குந்தான்...''

வார்த்தைகள் அவளை அறியாமலே வெளிவந்தன.

● ●



அவள் கல்லூரியால் வருகின்ற வேளைகளில் ராசதுரை வீட்டில் இருப்பவனல்லன்.

அன்று அவன் தலைவாசல் கதிரையில் படலையைப் பார்த்தவாறு இருந்தான். ஐயாவும் ஒரிடமும் செல்லாது திண்ணை வாங்கில் இருந்தார்.

இரை தேவை. பண இரை. அண்ணி எங்கோ வெளியில் புறப்படுவதற்கு ஆயத்தமாகப் பவுடர் பூசியவாறு கண்ணுடி முன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் படலையைத் திறந்ததும் விரிந்த காட்சி. அண்ணன் கதிரையில் நிமிர்ந்து அமர்ந்தான். ஐயா வாங்கில் இருப்புக்கொள்ளாது தவித்தார்.

அவள் என்ன சிறுமியா?

அவள் அறைக்குள் புகுந்து உடுப்பை மாற்றினாள். பக்கத்து வீட்டு தம்பிநாதன் இந்தியச் சேலை வியாபாரம் செய்பவன். பத்து நாட்களுக்கு முன்னர் ''16 வயதினிலே'' சாரி ஒன்றைக் கொண்டுவந்து காட்டினான். நிறமும் போடரும் மனோவிற்குப் பிடித்துக்கொண்டதால் வாங்கியிருந்தாள். நூற்றிஐம்பது ரூபா.

இன்று காசுக்குத் தம்பிநாதன் வருவான். நிச்சயம் கொடுக்கவேண்டும்.

மல்லிகா தேநீருடன் வந்தாள். தமக்கையிடம் கிளாசைக் கொடுத்துவிட்டுச் சிரித்தாள்.

''என்ன மல்லி...?''

''வெளியில் பார்த்தியா அக்கா? காவல் இருக்கினம் ..''

மனோ மௌனமாக இருந்தாள். தேநீரைக் குடித்தாள்.

''அண்ணியும் எங்கோ வெளிக்கிடுகிறா.. ?

''...ம்...''

அவள் அறைக்குள் சற்று நேரம் இருந்தாள். அவள் சம்பளம் அறுநூற்றியெண்பது.

அதனைப் பிய்த்துப்பிடுங்கிக்கொள்ள தேவைகள், சுய நலன்கள் காத்திருக்கின்றன.

ஐயாவிற்குப் பணம் தேவை. கள்ளுக்கொட்டில் கணக்கு, தேத்தண்ணிக்கடைக் கந்தையாவிற்கு சாராயப்பாக்கி.

அண்ணனிற்குப் பணம் தேவை. பற்றுக்குறை. அண்ணியின் தேவைகள், பிள்ளைகள், ரியூசன் செலவு.

அப்படியாயின் சந்திரா...? அவளை நினைத்ததும் அவள் நெஞ்சம் திருப்தியால் நிரம்பியது. அவளுக்கும் பணம். அது பாசத்தின் இரப்பு. அவள் மகிழ்வுடன் கொடுத்தாள். கண்ணனுக்கு அது.

ஐயா, அண்ணன் அவளில் பாசமில்லையா? பாசத்திற்கு அப்பால் அவர்களின் அன்பில் ஒரு சுயநலம்? உழைக்கட்டும்... உழைக்கட்டும்... இரண்டு ஆண்டுகள் செல்லட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி, அப்படியே பதின்மூன்றுண்டுகள், அவள் தெய்வம் அவளைவிட்டு விலகி... நெஞ்சின் ஒரு மூலையில் சுள்ளென்ற வலி.

'ரவி...ரவி...'

மார்கழி விடுதலை முடிந்து மனோ துயருடன் முல்லைத் தீவுப் பாடசாலைக்கு மீண்டும் பயணமானுள். இதயத்தில் ஏமாற்றத்தின் சுமை. மனதில் இருள், பெருமூச்சுக்கள்.

காலை... மாலை... பாடசாலை... வகுப்பு .. கற்பித்தல். யந்திர இயக்கம். சனி, ஞாயிறு வார இறுதியில் யாழ்ப்பாணம் செல்வதையும் அவள் மறந்தாள். குவாட்டஸ்சும் இனிய நினைவுகளும்தாம் தஞ்சம். ரவீந்திரனின் கடிதங்கள், அவள் பதில்கள். விடைதெரியாத விஞச்சிக்கல்.

ஒருநாள்... ரவீந்திரன் முல்லைத்தீவிற்கு வந்தான். போயா தினம். அவள் மட்டும்தான் குவாட்டஸ்சில். மற்றவர்கள் வீடுகளுக்குச் சென்று விட்டார்கள். குவாட்டஸ்சின் திண்ணையில் அவள் அமர்ந்திருந்தபோது, ரவீந்திரன் வருவதை அவள் கண்டாள்.

உள்ளத்தில் இன்பப் பெருக்கு. முகத்தில் இருளாகக் கவலை. ஏமாற்றம்.

''மனோ''

அவன் முதல் குரலிலேயே அவள் உருகிப் போனுள். கண்கள் நீர்ச்சரங்களைத் தொடுத்தன.

கைகளுக்கிடையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். உடல் விம்மலால் குமிறியது. பின்னல் சரிந்து... அவள் அழுதாள்.

''மனோ... இதென்ன?''

அவள் அழுதாள்.

''மனோ இப்ப என்ன நடந்திட்டுது? அவயள் மாட்டன் என்றுல் என்ன? மறுத்திட்டுப் போகட்டும். நான் வழி சொல்லுறன்...''

அவள் நிமிர்ந்தாள். நம்பிக்கை, அவர்கள் இணைவதற்கு வழியுமிருக்கிறதா?

அவள் விழிகள் அவனிடம் யாசித்தன. வழி இருக்கிறதா? அவர்கள் இருவரும் வாழ்வில் ஒன்றுபட வழியிருக்கிறதா?

அவன் சொன்னுன்; "இப்பவே என்னுடன் வந்திடு, மனோ. தாய் தகப்பன் சுற்றம் பந்தம் பாசம் என்றதெல்லாவற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றையும் மறந்திட்டு என்னுடன் வந்திடு. இப்பவே வந்திடு. உன்னை எப்பவும் என் அம்மா ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்ருள். வந்திடு மனே. நாங்கள் சந்தோசமாக இருப்பம்.''

ஓடுவதா? ஊரறிய உற்றம் சுற்றமறிய மணவறையில் ரவி தாலிகட்டி, எல்லோரும் வாழ்த்த ஆரம்பிக்க வேண்டிய வாழ்வு. மனே ஓடிவிட்டாள். யாரோடோ ஓடிவிட்டாள். அவளுக்குப் பின்னர் இருக்கிற இரண்டு குமர்களுக்கும் வசை தேடிவிட்டு ஓடிவிட்டாள். அந்தக் குடும்பமா? சீச்சீ... மூத்தவள் ஓடியவள். அந்தக் குடும்பத்துடன் சம்பந்தம் வேண்டாம்.

மல்லிகா குமராக .. சந்திரா குமராக .. அவளால் அவர்கள் வாழ்வில்லாது நிற்க முடியாது. அவளால் அது முடியாது.

''முடியாது, ரவி... என்ஞல் ஓடிவர முடியாது...''

அழுகை, கண்ணீர். அவன் அவளைப் பார்த்தான். அவன்கட்டிய கற்பனைக் கோட்டைகள், நினைவுகள் கங்கையாற்றில் அள்ளுப்பட்ட மணல்கள்.

அவன் எவ்வளவோ எடுத்துச்சொன்னன். கெஞ்சினன்.

''மனே நீயில்லாமல் என்ஞல் வாழமுடியும் என்று என்ஞல் நினைக்கவே முடியவில்லை. என்ருலும் ஒருநாள் உன் மனம் மாறும். அப்போது எழுது... உனக்காகக் காத்திருப்பேன்.''

காத்திருப்புக்கள். காத்திருப்புக்கள்.

அறைவாசலில் நிழலாடியது. மனேவின் சிந்தனைத் தடம் அறுந்தது. பார்த்தாள். அண்ணன்.

நிமிர்ந்து பார்த்தாள். கூனிக்குறுகி அவன். அவளுக்கு அவன் நின்ற நிலை பரிதாபகரமாக இருந்தது.
கேவலம் இந்தப் பணத்திற்காக.

''அண்ணை, எனக்கு இந்தமாதம் சில செலவு இருக்குது. தம்பிநாதனுக்குச் சாறிக்காசு கொடுக்கவேண்டும். சீட்டுக் காசு கட்டவேண்டும்...''

''எனக்கு இந்தமாதம் அவசரமா ஐநூறு தேவை. மனே, கைமாத்துக்கடன். சுட்டாயம் திருப்பிக் கொடுக்கவேண்டும்.''

''ஐநூரு?... முந்நூறு தாறன்...''

அவன் அவள் நீட்டிய பணத்தை வாங்கிக் கொண்டான்.

''இன்னும் ஒரு நூறு தா, மனே ..''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லை அண்ணை சந்திராவுக்கு ஒரு ஐம்பது கொடுத்திட்டன்...''

வார்த்தைகள் அவளையறியாமல் சிந்திவிட்டன. அண்ணன் புலி.

''சந்திராக்கோ? ஏன்... நான் கஷ்டப்பட்டுப் படிப்பித்துவிட... நீ தானம் செய்யிறியோ? ஆரைக்கேட்டுக் கொடுத்தனி . ?''

அவள் தமையனை அமைதியாகப் பார்த்தாள். விழிகளில் கோபப் படர்வு.

''கொடுக்க விரும்பினன். கொடுத்தன் ..''

''அவளா படிப்பிச்சு விட்டவள்?''

அவள் கட்டிலைவிட்டு எழுந்திருந்தாள்.

''அண்ணை, நீ மூன்றுவரியம் படிப்பிக்கச் செலவழித்தாய். நான் பதின்மூன்று வரியமாக உழைச்சுத்தாறன். இன்னுமா உன்கடன் தீரவில்லை?''

மனோ ஒருபோதும் இப்படிப்பேசியவளல்லள். அவன் வியப்புடன் பார்த்தான்.

வார்த்தைகள் சம்மட்டிகளாகத் தாக்கின.

அவன் விருட்டென அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

அவ்விடத்தில் இருந்தாற்போல் புயலடித்து ஓய்ந்த அமைதி.

கடைசித் தங்கை லீலா வந்தாள், பதினொரு வயது.

ஐயா 'றெஸ்ட்' எடுத்த காலத்தில் பிறந்தவள். இன்னும் ஒரு வருடத்தில் அவளும் குந்திவிடுவாள்.

''ஐயா காசாம், பெரியக்கா.''

மனோ எதுவும் கூறாமல் நூறு ரூபாவைத் தூக்கிக் கொடுத்தாள். லீலா வாங்கிக்கொண்டு வெளியில் சென்றாள்.

வெகுநேரம் மனோ கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

மாலை கவியும் நேரம். வெளியில் வந்தாள். வீட்டில் எவருமில்லை. மல்லிகா மட்டும் குசினிக்குள். இரவுச் சாப்பாடு தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தாள்.

அவர்கள் வீடு சிறிய மத்தியதரமான கல்வீடு. முற்றத்தில் ஒதுக்காகப் பழைய தலைவாசல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது ஆண்டில்........

ISLAND
INSTITUTE

58, Stanley Road,
Jaffna.

lanke

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தலைவாசலில் போடப்பட்டிருந்த வாங்கில் அமர்ந்தாள்.

அப்போது படலையைத் திறந்துகொண்டு தம்பிநாதன் வந்தான். இருபத்திரண்டு வயதிருக்கும். இன்றைய இளைஞன், லோங்ஸ், சேட், வளர்ந்த தலைமுடி, மீசை, வலக்கரத்தில் இரும்புக் காப்பு.

மனோ தலைவாசலில் அமர்ந்திருப்பதைக் கண்டு அங்கு வந்தான்.

''இரு தம்பிநாதன், காசெடுத்து வாறன்...''

அவள் எழுந்து செல்வதை அவன் பார்த்தான். சோட்டி பின்னல். அவள் காசுடன் திரும்பி வரும்போதும் பார்த்தான்.

''என்னடா...'' என்று அவள் கேட்டாள்.

''இல்லையக்கா, ஏன் நீங்கள் இப்படி இருக்கிறியள் என்று நினைச்சன்.''

''எப்படி''

''கலியாணமே வேண்டாம் என்றிருக்கிறியளாம்.''

வியப்பு, திகைப்பு.

''ஆர் சொன்னது...?''

''மாமிதான் எத்தனையோ கலியாணம் பேசிவந்ததாம். எல்லாத்துக்கும் மறுத்திட்டியளாம். ஏன் மறுத்தனீங்கள்?''

தம்பிநாதனை ஆழமாக ஊடுருவிப்பார்த்தாள். புதிய செய்தி.

''அப்படியா?''

''உங்கட அழகுக்கு .. வடிவுக்கு, அக்கா, ஆரும் கண்டால்...''

''விசர்க் கதை...'' என்றாள் அவள். அவன் அத்துடன் பேச்சை நிறுத்திக் கொண்டான். மார்பில் பின் கழன்றிருக்கிறதோ? பார்வை குத்துமிடம். அவன் முன்னிலையில் அவள் அநாகரீகமாக நடந்துகொள்ளவில்லை. பக்குவமாகத் திரும்பி மார்புச் சோட்டியைப் பார்த்தாள். சரியாகத்தான் பின் பிணைத்திருக்கிறது.

தம்பிநாதன் ஏன் அங்கு பார்க்கிறான்? அவள் அறியத்தக்கதாக அவன் சிறுவன்.

அவளுக்குக் கோபத்தின் குறிகள். தற்செயலோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நல்லபிள்ளை.

''அக்கா, இன்னொரு சாறி கொண்டு வரட்டே? சிங்கப்பூர் வூலி... நல்ல ரெக்சர்...'' அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே கேட்கிறான்.

''வேண்டாம்...''

அவன் மீண்டும் கேட்டான்.

''அக்கா இப்படியே இருக்கப்போறியளே?...''

''எப்படி?''

''கலியாணம் செய்யாமல்?...''

''இருக்கக்கூடாதே?''

''இருக்கலாம்... ஆனா வீணா ஏன் வாழ்வைப் பாழாக்குவான்...''

''இப்படியிருந்தால் வாழ்வு வீணாகவா போகிறது. கலியாணம் செய்தவை எத்தனை பேரின்ர வாழ்வு வீணாப்போயிருக்குது .. தெரியுமே?''

''நல்லா உழைக்கிறியள்... நல்லா சீதனம் சேர்த்திருப்பியள். செய்யலாமே?''

அவள் சிரித்தாள். வேதனை, விரக்தி.

''உனக்கு இன்னமும் உலகம் தெரியவில்லை''

அவன் தன் கரத்தில் உறைபோட்ட புத்தகம் ஒன்று வைத்திருந்தான்.

''அப்ப சாறி வேண்டாம்...''

''இது என்ன புத்தகம் தம்பிநாதன், ..?''

அவன் முகத்தில் சங்கடம்.

''கதைப் புத்தகமா?''

''இல்லை... படிக்கிறதென்றால் இந்தாங்கோ ..''

அவன் நீட்டினான். அவள் வாங்கிக் கொண்டாள். விரித்தாள்.

கறுப்புக் கண்ணாடியுடன் தமிழ்வாணன். 'உடலுறவில் மனைவியை மகிழ்விப்பது எப்படி?'

செக்ஸ் புத்தகம். மனைவிமாரை மகிழ்விப்பதற்குத் தமிழ்வாணன் கணவன்மாருக்கு வழி சொல்கிறார்.

அவள் முகத்தில் திடீரென ஏற்பட்ட உணர்வுகளைக் கெட்டித்தனமாக அடக்கிக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதெல்லாம் படிக்கிறியா?''

''தெரிந்து கொள்வதற்குப் படிக்கத்தான் வேண்டும் ..''

அவளை அவன் ஊன்றிப் பார்த்தான்.

''இந்தாடா . ''

படிக்கிறதென்றால் படிச்சிட்டுத் தாருங்கோ, அக்கா.''

கோபம். விழிகளில் சிவப்பு.

''நீயே படி...''

வாங்கிக்கொண்டான்.

''வாறன், அக்கா ..''

போய்விட்டான். நேற்றுவரை சிறுவன் என அவளால் எண்ணப்பட்டவன். அவள் அறியத்தக்கதாக இடுப்பில் எதுவு மில்லாமல் பொட்டிற்குள்ளால் திரிந்தவன்.

''சந்தக்காவிலை எறும்பு கடிக்கப் போகுதடா...'' அவள் பகிடி விட்ட சிறுவன்.

அவன் குரு தமிழ்வாணன்! கூவத்தொடங்கி விட்டார்.

மஞ்சுவிற்குச் சிரிப்பாக வந்தது. எட உலகமே?

அவள் கிணற்றடிக்குச் சென்று முகம் கால்களைக் கழு விக் கொண்டாள்.

அறைக்குள் நுழைந்து கட்டிலில் சாய்ந்தாள். லைப்ரரி யிலிருந்து எடுத்து வந்த நூலை எடுத்துப் படிக்கத் தொடங்கி னாள், சுவையான நாவல்.

மனம் செல்லவில்லை. காரணம்...?

தம்பிநாதன் படிக்கின்ற புத்தகங்கள்.

கால இயக்கங்கள் சரியாகத்தான் செல்கின்றன.

இருந்தாற்போல் மின்னல் வெட்டு. ரவீந்திரன் யாழ்ப் பாண..... வீதி, மக்கள் வங்கியில் வேலைமாறி வந்து கடமையாற் றுகிறார் வசந்தியின் மாமா.

ரவி... ரவி... கரத்தில் இருந்த நாவல் நெஞ்சில்.

காதுகளுள் மகாவலி கங்கையின் நீர்ச் சலசலப்பு.

அவன் மெதுவாகக் குனிந்து அவள் காதுகளுக்குள் 'மஞ்சு' என்றான்.

அவள் அவனை ஆவலுடன் பார்த்தாள்.

''படித்து முடிந்ததும்... கலியாணம். தனி வீடு... அதில் நானும் நீயும். இரண்டேயிரண்டு குழந்தைகள். ஒன்று பையன். ஒன்று பெட்டை உன்னைப்போல.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னைப்போலவா?''

''ஓம்... சிவப்பா அழகா...''

''பையன்?''

''என்னைப்போல ..''

''கறுவலா... குண்டா ..'',

''நான் கறுப்பா... குண்டா.. ?''

பொய்க் கோபம்.

''கறுப்பெண்டாலும் என் ரவி அழகு.''

சிரிப்பு. எவ்வளவு இனிய நாட்கள். எல்லாம் கனவாய், பழங் கதையாய்.

அவளையறியாமல் நீண்டதொரு நெடுமூச்சு.

வெளியில் கலகலப்பு. ஐயாவின் குரல் குடிவெறியில் ஒலிக்கிறது.

● ●



கல்லூரியின் இரண்டாம் தவணைப் பரீட்சை. உயர் வகுப்பு மாணவிகளுக்கான பரீட்சை மண்டபத்தை அன்று மேற் பார்வையிடும் பொறுப்பு மனோரஞ்சிதத்திற்கு. மாணவிகள் சிரத்தையுடன் வினாத் தாளிலும் விடையெழுதுவதிலும் ஈடுபட் டிருந்தனர்.

வழி தவறிக் கல்லூரி வளவிற்குள் புகுந்துவிட்ட கட்டாக்காலி மாடு ஒன்றைக் கல்லெறிந்து துரத்தியபடி கல்லூரிக் காவற்காரன் சிவக்கொழுந்து ஓடுவது தெரிந்தது. இக்காட்சி அதிபரின் கண்களில் பட்டால் போதும். இன்று சிவக்கொழுந்து நன்முக வாங்கிக்கட்டிக்கொள்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிலும் கண்டிப்பு. எதிலும் தான் என்ற எண்ணம்.

மனோரஞ்சிதத்துடன் அதிபர் மனம் விட்டுப் பேசுவதில்லை. எதிரில் சந்திக்க நேர்ந்தாலும் ஆணவமான ஒரு தலைத் திருப்பலுடன் அதிபர் அவளைக் கடந்துவிடுவாள்.

சித்திரா அவள் அருகில் வந்து அமர்ந்தாள். அவளை மனோ நிமிர்ந்து பார்த்தாள்.

சித்திராவின் கண்களில் கவலையின் கருங்கோடுகள், ஏக்கம். அவநம்பிக்கை.

''என்ன ரீச்சர்??''

சித்திரா கவலையுடன் சிரித்தாள். அவள் சிரிப்பில் தொனித்த அர்த்தங்கள். மனோவிற்குப் புரிந்தன.

''இதுவும் சரிவரவில்லையா?'' என்று மனோ கேட்டாள்.

சித்திராவின் கண்கள் கலங்கின. 'இல்லை' என்பது போலத் தலை அசைந்தது.

''பெண்ணாகப் பிறக்கக்கூடாது; ரீச்சர். பெண்ணாகப் பிறந்தாலும் யாழ்ப்பாணச் சமூகத்தில் ஒருக்காலும் பெண்ணாகப் பிறக்கக்கூடாது. பாவம் செய்த சமூகம்.. பேராசை பிடித்த சமூகம்...''

சித்திரா சற்று மௌனமானாள். உள்ளத்தின் குமுறல்களைக் கொட்டிவிடும் ஆவேசம், தொடர்ந்தாள்.

''எனக்கொன்றும் பெரியதொரு உத்தியோகத்தன் மாப்பிள்ளையாக வரவேண்டும் என்று நான் ஒருக்காலும் எண்ணியதில்லை. எங்களிடம் இருக்கின்ற சீதனத்திற்கு அளவாக ஒரு மாப்பிள்ளையைத் தான் என் தகப்பனார் தேடினார். எத்தனையோ பேர் வந்தார்கள், பார்த்தார்கள். அவர்களுக்காக அலங்கரித்து அலங்கரித்தே நான் தேய்ந்து போனேன் ரீச்சர். ஒருவருக்குப் பொம்பளை பிடிக்கவில்லை. இன்னொருவருக்கு சீதனம் போதவில்லை. இன்னொருவருக்குத் தங்கைக்கு டொனேசன் வேண்டுமாம். இப்படி... இப்படி... என் வயது ஏறியதுதான் மிச்சம். கடைசியா முந்தநாள் ஒரு பகுதி வந்தார்கள். அவர் பஸ் கொண்டக்டர். பெண் பார்க்க வரும்போதே நிறை வெறி. இம்முறை நானே மறுத்தேன்.''

மனோ சித்திராவை ஆழமாகப் பார்த்தாள். அவளுக்கு ஆறுதல் சொல்ல அவளால் முடியுமா? யார் யாருக்கு ஆறுதல் சொல்வது?

''உமக்கு இனியா ஒருவர் பிறக்கப்போகிறார் ரீச்சர்? எங்கேயோ பிறந்துதான் இருப்பார்...''

''நீர் கிழட்டுக் கதை பேசுகிறீர் ரீச்சர். கலியாணம் இப்ப யாழ்ப்பாணத்தில் ஒரு வர்த்தகம் போல. லாப நோக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும் வர்த்தகம் போல. பணம் படைத்தவர்கள் சற்றுப் படித்து நல்ல உத்தியோகத்திற்கு வந்த இளைஞர்களைத் தேடிப் பிடித்து அவர்களின் சீதனத்தைப் போட்டி போட்டு அதிகரிக்க வைக்கிறார்கள். அந்த வர்த்தகப் போட்டியில் எங்களைப் போன்ற சாதாரண பெண்கள் மூலையில் ஒதுங்கிக்கொள்ள வேண்டியது தான்.''

சித்திரா விடயத்தில் அவள் வார்த்தைகள் உண்மையாக இருக்கலாம். ஆனால் அவள் விடயத்தில்...''

' மனோ என்னுடன் வந்துவிடு. இந்தச் சமூகத்தைப் பற்றிக் கவலைப்படாதை. இந்தச் சமூகம் ஒருபோதும் எங்களைப் பற்றிக் கவலைப்படப்போவதில்லை. என்னைப்பற்றிக் கவலைப்படு மனோ. உன்னைப்பற்றிக் கவலைப்படு. எங்களைப்பற்றிக் கவலைப்படு. வாறியா மனோ?'' அவளிடம் கடைசிச் சந்திப்பின்போது ரவீந்திரன் யாசித்தான்.

''ஓடி வருவதா? ஒரு ஆசிரியை ஓடி வருவதா...ரவி...''

ரவீந்திரன் அவளைக் கவலையுடனும் வியப்புடனும் பார்த்தான்.

''உன் தொழிலும் எங்கள் வாழ்விற்குத் தடையா மனோ?''

அவன் கெஞ்சல்கள், வற்புறுத்தல்கள். அவள் அழுகை. கண்ணீர்.

கல்லூரி மணி அடித்தது. சித்திரா விடை பெற்றாள். கனகம்மா ரீச்சர் பேப்பருடன் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தாள்.

''நீரா சீஃப்?''

"ஓம் ரீச்சர்!''

''நல்ல பிள்ளை. எனக்காகப் பார்த்துக்கொள்ளும், எனக்குச் சாதுவாத் தலையிடி. நான் ஸ்ராஃப் ரூமில் இருக்கிறன். பிரின்சிப்பல் வந்தால் இப்பத்தான் போனவ என்று சொல்லும்!''

கனகம்மா ரீச்சர் வகுப்பிலும் இருந்து பழக்கமில்லை. பரீட்சை மண்டபத்தில் இருந்தும் பழக்கமில்லை. படிப்பித்தும் பழக்கமில்லை.

''இதுகளுக்குப் படிப்பிச்சு என்ன பயன். எல்லாம் மோடுகள். நாளைக்குக் கலியாணம் கட்டிக்கொண்டு அடுப்பூதப் போகிறதுகளுக்கு என்ன படிப்பு?''—இது கனகம்மா ரீச்சரின் பொன்மொழி.

கனகம்மா ரீச்சர் வந்த கையுடன் திரும்பிச் சென்று விட்டாள். பரீட்சை முடிகிற நேரம். மிஸிஸ் சற்குணம் வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன மனோ, நீர் இங்கேயா இருக்கிறீர்? உமக்கு விசயம் தெரியாதா?''

''என்ன ரீச்சர்?''

''உனக்கெல்லே ரான்ஸ்பர் வந்திருக்குது? ''

மனோரஞ்சிதம் ஒருகணம் இடிந்துவிட்டாள். அவள் முகத்தில் நம்பிக்கையின்மை கவலை. வியப்புடன் பார்த்தாள்.

''உண்மையா ரீச்சர்? இப்பவா?''

''இமிடியேற் ரான்ஸ்பராம்!''

மனோரஞ்சிதம் விக்கித்து இருந்தாள். அவள் படித்த கல்லூரி. வேறொரு பாடசாலையில் அவளால் படிப்பிக்க முடியும் என்று எண்ணவே முடியவில்லை. அவள் வாழ்வில் ஒரு அங்கமாக அக்கல்லூரி இருந்தது. அவள் நிம்மதி அழிந்தது போல.

''மிஸ் கனகசபை நச்சுப்பாம்புபோல. சொன்னன் கேட்டீரா? கொளுவிக்கொண்டீர். மனிசி உம்மை உடனடியா வெளியில அனுப்பிவிட்டுது.''

மனோ அப்படியே நிலைகுலைந்து இருந்தாள். எவ்வளவு பெரிய இடி?

''இனி என்ன செய்யிறது மனோரஞ்சிதம். மனிசியிடம் போய் காலில் விழுந்தாவது மன்னிப்புச் கேளும்.''

மனோ துடித்துப்போய் மிஸிஸ் சற்குணத்தைப் பார்த்தாள்.

''ஏன் நான் மன்னிப்புக் கேக்க வேண்டும் ரீச்சர்? நான் என்ன பிழை செய்தனான்? எனக்கு ரான்ஸ்பரைப் பற்றிக் கவலையில்லை. நான் எங்கையுப் வேலைசெய்யத் தயாராகத்தான் இருக்கிறன். எங்கையாம் ரான்ஸ்பர்?''

''உமக்கென்ன தனிக்கட்டை, எங்கயும் போவீர். எங்களைச் சொல்லுங். மனிசியோடை கொளுவிக்கொண்டு வெளியில் அனுப்பப்பட்டால் போச்சுது.''

''எங்கையாம் ரான்ஸ்பர்?''

''அவுட் ஒப் த டிஸ்ரிக்ஸ் இல்லை. டிஸ்றிக்குக்குள்ள தான்...'' மிஸிஸ் சற்குணம் அவளுக்கு மாற்றம் கிடைத்த பாடசாலையின் பெயரைச் சொன்னாள்.. அயலிலுள்ள ஒரு சிறிய வித்தியாலயம் அது. கலவன் பாடசாலை.

''பரவாயில்லை...'' வார்த்தைகள் உதட்டளவில்தான். உள்ளத்தில் ஆத்திரம். கவலை. பழிதீர்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏதோ 'பணிஸ்மென்ற் ருன்ஸ்பர்' போல உம்மை உடனே அனுப்புகினம்.''

மனோ எதுவும் பேசாமல் எழுந்திருந்தாள். தனது றிஸ்ற் வாச்சைப் பார்த்தாள். பரீட்சை முடிய இன்னமும் ஐந்து நிமிடங்கள் இருந்தன.

''பயிவ் மினிற்ஸ் மோ...'' என்று மாணவிகளுக்கு அறிவித்தாள்.

* * *

உள்ளம் எரிந்தது. முல்லைத்தீவிலிருந்து அவளாக விரும்பித்தான் இக்கல்லூரிக்கு அவளுக்கு மாற்றம் கிடைத்தது. இப்போது அவள் விரும்பாமலேயே இன்னொரு பாடசாலைக்கு அனுப்பப்படுகிறாள். அது மாற்றம் அல்ல. பழி தீர்ப்பு. அதிபரின் கருத்துடன் ஒத்துப்போகாததால் ஏற்பட்ட முரண்பாட்டின் விளைவு.

கல்லூரி அன்று மனோரஞ்சிதத்தின் இடமாற்றத்தைக் கேள்விப்பட்டு கலகலத்து.

முதலில் கவலையில் ஆழ்ந்த மனோரஞ்சிதம் பின்னர் தெளிவடைந்தாள். அவள் வாழ்வில் சந்திக்காத நிகழ்ச்சிகளா? ரவீந்திரனின் அந்த இறுதிக் கடிதம் கிடைத்தபோது அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை விடவா இந்த மாற்றம் அதிர்ச்சியைத் தந்துவிடப்போகின்றது?

ரவீந்திரனின் அந்தக் கடிதம். அவள் அப்படியே இடிந்துபோய்க் கட்டிலில் சாய்ந்துவிட்டாள். அவள் கனவுகள், கற்பனைகள், மனக்கோட்டைகள் எல்லாம் சிதறித்தெறித்தன.

...''உனக்காகக் காலம் எல்லாம் காத்திருக்க நான் தயாராகத்தான் இருந்தேன் மனோ. ஆனால், சூழ்நிலை, சந்தர்ப்பம் சதி செய்து விட்டது. என் தாயின் வற்புறுத்தல். உன் குடும்பத்தினரின் அலட்சியம். என்னை மன்னித்து விடு, மனோ. பாதைகள் சந்திக்காது பிரிகின்றன. இன்னொரு பிறப்பு இருக்குமானால் ஆண்டவன் இப்படி ஒரு சதியை எங்கள் வாழ்வில் செய்யாமல் இருக்கட்டும். என் அம்மாவின் ஆசைக்காக நான் கலியாணம் செய்து கொள்வதென முடிவு செய்துவிட்டேன். நீயும் உன் பெற்றோர் பேசிக்காட்டுகிறவரை மணந்து சந்தோஷமாக வாழவேண்டும் என்பதுதான் என் ஆசை, நிம்மதி. வாழ்த்து...'' ரவியின் கடிதம். கடைசிக் கடிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவள் குமுறிக் குமுறி அழுதாள். எல்லாம் முடிந்துவிட்டன. முற்றுப்பெற்றுவிட்டன.

அந்தக் கடிதம் தந்த அதிர்ச்சியைவிடவா, இடமாற்றக் கடிதம் அதிர்ச்சியைத் தந்துவிடப் போகின்றது?

''உங்களை பிரின்சிபல் ஒருக்கா வரட்டாம்...''— கல்லூரி ரைப்பிஸ்ற் சரசுவின் தூது, அவள் அதிபரின் அறைக்குள் நுழைந்தாள்,

அதிபர் ஒருகணம் அவளை நிமிர்ந்து பார்த்தாள். பின்னர் சங்கடத்துடன் மேசையில் இருந்து கடிதங்களில் கவனம் செலுத்தினுள். மேலே சுழன்ற ஃபானின் காற்றுத் தள்ளலால் அவள் உச்சித் தலைமயிர் கலைந்து அலைந்தது, வெள்ளிக்கம்பிகளாக அவை ஒளியில் மின்னின.

''இ'ரும், மிஸ், சிவராமன்... நான் இப்படி வருமென எதிர்பார்க்கவில்லை. இமிடியேற்ரு உம்மை ரூன்ஸ்பர் பண்ணுவினம் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நல்லதொரு ஆசிரியையின் சேவையை எங்கள் கல்லூரி இழக்கின்றது. இற் இஸ் எகிறேற் லொஸ்ற் ..''

அதிபர் மிஸ் கனகசபையின் வார்த்தைகள் இவ்வளவு கெதியில் எதிர்பார்க்கவில்லை.

அதிபர் நீட்டிய கடிதத்தை மனோரஞ்சிதம் வாங்கிக்கொண்டாள். எதுவும் பேசவில்லை,

மனோவின் மௌனம், மிஸ் கனகசபையின் நெஞ்சில் இடித்தது.

''நீர் ஒரு புரட்டஸ் லெற்றர் எழுதித் தாரும். நான் றெக்கமண்ட் பண்ணி அனுப்பி வைக்கின்றேன்.''

''வேண்டாம் மிஸ்.''

அதிபர் மிஸ் கனகசபை தலையை நிமிர்த்திப் பார்த்தாள். கண்ணுடியூடாக அவள் விழிகள் மனோவின் முகத்தில் ஆழமாகப் பதிந்தன.

''மிகவும் நன்றி, தாங்ஸ் மிஸ்.''

மனோ அந்த அறையை விட்டு வெளியேற முயன்ருள்.

''மனோ...''—அதிபர் மிஸ் கனகசபை ஒரு போதும் அவள் பெயரைச் சொல்லி அழைத்ததில்லை. கதிரையை விட்டு எழுந்து அவள் அருகில் மிஸ் கனகசபை வந்தாள். மனோவின் தோளில் அதிபரின் வலக்கரம்.

''ஐ ஆம் சொரி மனோ.''

மனோ மௌனமாக நின்ருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''விஸ் யூ ஓல் த பெஸ்ற் ஒஃப் லக்...''

''தாங்ஸ்...''

மனோ அறையை விட்டு வெளியே வந்தாள். அவளுக்கு மிஸ் கனகசபை வாழ்த்தி அனுப்பியிருக்கிறாள். வாழ்த்து யாருக்கு வேண்டும்?

''ரீச்சர்...''

தயங்கித் தயங்கி அவள் அருகில் வசந்தி வந்தாள். அவள் இடமாற்றத்திற்கு ஏதோ ஒரு வகையில் காரணமான வசந்தி.

''என்ன வசந்தி...?''

வசந்தி எதுவும் பேசாமல் நின்றிருந்தாள். அவள் சிவந்த முகம் கவலையால் மேலும் சிவந்து கிடந்தது. கண்கள் கலங்கி, பனி முத்துக்கள் சிதறி விழுவன போல, இமையருகில் பளபளத்தன.

கல்லூரி இறுதி மணி ஒலித்தது.

''வாறன், ரீச்சர்...'' வசந்தியின் கண்ணீர் முத்துக்கள் அவள் கவலையைத் தெரிவித்தன.

மனோ வீடு நோக்கி நடந்தாள். கல்லூரி கேற்றைத் தாண்டினாள். கேற்றோடு ஒரு பெரிய கார் நின்றிருந்தது. பிள்ளைகளை ஏற்றிச்செல்ல எத்தனையோ கார்கள் வழக்கமாக அங்கு நிற்கும். வழக்கம்போலவல்ல. அக்காரின் செந்நிறம் வெய்யிலில் பளபளத்தது. அவள் அக்காரைக் கடந்தபோது மனம் ஒருகணம் ஒடித்திக்கிட்டது. அக்காரின் றைவிங் சீற்றில் அமர்ந்திருந்த ஒருவர்... அவர் ரவீந்திரன்.

அந்த முகத்தை... அந்தக் கண்களை அவள் மறக்க மாட்டாள்.

மின்னல் பொழுது. ரவீந்திரனும் அவளை வியப்புடன் பார்த்தான். அவள் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டு தலையைக் குனிந்து கொண்டு நடந்தாள்.

கால்கள் தளர்ந்தன. பின்னின, விழிகள் குளமாகத் துடித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரவுச் சாப்பாட்டிற்கு மனோவை, மல்லிகா வந்து அழைத்தாள். மல்லிகாவை மனோ நிமிர்ந்து பார்த்தாள். அழகாக இருந்தாள். வாரிப் பின்னிய கூந்தல். நெற்றித் திலகம். அவளுடைய இளமை...?

''என்னக்கா?...''

''எனக்குப் பசிக்கவில்லை, மல்லி.''

''ஏன் அக்கா? இன்றைக்குப் பள்ளியில் இருந்து வந்ததில் இருந்து பார்க்கிறேன். நீ கலகலப்பாகவே இல்லை. பள்ளியில ஏதாவது நடந்ததா, அக்கா?''

தங்கை மீண்டும் ஒரு தடவை ஆழமாக ஊன்றிப் பார்த்தாள்.

''அப்படியில்லை, மல்லி. மனம் சரியில்லை. என்னை வேற பாடசாலைக்கு மாற்றி விட்டினம் அருகிலதான்...''

அவள் ஒருத்தருக்கும் தனது மாற்றம் பற்றிச் சொல்லவில்லை.

''ஏனக்கா?'' என்று திகைப்புடன் கேட்டாள் மல்லிகா.

''ஆருக்குத் தெரியும்...''

''அண்ணரிடம் சொல்லி ருன்ஸ்பரைக் கான்சல் செய்தால் என்ன?''

''வேண்டாம் புதுப்பள்ளிக்கே போவதென்று முடிவு செய்திட்டன்.''

''கிட்டடிதானே? சரி... வாக்கா சாப்பிடுவம்—''

தங்கையின் நச்சரிப்புக்காகச் சாப்பிடச் சென்றாள். சாப்பிட்டுவிட்டு மீண்டும் கட்டிலில் சாய்ந்தாள். அவளது உள்ளத்தில் இடமாற்றம் ஆக்கிரமிக்கவில்லை? கல்லூரி வாசலில் நின்றிருந்த அந்தச் சிவப்பு வர்ணக்கார். 405. அதிலிருந்த ரவீந்திரன். வியப்புடன் அவளை நோக்கிய அந்த விழிகள். ரவி... ரவி... மனோ... மனோ. இதயத்தில் குமுறிக்கொண்டு துயர் பொங்கியது. 'எல்லாரும் என்னை ஏமாற்றி விட்டீர்களே? என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பிற்காக... பணத்திற்காக... என் நிம்மதியான வாழ்வை எல்லாரும் சேர்ந்து திட்டமிட்டு அழித்துவிட்டீர்களே?"

அறைக்குள் மீண்டும் மல்லிகா வந்தாள். அவள் ஏதோ சொல்ல விரும்புபவள் போல நின்றிருந்தாள்.

"அக்கா..."

"என்ன மல்லி."

"இன்றைக்கு மத்தியானம் சின்னப்பு அம்மான் வந்திருந்தார்."

"... ம்..."

"உனக்கு ஒரு கலியாணம் பேசிவந்தார்."

அலட்சியப் புன்னகையுடன் தங்கையைப் பார்த்தாள், மனோ.

"எனக்கொரு கலியாணம்... இவயளுக்கு வேறு வேலையில்லை. வலிய வந்த சம்பந்தத்தைத் திட்டமிட்டுக் கலைத்துவிட்டு கலியாணம் பேசுகினம்... முப்பத்தாறு வயதில் கலியாணம் பேசுகினம். ஆருக்கு வேணும்... ஆர் இங்க கலியாணம் இல்லையெண்டு அழுதினம்?"

மனோவின் வார்த்தைகள் பலமானவை. இதயத்தின் ஆத்திர வெளிப்பாடு.

மல்லிகா எதுவும் பேசாமல் தமக்கையைப் பார்த்தாள்.

"இரண்டு வரியம் உழைக்கட்டும். இப்ப அவளுக்கு என்ன வயதா ஆகிவிட்டது? என்று இம்முறை ஆர் சொன்னார்கள்...?"—மனோ.

"அப்படிச் சொல்கிற காலம் கடந்திட்டுது அக்கா. இப்ப எப்படியாவது உன்னை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுத்துவிட வேண்டும் என்றுதான் பார்க்கினம், ஊருக்காகவாவது..."

"ஏன் அவள் தான் கலியாணம் வேண்டாம் என்கிறாள் என்று ஊராக்களுக்குச் சொல்லித்திரிய வேண்டியதுதானே?"

"அம்மா அப்படிச் சிலருக்குச் சொன்னதாக நானும் கேள்விப்பட்டன். அவ என்ன செய்வா வீட்டு ஆம்பிளையள் கையைக் கட்டிக்கொண்டு இருக்கேக்கை?"

வெளியில் பாட்டுச் சத்தம் எழுந்தது. குடிவெறிப் பாட்டு.

"ஐயா வந்திட்டார்!"

"சரி பிறகு?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்தக் கலியாணம் சரியா வரும்போல இருக்குது. நீதான் ஒப்புக்கொள்ள வேண்டும்.''

''என்னைக் கேட்டா இங்க எல்லாம் நடக்குது?''

''இது நல்ல சம்பந்தமாம். பெரிய உத்தியோகமாம். இரண்டாந்தாரம் என்றாலும் அவருக்கு வயது குறைவாம். பிள்ளைகளும் இல்லையாம்.''

மனோ பெரிதாகச் சிரிக்கத் தொடங்கினாள். மல்லிகா தமக்கையை வியப்புடன் பார்த்தாள். ''அக்கா...?''

''மல்லி... மல்லி... எனக்கு ஒரு உதவி செய்யிறியா?''

''என்னக்கா?''

''எனக்குக் கலியாணமே வேண்டாம் என்று நான் சொன்னதா அவர்களிடம் சொல்லிறியா? எனக்குக் கலியாணம் பேசி அவர்கள் பட்ட கஷ்டம் போதும். எனக்காக அவர்கள் பட்ட துயரம் போதும், நான் இருக்குமட்டும் அவர்களுக்கு உழைச்சுத் தருகிறன் என்று சொல்லிவிடு.''

மனோவின் கண்கள் கலங்கின.

''கலியாணம்... எனக்காம்.'' உனக்காவது நேரத்தோட பேசச் சொல்லு மல்லி. உனக்கே இப்ப கலியாண வயது கடந்திட்டுது ''

மல்லிகா ஏக்கத்தோடு தமக்கையைப் பார்த்தாள்.

''சந்திரா புத்திசாலி'' என்றாள் மனோ. ''நீயும் நானும் பேயள். முழுப்பேயள்....''

அவர்களிடையே நீண்ட மௌனச் சுவர். மனோ கட்டிலில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள். மல்லிகா எழுந்து சென்றாள்.

மல்லிகாவிற்குக் கலியாணம் பேசச் சொல்லவேண்டும். அவள் கலியாணத்திற்கென ஏதாவது சேமிக்கப்பட்டிருந்தால் அவற்றை மல்லிகாவின் நல்வாழ்விற்காகச் செலவிடவேண்டும்.

அவள் கலியாண வாழ்வு? முடிந்துவிட்டது. 'ரவி உங்களுடன் எல்லாம் முடிந்து விட்டன.'

அவள் அப்படியே கண் உறங்கிப் போனாள்.

திடீரென விழிப்பு ஏற்பட்டது. அறையில் 'லைற்' எரிந்துகொண்டிருந்தது.

அவள் கண்கள் மேசையை நாடின. நேரம் 11 மணி. இரவு. மேசைக் கடிகாரம் காட்டியது.

8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்ரூமிற்குச் சென்று திரும்பும்போது மல்லிகா தன் படுக்கையில் கிடந்து ஏதோ புத்தகம் படித்துக்கொண்டிருப்பது தெரிந்தது மல்லிகா நித்திரை விழித்து படிக்கும் பெண் அல்லள்.

அதிசயம் தான். மனோ மெதுவாக படுக்கையை நெருங்கினாள்.

''மல்லி...!''

துடித்துப்போய் திரும்பிப் பார்த்தாள் மல்லிகா. அவளை அறியாமல் அவள் கரம் புத்தகத்தை மறைக்க முயன்றது.

முகத்தில் வியர்வைத் துளிகள் முத்தெனப் படர்ந்தன.

''கதைப் புத்தகம் அக்கா.''

உறை போட்ட புத்தகம். அந்த உறை ..? மனோவிற்கு திடீரென நினைவில் ஒரு வருடல்.

தம்பிநாதன் வைத்திருந்த புத்தகம். தமிழ்வாணனின் உடலுறவில் மனைவியை மகிழ்விப்பது எப்படி? அந்த நூல்தானோ? இருக்காது.

மல்லிகா ஏன் மறைக்க முயலவேண்டும்? நெற்றியில் ஏன் வியர்வை? முகத்தில் ஏன் கலவரம்?

''பதினொரு மணியாகுது. லைற்றை அணைத்திட்டுப் படு...''

அவள் அவ்விடத்தைவிட்டு வெளியேறித் தன் அறைக்குள் புகுந்துகொண்டாள். லையிற்றை அணைத்துவிட்டுப் படுத்தாள். நித்திரை வர மறுத்தது.

மல்லிகா? அவளுக்கு இப்போது வயது முப்பது. அவளோ...? அவளுக்குப் பின்னர் பிறந்த சந்திராவுக்கு ஒரு குழந்தை. உணர்வுகள்... உணர்ச்சிகள்... உறங்காத உணர்ச்சிகள்.

தம்பிநாதனிடம் அவள் புத்தகம் வாங்குகிறாளா? அவன் போக்கு அவளிற்குச் சரியாகப் படவில்லை. இன்றைய இளைஞன் அவன். மல்லிகா படிப்பது அந்தப் புத்தகமாக இருந்தால் எச்சரிக்க வேண்டும். அனுபவரீதியாக உணரவேண்டியதை புத்தக வாயிலாகப் படிப்பதில்... காலம் அவள் பெண்மையைப் பூரணப்படுத்தாமல் வீணே அழியவிடுகின்றது.

காலமா? மனிதர்களா?

எல்லாரிடமும் சொல்லிவிடவேண்டும். அவளிற்கு இனிக் கலியாணம் வேண்டாம். மல்லிகாவிற்குப் பேசி முற்றாக்கும்படி. கேட்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் முயலமாட்டார்கள். அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் நினைப்பது போல மாப்பிள்ளை தேடுவது இலகுவல்ல. அவளுக்கும்தான் அவர்கள் தேடினார்கள்.

ரவீந்திரனிற்குக் கலியாணம் முடிந்துவிட்ட செய்தி தெரியவந்தது.

''ஏமாத்திப்போட்டான்...'' என்றார் அண்ணன். அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவளை ரவி ஏமாற்றினானா?

அதன் பின்னர் இரண்டாண்டுகள்... மூன்றாண்டுகள். பத்தாண்டுகள்.

ஐந்தாறு சம்பந்தங்கள் பேசி வந்தன. அவள் எதிலும் கலந்துகொள்ளவில்லை. இது ஒன்றும் சரிவரப்போவதில்லை என்பதில் அவளிற்கு அசையாத நம்பிக்கை.

ஆயிரக்கணக்கில் சீதனம் கேட்டார்கள். நன்கொடை கேட்டார்கள். கல்வீடுவாசல் கேட்டார்கள்.

அவ்வளவுதான்.

''இந்தக்காணியில பெரிசா நல்லதொரு வீட்டைக் கட்டிப்போட்டுக் கலியாணம் பேசினால் இலேசில சரிவரும். வாறவையெல்லாம் வீடுவாசல் தானே கேக்கினம்.'' என்று அண்ணி ஒரு ஆலோசனையை வழங்கினாள். அவள் குடும்பம் பெருத்துவிட்டது. இருக்கிற வீடு எல்லாரும் இருக்கக் காணாதுதான். அண்ணன் ஒத்து ஊதினான். அம்மாவிற்கும் சரியாகப்பட்டது.

ஐயா மறுப்புத் தெரிவிக்கவில்லை. மறுநாளே திட்டமிடப்பட்டது.

அவள் உழைப்பில் சேகரித்து வைத்திருந்த பணம் அடுத்த சில மாதங்களில் கல்வீடாக மாறியது. அண்ணன் அடிக்கடி கூறிக்கொண்டான்.

''நான்தான் கடன் கிடன்பட்டு மாறிக்கீறிக் கட்டுறன்... தங்கச்சிக்குத்தான்.''

கல்வீடு கட்டிய பிறகும் மாப்பிள்ளை தருவதற்கு யாழ்ப்பாணத்துப் பெற்றார் டொனேசன் கேட்டார்கள்.

எல்லாம் முடிந்து போனவை. நினைவுகள் ஏன் இப்படி ஓயாமல் எழுகின்றன?

மனோ படுக்கையில் புரண்டாள். அவர் கலியாணம் செய்துகொண்டார்.

'ரவி . ரவி . உங்களில் பிழையில்லை. என்னில்தான் பிழை '

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் நாய் குரைத்தது. அது குரைத்த விதத்தி லிருந்து யாரையோ எதையோ கண்டு குரைப்பது போலப் பட்டது. அவள் அறையின் பின்புறத்தில் குரைப்பு ஒலி. அவள் எழுந்து யன்னல் ஊடாகப் பார்த்தாள். அடிவளவு இரு ளில் கிடந்தது. தம்பிநாதன் வீட்டு வேலி தெரிந்தது.

ஒன்றையும் காணோம். அவள் வீட்டு நாய் ஓயாமல் குரைத்தது.

நீண்டநேரம் அவள் யன்னல் அருகில் நின்றிருந்தாள்.

'கள்ளனோ?'

வானத்தில் கண் சிமிட்டும் நட்சத்திரங்கள். சூழல் இருளில் மூழ்கி அமைதியடைந்தது.

யன்னலினூடாக தனிமை இரவில் வானத்தில் சித றிக் கிடக்கும் நட்சத்திரங்களைப் பார்ப்பது மனதிற்கு மகிழ்ச்சி யையும் அமைதியையும் தருவது போன்றதொரு பிரமை. நள்ளி ரவில் வானத்தைப் பார்க்கின்ற சந்தர்ப்பம் இன்றுதான் கிடைத்த தற்செயல் நிகழ்ச்சி.

மனிதனின் கவலைகள். யந்திரவேக உழைப்பு என்பன எங்கே இயற்கையை முழுமையாக ரசிக்கவிடுகின்றது. மாலையா னதும் அறைக்குள் முடங்கிக்கொள்ளும் அவலம். அலுப்பு.

வானத்தின் கிழக்குக் கோடியிலிருந்து ஒரு நட்சத்திரம் உதிர்ந்து விழுந்ததுபோல எரிவெள்ளியொன்று ஒளிக்கோடிட்ட படி சிதைந்து அழிந்தது.

அவள் வாழ்வும்...? நம்பிக்கை ஒளியில் காத்திருந்தாள்.

உதிர்ந்துவிட்டது.

'ரவி... ரவி... என்னைப்போல துரதிஷ்டம் செய்தவர் வர்கள் இருக்கமாட்டார்கள். எனக்காகக் காத்திருந்த நல் வாழ்வை அவமே கைதவற விட்டுவிட்டேன்.'

அவளையறியாமல் கண்கள் பனித்தன. படுக்கையில் சரிந்தாள்.

கண்ணீர் பெருகத் தொடங்கியது.

● ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறியதொரு பாடசாலை. நகரத்தின் பரபரப்பிலிருந்து விலகி அமைதியான ஒரு சூழலில் அது அமைந்திருந்தது. சடந்த ஆண்டுதான் மகாவித்தியாலயம் என்ற தரத்திற்கு உயர்த்தப்பட்டிருந்தது. பரபரப்பும் கலகலப்பும் மிக்க கல்லூரியில் கற்பித்துப் பழக்கப்பட்ட மனோரஞ்சிதம் இப்புதிய பாடசாலையில் காலெடுத்து வைக்கும்போதே தயக்கத்துடன் நுழைந்தாள்.

மாணவ மாணவிகள் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருந்தார்கள். சீருடையில் பளிச்சென விளங்கிய மாணவிகளைப் பார்த்துப் பார்த்துப் பழகிப்போன கண்கள், சீருடையின்றி அழுக்கு நிறைந்த உடுப்புகளுடன் திரிந்த மாணவர்களைப் பார்த்ததும் சற்று கஷ்டப்பட்டன.

ஆசிரியர்கள் இங்கே பொறுப்பாகவில்லை என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

தலைமை ஆசிரியரின் அறையைக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தது. ஒருவிதமாகக் கண்டுபிடித்து அவர் அறை வாசலில் தயங்கி நின்றாள். மாணவர்கள் அவளை வேடிக்கை பார்த்தார்கள்.

''புது ரீச்சரடா ''

''அங்க பாரடி புது ரீச்சர் ''

அவர்கள் பெரிதாகவே அவளைச் சுட்டிக்காட்டிப் பேசிக்கொண்டார்கள்.

தலைமை ஆசிரியரின் அறையில் சிலர் நின்றிருந்து ஏதோ சுவையாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் யார் அப்பாடசாலை அதிபர் என்பதை அவளால் அனுமானிக்க முடியவில்லை. ஆனல் அந்த அறையில் இருந்த ஒரேயொரு மேசை முன் அமர்ந்திருந்தவர்தான் அதிபராக இருக்கவேண்டும்.

அவள் நேரத்தைப் பார்த்தாள். காலை 8-45.

எட்டரை மணிக்குத் தொடங்கவேண்டிய பாடசாலை இன்னமும் ஆரம்பமாகவில்லை.

அவள் வாசலில் நிற்பதை அறையிலிருந்த ஒருவர் கண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாஸ்டர் உங்களிடம் யாரோ...''

''காத்திருக்கினம்...''

அவர்களில் இருவர் வெளியேறினர்.

''வாருங்கோ...'' என்று அழைத்தார் தலைமை ஆசிரியர்.

மனோ, தயக்கத்துடன் உள்ளே நுழைந்தாள்,

''இங்கே இப்போதே ஆசிரியர்கள் மேலதிகம். எட்டு ஆசிரியைகள், ஒன்பது ஆசிரியர்கள் .. அவர்களில் இரண்டு பட்டதாரிகள் வேறு. இருக்கிறவர்களுக்கே ரைம்ரேபிள் போட்டு வேலை கொடுக்க முடியாமல் நான் திண்டாடிக்கொண்டிருக்கிறன். இப்ப உங்களையும் அனுப்பிப் போட்டினம். அவையளுக்கென்ன நினைச் சவுடனை இங்கை அனுப்பவேண்டியதுதான்... நான் எழுதப்போறன், உங்களுக்கு இங்கே ரைம்ரேபிள் போடமுடியாது என்று ''

தலைமை ஆசிரியர் வந்ததும் வராததுமாக பொரிந்து தள்ளினார். வரவேற்பே மனோவிற்குக் கலக்கத்தைக் கொடுத்தது.

''எங்களுக்கேன் பட்டதாரிகள்... பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்தான் தேவை...'' என்றார் தலைமை ஆசிரியருக்கு முன் நின்றிருந்த ஒரு ஆசிரியர். உப அதிபராக இருக்கவேண்டும்.

''என்ன பெயர்..? மிஸ். சிவராசா '' அதிபர் அவளை நிமிர்ந்து பார்த்தார். அவருக்கு ஐம்பது வயதிருக்கலாம். ''கலியாணம் செய்யவில்லையா?''

மனோரஞ்சிதம் அவரைப் பார்த்தாள். அவள் பார்வையில் அலட்சியம்.

''உமக்கென்ன பாடங்களை இங்கே தாறது? எதுக்கும் யோசிப்பம் ரீச்சர். நீங்கள் இன்றைக்கு ஆசிரியர் அறையில் சும்மா இருங்கோ .. நாளையிலிருந்து என்ர ரைம்ரேபிளைத் தாறன். செய்யுங்கோ .. அடுத்த தவணையோட பார்ப்பம்...''

அவள் அவர் அறையிலிருந்து வெளியில் வந்தாள். சற்றுத்தள்ளி ஒரு அறையில் ஆசிரியர்கள் ஒரு பக்கமாகவும் ஆசிரியைகள் இன்னொரு பக்கமாயும் அமர்ந்திருந்து அரட்டை அடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அதுதான் ஆசிரியர் தங்கும் அறை போலும்.

அவள் அந்த அறைக்குள் நுழைந்தாள். பாடசாலை ஒரே சத்தத்தில் மூழ்கிக் கிடந்தது.

அவளை அங்கிருந்தோர் அதிசயப் பிராணியைப் பார்ப்பது போலப் பார்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல வேளை அவளுக்கு ஏற்கனவே பழக்கமான ஆசிரியை மிஸிஸ் ராகுலன் அங்கிருந்தாள், ''மனோவா, வாரும்... வாரும்... உமக்கு இங்க ருன்ஸ்பர் என்று எனக்குத் தெரியாது. என்ன மிஸ். கனகசபையோட கொளுவலா?...

மனோவிற்கு நின்மதியாக இருந்தது. தெரிந்த ஒருவர்.

அவள் உதடுகளில் புன்னகை. கதிரையொன்றில் அமர்ந்தாள்.

அங்கிருந்த ஆசிரியைகள் அவளைப் பார்த்துப் புன்னகைத்தனர்.

''இவ சங்கீதம்... இவ ஹோம் சயன்ஸ்... இவ மற்ஸ்... இவ சோஷல் சயன்ஸ்...'' என்று அவள் முன் அமர்ந்திருந்த ஆசிரியைகளை மிஸிஸ் ராகுலன் அறிமுகம் செய்து வைத்தாள். புதுமையான அறிமுகம்.

''எங்கட பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்துமன் அப்பா...'' என்றாள் சங்கீதம்.

பாடசாலை ஆரம்பிப்பதற்கான மணி ஒலித்தது. பிறேயர் ஆரம்பமானது. ஆரம்ப மணி அடித்த பின்னரும் வெகு நேரத்தின் பின்னரே வகுப்பு ஆசிரியர்கள் வகுப்புகளுக்குச் சென்றனர்.

நல்ல பள்ளிக்கூடம், நான் முன்னர் கற்பித்த கல்லூரியை எண்ணிக்கொண்டாள். அங்கிருந்த ஒழுக்கம், கட்டுப்பாடு.

அவள் ஆசிரியர் அறையிலிருந்த அன்றைய தினசரி ஒன்றை எடுத்தாள்.

''நீர் முந்தி எங்க படிப்பிச்சனீர்?''

ஹோம் சயன்ஸ் ரீச்சர் அவளிடம் கேட்டாள். அவள் தான் படிப்பித்த கல்லூரியின் பெயரைச் சொன்னாள்.

''என்னுடைய பெயர் மிஸிஸ் காத்தவராயன். இங்க ஒரு சுகம், ரீச்சர், படிப்பிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எல்லாப் பெரிய பள்ளிக்கூடங்களுக்கும் அட்மிசன் கிடைக்காத பிள்ளையள்தான் இங்க படிக்குதுகள். கழிச்சுவிட்டதுகள். படிப்பே ஏறும்? எல்லாம் முழு மக்குகள். படிப்பிச்சும் புண்ணியமில்லை. சும்மா வகுப்பிற்குப் போய் வந்தால் சரி.''

மனோ பதிலிற்குச் சிரித்தாள். உள்ளத்தில் எரிச்சல் படர்ந்தது.

''புதுக்க வந்தனீங்கள் இங்க படிப்பிச்சுக் காட்டிப் போடாதையுங்கோ ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வியப்புடன் மிஸிஸ், காத்தவராயனைப் பார்த்தாள். அப் பாடசாலையின் நிலை புரிவது போல இருந்தது. மனதிற்குச் சங்கடமாக இருந்தது.

படித்து அறிவு பெற்று நல்ல பிரஜைகளாக வர வேண்டிய மாணவர்கள், பாழடிக்கப்படுகின்றார்களா?

அதனுல்தான் இன்றைய மாணவருலகம் பாடசாலை ஆசிரியர்களை நம்பாமல், ரியூசன் சொல்லித் தரும் ரியூற்றறிகளை நம்பி காலை மாலை அலைகின்றார்களோ?

அவள் தினசரியில் மூழ்கிப்போனுள். முதலாம் பாடம் முடிவுற்ற நற்கான மணி ஒலித்தது. ஆசிரியர்கள் அந்த அறைக்குள் வந்தனர். அவள் எவரையும் கவனியாது பேப்பரில் மூழ்கிக் கிடந்தாள்.

''எடி மனே... நீ இங்கயா?'' — வியப்புடன் ஒரு குரல் ஒலித்தது. பரிச்சயமான குரல்.

மனே நிமிர்ந்து பார்த்தாள்.

ராஜி, அவள் பல்கலைக்கழகத் தோழி. அந்த ராஜி.

''ராஜி நீயா...?'' வியப்பால் மனேவின் விழிகள் பிதுங்கின்றன. முகத்தில் மகிழ்ச்சி.

''ஓமோம் .. ரெண்டு மாதம் ஆகுது, இந்தப் பள்ளிக்கு வந்து, எவ்வளவு வருடம் ஆகுது நாம் சந்தித்து'' நீ அப்படியேதான் இருக்கிருய்? நான்தான் கொழுத்துவிட்டன்...''

தோழிகள் இருவரும் அருகருகில் அமர்ந்துகொண்டார்கள்.

''சொல்லடி... எனக்கு இந்தப் பீரியட் ஃபிரி. ரவீந்திரனை ஒருநாள் கண்டேன். பெரியதொரு காரில் போனுன். அருகில் ஒருத்தி... மனிசியாக்கும், நீ அவனை ஏமாத்திப் போட்டாய்.''

மனே ராஜியை நிமிர்ந்து பார்த்தாள்.

கண்கள் கலங்கிவிடலாம்.

''அது பெரிய கதை ராஜி. ஆறுதலாகச் சொல்லுறன்... முடிந்த கதை.''

துயரம், குரலில் ஏக்கம்.

''எனக்கு ஓரளவு தெரியும்... மனே.''

''நீ எப்படியடி?...''

''பழைய மாதிரித்தான்''

''அப்படியென்றுல்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படித்தான்... இப்பவும் சமூகத்தை பழிவாங்கிறன்... என் அக்காமாருக்கு நல்லதொரு வாழ்வைக் காட்ட என்னுல் முடியவில்லை. அவரின் குடும்பத்தில் இரண்டு அக்காமாருக்கு ஒருவிதமாகக் கலியாணத்தை ஒப்பேற்றிவிட்டார். இன்னமும் ஒரு தங்கை .. இப்பவே அவர் ஒடிந்து போனுர். கடன்... கடன்... சீதனக் கடன்... நானும் அவரும் கலியாணம் செய்து கொள்ளவில்லை. அவர் உழைத்து தன் குடும்பத்திற்கு கொடுக்கிருர். நான் உழைத்து என் குடும்பத்திற்குக் கொடுக்கிறேன். அவ்வளவுதான்..."

இரக்கத்தோடு ராஜியைப் பார்த்தாள், மனோ.

"உன் வீட்டாருக்குத் தெரியாதா?..."

"கூ கெயர்ஸ்... தெரிந்தால் என்ன? தெரியாவிட்டால் என்ன?"

"நீ இப்பவும் இப்படி நடக்கிறது தவறடி, ராஜி."

சிரிப்புடன் மனோவைப் பார்த்தாள், ராஜி.

"எதடி தவறு? உரிய வயதில கலியாணமாகாத நானும் அவரும் அப்படி நடக்கிறதிலே என்ன தவறு? என்ருவது ஒருநாள் இருவரும் கட்டிக்கொள்ளுவோம் என்ற நம்பிக்கையில நடக்கிறம். இஞ்க பார்... இந்தப் பாடசாலையையே எடுத்துக்கொள். இந்தப் பாடசாலை அதிபருக்கு எத்தனை வயது? நாற்பத்தொன்பது? ஐந்தாறு பிள்ளையள்... அப்படியிருந்தும் இந்தப் பள்ளிக்கூடத்தில ஒரு ஆசிரியையோட... அதுவும் அவ மிஸிஸ்... அது தவறில்லையா? கலியாணம் கட்டிய பிறகே மேயிறவையை விடவா நாங்கள் தவறு செய்யிறம்? அதுமட்டுமா?... என்னத்துக்கு அவையெல்லாம். தவறு மனதில்தான் மனோ."

"மெதுவாகப் பேசடி..."

ராஜி பெரிதாகச் சிரித்தாள்.

"ஏன்ரி பயப்படுகிருய்..."

"ஆராவது தவரு நினைக்கப்போகினம் .."

"உனக்கு இன்னமும் மனதில் திடமில்லையடி. ஒரு விசயத்தைக் கேள். எங்கட ஹெட்மாஸ்ரருக்கு எப்படியோ, எனக்கும் சிவத்திற்குமுரிய தொடர்பு தெரிந்திருக்கிறது. அதுவும் தவருகப் புரிந்துகொண்டு, என்ன ரீச்சர் என்னைக் கவனிக்கிறியள் இல்லை என்று ஒருநாள் கேட்டார். கவனிக்கச் சொல்லுறன் என்றன். அதோட கதையை விட்டிட்டார்."

ராஜி அப்படியேதான் இருக்கிருள். தன் மனதில குமைகின்ற ஏக்கங்களை, கவலைகளை, ஏமாற்றங்களை இப்படித் தீர்த்துக்கொள்கின்ருளோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிவத்தைக் கெதியில் கட்டிக்கொள் ராஜி.''

சிரிப்பு. ஆயிரம் அர்த்தச் சிரிப்பு.

''கட்டத்தான் போகிறேன், மனே. எப்ப என்றது தான் தெரியாது...'' வெறிக்கப் பார்த்தாள். கண்முன் அவர்கள் கடக்கவேண்டிய தடைகள், பாதையின் குறுக்கே கிடந்தன.

அவர்கள் பேச்சு வேறு பாதையில் திரும்பியது.

''இந்தப் பள்ளிக்கூடம் எப்படி ராஜி?''

''நல்ல பள்ளிக்கூடம்... முக்கால்வாசிப் பேர் படிப்பிப்பதில்லை. சுகமாக பொழுது போக்கிறதுக்காக இங்க வந்திருக்கினம். பிள்ளையள் கெட்டிக்காரர்... நல்ல முறையில் படிப்பித்தால் முன்னுக்கு வந்திடுங்கள். எல்லாம் ஏழைப் பிள்ளையள். பணக்காரப் பிள்ளைகள்... செல்வாக்குள்ள பிள்ளைகள் ஏன் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வருகுதுகள், பெரிய பள்ளிக்கூடங்களில் அட்மிசன்... ஒவ்வொரு பாடத்துக்கும் ரியூசன்... கல்விச் சுரண்டல் என்பதன் அர்த்தத்தை நீ இங்கே நல்லாக் காண்பாயடி. நான் வாங்குகிற சம்பளத்துக்குத் துரோகம் செய்வதில்லை. என்னால் கற்பிக்கக் கூடியளவிற்குச் சொல்லிக் கொடுக்கிறேன் மனே.''

''எனக்கு ரைம்ரேபிள் போடமாட்டார் போல இருக்குது ..''

''அந்தாள் இப்படித்தான்... புதுக்க வாறவையிடம் தன் ரைம்ரேபிளை முதலில் கட்டிவிட்டிடும், பின்னர்தான் போடும்... சும்மா இருக்க நல்ல வழி.''

மூன்றும் பாட நேரமணி ஒலித்தது.

● ●



அன்று போயாதினம், விடுமுறை நாள். அவள் வீட்டில் இருந்தாள்.

சின்னப்பு அம்மான் வந்திருந்தார். அண்ணனுடன் பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோவால் அனுமானிக்க முடிந்தது. அவருக்குக் கலியாணம் பேசுகின்றார்கள். ஊருக்காக. உலகத்திற்காக.

'இன்று முடிவாகக் கூறிவிடவேண்டும்.'

மல்லிகாவிற்கு உடனடியாகக் கலியாணம் பேசி முற்றுக்குங்கள். இல்லாவிட்டால் தவறுகள் நடந்துவிடலாம் என்று கூறிவிட வேண்டும். இரவு நடந்த ஒரு சம்பவம் அவளுக்குத் திகிலைத் தந்திருந்தது. அதற்காக அவள் மல்லிகாவைக் குறை சொல்லத் தயாராகவில்லை.

இரவு, நள்ளிரவைத் தாண்டியிருக்கும். இருந்தாற் போல தூக்கம் கலைந்தது. அறைக்குள் ஒரே வெப்பம். வியர்வை வழிந்தது. யன்னல் கதவுகளைத் திறந்து விட்டால் காற்றுவரும்.

மனோ எழுந்து யன்னல் கதவுகளை திறந்து விட்டாள்.

வெளியே இருளின் அமைதியில் நிலவில் பின்வளவு குளித்துக் கொண்டிருந்தது.

தம்பிநாதன் வேலியோடு நின்றிருந்த பனை மரத்தின் அருகில் இருவர் நிற்பது தெரிந்தது. ஒரு கணம் மனோ திடுக்கிட்டுப் போனாள். கள்ளர்களோ? உற்றுப் பார்த்தபோது அவள் இதயம் பயத்தால், வேதனையால் ஒரு கணம் உறைந்து போனது.

மல்லிகா, கூட நிற்பது யார்?

தம்பிநாதன்.

'கடவுளே... நடக்கக்கூடாதது'

நடக்கவேண்டியது நடந்திருந்தால், நடக்கக்கூடாதது ஏன் நடக்கிறது?

இது காதலா? நிச்சயமாக இல்லை. மனப் பொருத்தமோ வயதுப் பொருத்தமோ அற்றவர்களிடையே ஏற்படும் உந்தல்.

மனோவிற்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. பயம் .. பதற்றம் .. கவலை.

தம்பிநாதன் அவளை அணைக்க முயல்வது தெரிந்தது. அவள் திமிறுவதும் தெரிந்தது.

இது புதிதாக ஏற்பட்ட தொடர்புதான்.

மல்லிகாவை கூப்பிட்டால் என்ன? பரகசியமாகிவிடும். ஊரெல்லாம் தெரிந்துவிடும். அண்ணிக்குத் தெரிந்தால் போதும். மல்லிகாவின் எதிர்காலம் .....? கூப்பிட எழுந்த வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கிக்கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு வழி?

மனதில் பளிச்சிட்ட எண்ணம். அவள் தன் அறைலைற்றைப் போட்டாள். போட்டுவிட்டு கட்டிலில் அமர்ந்து கொண்டாள். சற்று நேரத்தில் யாரோ பதட்டத்துடன் மெதுவாக நடந்துவரும் சத்தம் கேட்டது. சருகுகள் மெலிந்த ஒலி.

சற்று நேரம் செல்ல அவள் எழுந்து பாத்ரூமிற்குச் சென்ருள். படுக்கையில் மல்லிகா கிடப்பது தெரிந்தது.

லைற்றை அணைத்துவிட்டுப் படுக்கையில் சரிந்தாள்.

நெஞ்சத்தில் வேதனையின் குமுறல்கள். தவறு நடந்து விட்டதோ? மல்லிகா ஏமாந்து போனளோ? தம்பிநாதன் ஏமாந்து போனனே?

வேலிப்பொட்டை உடனடியாக அடைக்கச் சொல்ல வேண்டும். தம்பிநாதனின் வருகையை இல்லாமல் செய்ய வேண்டும். மல்லிகாவை எச்சரிக்க வேண்டும்.

வெளியே சின்னப்பு அம்மான் அண்ணனிடம் கேட்கிருர்.

''பிள்ளையையும் ஒருக்காக் கூப்பிட்டுக் கேட்டுவிடு, ராசதுரை'.

"அவள் மறுக்க மாட்டாள்...'' அண்ணன்.

மனே அவர்கள் பேசிக்கொண்டிருந்த இடத்திற்கு வந்தாள்.

''அம்மான், நான் ஒன்று சொல்லுறன். எனக்குக் கலியாணம் பேசுவதை விட்டிடுங்கோ அது இப்பிறவியில் நடக்கப்போவதில்லை. மல்லிகாவிற்கு நல்ல இடத்தில் பேசிக்கொண்டு வாருங்கோ. அதுதான் எனக்குச் சரியாப்படுகுது.''

அண்ணன் அவளைக் கோபத்துடன் பார்த்தான். அம்மா அவளைக் கவலையுடன் பார்த்தாள்.

''நீ மூத்தவள் இருக்கத்தக்கதாக அவளுக்குக் கலியாணமோ? ஊர் என்ன சொல்லும்...''

''அம்மான் ஊரைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஊரும் உலகமும் தான். நரம்பில்லாத நாக்கால எதையும் பேசும். தூற்றும் .. என்னைப்பற்றிக் கவலைப்படாத ஊரைப்பற்றி எனக்கு கவலையில்லை. நான் கலியாணம் செய்வதில்லை என்ற முடிவில் இருக்கின்றேன். நான் கலியாணம் செய்து போனல் இந்தக் குடும்பத்தின் கதி என்னவாகும் என்றும் எனக்குத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் நானில்லையோ? ஏதோ நீ தான் உழைத்துக் குடும்பத்தைப் பார்ப்பது போல் ..'' என்று கொதித்தான் அண்ணன்.

''நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் தான் இக் குடும்பத்தைப் பார்க்கிறேன். உங்கட குடும்பத்தையே உங்களால் சமாளிக்க முடியவில்லை. கடமைகளை மறந்து தங்கள் வாழ்க்கையை மட்டும் சரிவர அமைத்துக் கொண்டவை.''

''மனோ'' என்று அண்ணன் கத்தினான். மனோ அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''அம்மான் மல்லிகாவிற்குத்தான் கலியாணம் பேசுங்கோ... காசு, வீடு எல்லாம் சீதனமாகத் தாறம்...''

''மனோ, நீ என்னடி சொல்லுகிறாய்?'' என்று அம்மா கண் கலங்கினாள்.

''நீ ஏன் அழுகிறாய், அம்மா? நீ பெத்த இரண்டு குமருகள் தங்கட எண்ணப்படி கலியாணம் கட்டிக் கொண்டுதுகள். ஒன்று அண்ணன். மற்றது சந்திரா. நான் உன் மூத்த மகன் என்று எண்ணிக் கொள்ளன். கடமைகள் யாவும் நிறைவு பெற்றதும் பார்ப்போம்.''

வார்த்தைகள் ராசதுரையைச் சுட்டன.

''சேர்த்த காசு... கட்டிய வீடு .. உனக்கென்று ..''

''அதைத்தான் மல்லிகாவிற்குக் கொடுத்து செய்வம் என்றேன்.''

அம்மா கவலையுடன் அழுதாள்.

''இங்க பாருங்க அம்மான், நான் உழைக்கிறனான். நாளைக்கு எனக்கொரு கலியாணம் இல்லாவிட்டாலும் சீவித்துக் கொள்வேன். மல்லிகா அப்படியல்ல. என் பாதையே தனி, என் பொழுது பள்ளிக்கூடத்தில் கழியுது. மல்லிகா வீட்டில், அவளுக்கு வேறு சிந்தனைகள் இல்லை. புரிகிறதா, அம்மான்.''

''தங்கச்சி சொல்லிறது சரிதான்...'' என்றார் சின்னப்பு அம்மான்.

''நீ இப்ப பெரியாளாகிவிட்டாய்...'' என்றபடி அண்ணன் மனோவை எரித்துவிடுபவன் போலப் பார்த்தான். எரிச்சல், தோல்வி.

''பெரியவை பெரியவையா இல்லாதபோது சின்னவை பெரியவையா ஆகத்தான் வேணும்.''

''மனோ?...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சும்மா கத்தாதை அண்ணை. உன் நெஞ்சைத் தொட்டுச் சொல்லு. நீ எப்போதாவது உன் தங்கச்சிமாரைப் பற்றி ஒருகணமாவது சிந்தித்துப் பார்த்திருக்கிறாயா?

''அண்ணனை எதிர்த்தாடி கதைக்கிறாய்? உனக்கு அவன் எவ்வளவு செய்தான்...'' அம்மா.

''என்ன செய்தியள்... படிப்பிச்சியள். உத்தியோக மாக்கினியள்? என்னத்துக்கு...? உழைப்பிக்க. என்னை உங்கள் சுய நலத்திற்காக உருவாக்கினியள்? நான் அப்படியே இருந்து விடுகிறேன்.''

''எங்களையே எதிர்த்து...''

''அப்படி எண்ணமிருந்தால் நான் என்றோ என் வாழ்வை அமைச்சிருப்பன், சந்திராவைப் போல... அவற்றைப் பற்றி ஏன் இப்ப கதைப்பான். நடக்கவேண்டியதைப் பார்ப்பம். அம்மான், தயவுசெய்து மல்லிகாவிற்கு ஒரு சம்பந்தத்தை முற்றாக்கி வாருங்கோ...''

மனோ அவ்விடத்தை விட்டு அகன்று தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

உள்ளத்தில் கடந்தகால ஏமாற்றங்கள் கொந்தளித் தன, அலை அலையாக.

வெகு நேரம் அப்படியே அமர்ந்திருந்தாள்.

''அக்கா...''

நிமிர்ந்தாள், எதிரில் மல்லிகா.

''நீங்கள் அப்படிச் சொல்லியிருக்கக்கூடாது..''

''எப்படி?..''

வார்த்தைகள் கடூரமாக வெளிவந்தன.

''நீங்கள் இருக்கத்தக்கதாக எனக்குக் கலியாணம் பேசும்படி ..''

''பொத்தடி வாயை... என்று சீறிட்டாள் மனோ. ''எனக்குத் தெரியும் என்ன செய்ய வேண்டும் என்று. நீ நல்ல மனிசி கதைக்க வந்திட்டாய்?''

விக்கித்துப் போய் பயத்துடன் தமக்கையைப் பார்த் தாள், மல்லிகா. நெற்றியில் வியர்வைத் துளிகள் திடீரென அரும்பின.

''உன்ர போக்கு எனக்குப் பிடிக்கவில்லை...''

'' அக்கா...'' குரலில் பயம் நடுக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீ இனி தம்பிநாதனிடம் ஒரு புத்தகமும் வாங்கக் கூடாது... கதைக்கவும் கூடாது...''

மல்லிகா பேயறைந்தவள் மாதிரி நின்ருள். கண்கள் பொலபொலவென நீரைச் சொரிந்தன. கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழத்தொடங்கினுள்.

மனேவிற்குப் பரிதாபமாக இருந்தது.

''மல்லி...''

''அக்கா. என்னை மன்னிச்சுக்கொள்...''

''நீ அப்படி நடக்கமாட்டாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்குது...''

''அவன் தான்... அவன் தான்... நான் எப்படி இப்படி மதியிழந்து போனன் என்று எனக்கே தெரியவில்லை...'' மீண்டும் அழுகை.

தம்பிநாதன் எவ்வளவு கெட்டிக்காரன்? அவளிடம் புத்தகத்தை நீட்டி... மல்லிகாவிடம் கொடுத்து... உணர்வுகளைப் பொங்கியெழச் செய்து... வரட்டும் வரட்டும் நேரடியாக இரண்டு வார்த்தைகள் கேட்டுவிட வேண்டும்.

அம்மா வந்தாள்.

''இனி இங்க இருக்கேலாது. வேறை எங்காவது போய் விடுவம் என்று உன் அண்ணி ஒற்றைக் காலில் நிற்கிருள். என்னை எதிர்த்துப் பேசிவிட்டாள் மதிப்பில்லாமல் என்று அண்ணன் கவலைப்படுகிருன். எங்காவது வீடு பார்த்துக்கொண்டு போய் விடுவம் என்கினம். ஏன்ரி இப்படி நடக்கிருய்?'' அம்மா குழறினுள்.

''நான் சரியாத்தான் நடக்கிறன்...''

''போகப் போகினமேடி''

மனே நிமிர்ந்து தாயைப் பார்த்தாள்.

''அதுக்கு நான் என்ன செய்ய? அவயளுக்கு எது சரியோ அப்படி நடக்கட்டும்.''

வார்த்தைகள் அவளையறியாமலே வெளிவந்தன.

அம்மா திகைத்துப்போய் நின்றுவிட்டாள்.

மனே எதுவும் பேசவில்லை. மன்னிப்பு? கிடுகு வேலி களுக்கு அப்பால் பெருமூச்சு விடுகின்ற ஆயிரக்கணக்கான யாழ்ப்பாணத்துப் பெண்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் கொடுமை களுக்கு யாரை யார் மன்னிப்பது?

அக்கொடுமையின் விளைவு மல்லிகாவின் செயலா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளால் மல்லிகாவைக் குறை சொல்ல முடியவில்லை. குற்றவாளிகள் — காலம், பருவம்.

மல்லிகா கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

''தவறுகள் எதுவும் நடக்கவில்லை, அக்கா...''

''அவயள் எங்கயும் போகமாட்டினம்... நீ சும்மா இரு அம்மா.'' என்றாள் மல்லிகா.

இன்று மனோவிற்கு என்ன பிடித்தது? ஏன் இப்படி எல்லாம் பேசுகிறாள்?

— எல்லாரையும் தூக்கி எறிந்து...

அவ்வீட்டில் அன்று பூரண அமைதி நிலவியது. ஒவ்வொருவரும் மனதிற்குள் குமைந்துகொண்டு நடமாடினார்கள்.

● ●




அதிகாலை, மனோ படுக்கையைவிட்டு எழுந்து அறைக்கு வெளியில் வந்தாள். என்றும் காணப்படாத ஒரு காட்சி அவள் முன் விரிந்து கிடந்தது.

அம்மா ஒரு மூலையில் தலையில் கை வைத்தபடி நிலை குலைந்து இருந்தாள்.

அண்ணன் கதிரையில் எதுவும் பேசாமல் இருந்தான். ஐயா முற்றத்தில் நின்றிருந்தார்.

மனோ அவர்களை ஆழமாகப் பார்த்துவிட்டு அடுக்களைக்குள் சென்றாள். மல்லிகா தேநீர் கலந்துகொண்டிருந்தாள்.

''என்னடி, எல்லாரும் மூலைக்குமூலை பிரமை பிடித்து நிற்கினம்?''

மல்லிகா தமக்கையை ஒருகணம் ஏறிட்டுப் பார்த்தாள். பின்னர் தலையைக் குனிந்துகொண்டாள்.

''என்னடி?...'' என்று சற்றுப் பலமாகக் கேட்டாள். மனோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகா நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. தமக்கையின் முகத்தை வெறிக்கப்பார்த்தாள். வீட்டில் ஏதோ நடந்துவிட்டது. அவளுக்குத் தெரியாமல் அப்படி என்ன தான் இங்கு நடக்க இருக்கிறது?

மல்லிகா கலங்கிய குரலில் சொன்னாள்.

"அக்கா... இந்த வீட்டில் எங்களுடன் இன்னொரு குமரும் சேர்ந்திட்டுது. சின்னத்தங்கச்சி சாமர்த்தியப்பட்டிட்டாள்..."

மல்லிகாவின் வார்த்தைகள் 'விர்' என மனோவின் இதயத்தில் தைத்தன, ஒரு கணம்தான். தெளிவு பிறக்க வெகு நேரமாகவில்லை. இந்தச் சமூகத்தை நினைக்க அவளுக்கு சிரிப்பு வந்தது. பெண் எப்போதும் சுமையாகத்தான் தெரிகின்றாள். அப்படி ஒரு அமைப்பு.

மனோவின் முகத்தில் விரிந்த சிரிப்பை மல்லிகா வியப்புடன் பார்த்தாள்.

"அக்கா...?"

"அதுக்கு ஏன் இப்படி இருக்கினம்? லீலா பெரியவளானாள் என்ன? இங்க இருக்கிற வைக்குத்தான் கடமைகள் புரியாவிட்டாலும் காலத்துக்குமா புரியாது?"

வாசலில் நிழல் ஆடியது. அம்மா நின்றிருந்தாள்.

மனோ அவளைத் திரும்பிப் பார்த்தாள்.

"லீலா பெரிசாகிட்டாள்" என்ற அம்மாவின் குரல் தளுதளுத்தது.

"அதுக்கென்ன?... செய்யிறதைப் பாருங்கோ..."

"உனக்கென்ன...... நீ லேசாகச் சொல்லிவிட்டாய்? மூன்று குமருகளை வைச்சுக்கொண்டு " தொடர்ந்து பேசமுயன்ற அம்மா, மகளின் கண்களில் தெரிந்த கனலைப் பார்த்து நிறுத்திக் கொண்டாள்.

மனோ வெளியில் வந்தாள். அவள் இதயத்தில் பல்வேறு நினைவுகளின் எச்சங்கள்.

வீட்டிற்கு வெளியில் சுவருடன் லீலா நின்றிருந்தாள். அவள் விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தாள். மனோவிற்கு அவளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

அவள் அருகில் வந்தாள். தமக்கையை லீலா பயத்துடன் பார்த்தாள்.

"லீலா..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பெரியக்கா...... எனக்குப் பயமாக இருக்குது...'' பெருங் குரலில் லீலா அழத்தொடங்கினுள். ஏதோ செய்யத் தகாத காரியத்தைச் செய்துவிட்டதுபோல் அவள் உடலும் குரலும் நடுங்கின.

மனே ஆதரவாகத் தங்கையின் தோளில் கரம் பதித்தாள்.

''விசர்... இதுச்கு அழுவார்களோ?...''

''எல்லாரும் திட்டுகினம்''

அந்தப் பைத்தியக்காரக் கும்பலே நினைக்க அவளுக்குச் சிரிப்பாக வந்தது. பழுத்த பழம் கிளேயிலா இருக்கப்போகிறது?

''அழாதையடி... இதுக்கு ஏன் அழுவான்... இது இயற்கை... அப்படித்தான்...''

'எடி, லீலா இதுக்குப்போய் அழுகிருயே? இனித்தான் உனக்கு அழுகிறதுச்கு எவ்வளவு நிகழ்ச்சிகள் இருக்கப்போகிறது? என்னேப்பார் கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக அழுகிறேன். ஓயாமல் அழுகிறேன். பெண்ணுகவே பிறக்கக்கூடாதடி. அதுவும் இந்தத் தமிழர் சமுகத்தில் பெண்ணுகப் பிறக்கக்கூடாது என்று மனேவின் இதயம் ஓலமிட்டது'.

''அழாதே... உள்ளே வா''.

அன்று அந்த வீட்டில் மனேவைத் தவிர ஏனைய யாவரும் பிரமை பிடித்தவர்கள் போலத் திரிந்தனர். லீலாவிற்கு தண்ணீர் வார்க்க மாமா வந்திருந்தார். மாமா கனகசபை, அம்மாவின் ஒன்றுவிட்ட தம்பி.

அன்று மனே பாடசாலேக்கு லீவு.

நீண்ட காலத்திற்குப் பின்னர் கனகசபை அவ் வீட்டிற்கு வந்திருந்தார்.

சின்ன வயதில் மனே அவர் வீட்டிற்குக்குச் சென்று ஓரிரு நாட்கள் தங்கி வந்திருக்கிருள்.

சடங்குகள் முடிந்து, அவர்கள் வீட்டு ஹோலில் அமர்ந்திருந்தார்கள். மனே அறைக்குள் நின்றிருந்தாள்.

''மனேவைக் கூப்பிடு...'' என்று மாமா சொல்வது கேட்டது. அவள் அறையை விட்டு வெளியில் வந்தாள்.

''இஞ்ச வா, பிள்ளை... நீயென்ன உனக்குக் கலியாணம் வேண்டாம்... மல்லிகாவிற்குப் பேசுங்கள் என்றிட்டியாம்?...''

அவள் மௌனமாக மாமாவைப் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீ யாரையாவது பார்த்து வைத்திருக்கிறியா? என்னிடம் சொல்லு... நான் செய்து வைக்கிறன், பிள்ளை?''

அவள் உதடுகளில் ஏளனம் படர்ந்தது. அண்ணன் தலையைக் குனிந்து கொண்டான்.

''இஞ்சாருங்கோ...... ஒருக்கா வந்திட்டுப் போங்கோ...'' அண்ணி அழைத்தது அவனுக்கு வாய்ப்பாகிவிட்டது. அவன் எழுந்து உள்ளே சென்றான்.

''அப்படியில்லை, மாமா... எனக்குக் கலியாணம் செய்து கொள்ள விருப்பமில்லை. எல்லாம் கால நேரத்தோடு நடந்திருக்க வேண்டும். மல்லிகாவிற்குத் தான்.. அவளுக்குமே வயதாகி விட்டது...''

''புரிகிறது, பிள்ளை...'' என்றார் மாமா.

''மஞ்சுவிற்குச் சிரிப்பு வந்தது. பெரிதாகச் சிரித்தாள். மாமா, நீங்கள் எதுக்கு வேண்டுமென்றாலும் போராடுங்கள்... அதுக்கு முதல் எங்கட சமூகத்தில் இருக்கிற சில உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பாருங்கள்...''

''அப்படி என்ன பிரச்சினை இருக்குது?...'' மாமா அரசியல் பேசத் தொடங்கினால் முடிவிருக்காது.

''சாதிப் பிரச்சினை... சீதனப் பிரச்சினை...''

''சாதிப் பிரச்சனை இப்ப. அது தானாகத் தீரும். சீதனப் பிரச்சினையும் தீரும்''

''முதலில் ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும். உங்கள் தலைவர்களிடம் சொல்லி உடனடியாக நீங்கள் இந்த நாட்டிற்கு ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும் மாமா. சட்டப்படி சீதனம் வாங்குவதையும், கொடுப்பதையும் தடுப்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும். இலகுவில் செய்யக்கூடிய இந்த விசயத்திற்கு ஏன்தான் பின்வாங்குகிறீர்களோ?...''

மாமா அவளை ஏளனமாகப் பார்த்தார்.

''விசர்ப்பிள்ளை... சட்டம் வந்தால் போல சீதனம் வாங்காமல் செய்யப் போறுங்களே?''

''மாமா... முதலில் சட்டம் இருக்க வேண்டும். பிறகு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இருக்கிற சிக்கல்களைத் தீர்க்கவேண்டும்.''

மஞ்சு மாவை ஏறிட்டுப் பார்த்தாள். ''இன்றைக்கு ஒவ்வொரு வீட்டிலும் எத்தனை குமருகள் கரைசேர வழியில்லாமல் இருளுக்க கிடக்குதுகள் என்று உங்களுக்குத் தெரியுமா? வாழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய வயதில் வாழ வழியற்றுக் கிடக்கிற பெண்களுக்கு வாழ்வுச் சுதந்திரம் பெறுவது சின்ன விசயமா? ... மாமா மனிதன் வாழத்தான் பிறந்தான். போராடப் பிறக்கவில்லை. போராட நேர்ந்தாலும் அது நல்வாழ்விற்குத்தான் மாமா.''

''நீ படிச்சனி... உன்னோடை பேச முடியாது'' என்று மாமா சிரித்தார்.

''உதெல்லாம் ஏன் இப்ப... நீங்கள் அண்ணை உவளுக்கு எங்காவது ஒரு நல்ல இடத்தில் மாப்பிள்ளை பாருங்கோ...'' என்று அம்மா குறிக்கிட்டாள்.

நான் கல்யாணம் செய்வதாக இல்லை, மாமா. நிச்சய மாகத்தான் சொல்லுறன். நீங்கள் மல்லிகாவிற்குப பாருங்கள்... சீதனம் நான் தாறன்...'' என்றாள் மனோ.

மாமா சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார்.

''எவ்வளவு கொடுப்பியள்?'' என்று கேட்டார்.

''இந்தக் காணி வீடு .. இன்டைக்கு ஒரு லட்சம் பெறும்... பத்தாயிரத்துக்கு நகை...''

''டொனேசன்...?''

''டொனேசனா?'' ... என்றாள் மனோ. கவலைகள் குரலில் படிந்தன.

''பத்தாயிரமாவது? ...'' என்று மாமா கேட்டார்.

''தரலாம், அண்ணை ...'' என்றாள் அம்மா.

''அப்படியென்றால் .. மாப்பிள்ளை ரெடி .. நான் உங் களிடம் இவ்வளவு சீதனம் இருக்குமென்று எதிர்பார்க்கவில்லை ..'' என்றார் மாமா.

''யார் மாப்பிள்ளை? ...'' என்று ஆவலுடன் மனோ கேட்டாள்.

''என் மகன் சுப்பிரமணியம்தான்...''

''மாமாவின் மகன் சுப்பிரமணியம் பயிற்றப்பட்ட ஆசிரியன்

''மல்லிகா அதிர்ஷ்டசாலி...'' என்றாள் மனோ.

''நான் சீதனம் வாங்கி என் மகனுக்குக் கலியாணம் செய்ய விரும்பவில்லை. ஆனால் என்ன செய்வது? என் இரண்டு பொம்பிளைப்பிள்ளைகளுக்கும் சீதனம் கொடுத்துக் கடனாளியாக நிற்கிறன். அதைத் தீர்க்க இதைவிட வழியில்லை. அப்ப சம்மதம் தானே?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவரை ஒருக்காக் கேப்பம்..'' என்று இழுத்தாள் அம்மா.

மனோ தாயைச் சுட்டெரித்துவிடுபவள் போலப் பார்த்தாள்.

''அவரை என்ன கேக்கிறது... சம்மதம் தான் மாமா...''

மனோ திரும்பித் தன் அறைக்குள் சென்றாள். மல்லிகா அவளைக் கட்டிக் கொண்டு விம்மினாள்.

''அக்கா...''

''மல்லி...''

உன்னோடை பிறந்ததுக்கு நான் கொடுத்து வைச்சிருக்கிறன், அக்கா...''

மனோவின் கண்கள் கலங்கின. கண்ணீர் முத்துக்கள்.

தங்கையைத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள்.

''நீ நல்லா வாழ வேணும்...''

● ●




யாழ்ப்பாண நவீன சந்தையின் தென்புற வாசலில் அவர்கள் ஏறியபோதுதான் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. மனோவும் மல்லிகாவும் சந்தைக் கட்டிடத்திற்குள் செல்ல ஏறியபோது, ரவீந்திரன் உள்ளேயிருந்து வெளியில் வந்தான்.

மனோவின் கால்கள் தயங்கி நிலைத்தன. அவள் இதயம் பொங்கிப் பிரவகித்தது.

ரவீந்திரன் அவளைப் பார்த்தபடி அப்படியே சிலையாக நின்றுவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் காலமாக அவர்கள் கட்டிய கனவுகள் - நிகழ்ச்சிகள் யாவும் ஒரு கணத்தில் அவர்களின் உள்ளத்தில் பொங்கி நின்றன. அவன் கண்களை நேரில் பார்க்கும் திராணியற்றவளாக மனோ தலையைக் குனிந்து கொண்டாள்.

ரவீந்திரன் தான் முதலில் சுய நினைவு பெற்றான்.

"மனோ .." வார்த்தைகள் அடிக்கிணற்றிலிருந்து வெளி வருவது போல சன்னமாக வெளிப்பட்டன.

"ரவி .." என்றாள், மனோரஞ்சிதம். அவளால் பேச முடியவில்லை. அவள் தைரியம், திடம் எல்லாம் அவளைவிட்டே ஓடிவிடும் போல இருந்தது. கண்கள் எந்நேரந்திலும் அழுது விடலாம். மல்லிகா நிலைமையைப் புரிந்து கொண்டாள்.

"அக்கா..." நான் கன்பனுசில் துணி பார்க்கிறன்...நீ வா" என்றபடி அவர்களை விட்டு விலகிச் சென்றாள். அவளை மனோ தடுப்பதற்கு முயலவில்லை.

அவர்கள் நவீன சந்தையின் நுழைவாயிலின் அகன்ற கொரிடோரின் ஒரு பக்கமாக நின்றிருந்தார்கள். எதைப் பேசுவது ..? எப்படிப் பேசுவது? எத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் சந்திக்கிறார்கள்?

"மனோ . மாக்கற்றுக்கு வந்தியா...?"

"ஓம், ரவி" என்று அவள் மென்றுவிழுங்கினாள்; "கலியாணம்...துணிவாங்க வந்தம்..."

"உனக்கா, மனோ?..." அவன் ஆவலுடன் கேட்டான்.

"இல்லை .. என் தங்கச்சிக்கு .. மல்லிகாவிற்கு"...

அவன் முகம் ஓடிக் கறுத்தது.

"மனோ .. நீ இன்னமும் கலியாணம் செய்து கொள்ளவில்லையா? . "

"பார்த்தால் அது தெரியவில்லையா...?"

"ஏன்...? ஏன், மனோ?"

"இரண்டு காரணம் .. ஒன்று சீதனத்தடை... மற்றது .." அவள் சொல்லாமல் தயங்கினாள், வார்த்தைகள் வெளிவரவில்லை; "உங்கள் மருமகள் வசந்தி என்னிடம் படிக்கிறாள்..."

"கதையை மாற்றாதே, மனோ. மற்ற காரணம் என்ன..."

"அதைச் சொல்லத்தான் வேண்டுமா, ரவி?"

"சொல்லு, மனோ. உனக்கு இன்னமும் கலியாணம் ஆகவில்லை என்பதை அறிந்ததிலிருந்து ஒவ்வொரு கணமும் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்துகொண்டிருக்கிறேன். உனக்கு நான் துரோகம் செய்துவிட்டேன். உன்னை ஏமாற்றி விட்டேன்...'' என்றபடி அவன் குமுறினான்.

''மெதுவாகப் பேசுங்கள்.. ஆக்கள்..''

''சொல்லு, மனோ?... மற்றக் காரணம் என்ன?''

''மனத்தடை, ரவி. நான் எனக்கு இட்டுக்கொண்ட மனத்தடை.''

அவன் அவளைக் கவலையுடனும் பச்சாத்தாபத்துடனும் பார்த்தான்.

''நான் உனக்காகக் காத்திருக்கலாம் ..அவசரப்பட்டிட்டன்'' ..

''விசர்..''

''நீ இனிக் கலியாணம் செய்து கொள்ளவே மாட்டியா.'' அவன் அவளை துயருடன் கேட்டான்.

''அப்படியொரு எண்ணமில்லை. கலியாணம் செய்தால்தான் வாழலாமா, ரவி ..''

''நீ இப்படியிருப்பது என் தவறை எனக்குச் சுட்டிக் காட்டிக்கொண்டே இருக்கிறது, மனோ.''

அவள் அவனை இரக்கத்துடன் பார்த்தாள்.

''அது உங்கள் தவறல்ல.. ஒருத்தரின் தவறுமல்ல விதியின் தவறு...''

அப்படிச் சொல்லாதே! விதி...! நல்ல பாதுகாப்பான வார்த்தை. மனிதனின் ஆற்றாமை. அவனின் தவறான நடத்தை... இவற்றிற்கு சாட்டு விதி...''

மனோ வீதியை வெறிக்கப் பார்த்தாள்.

''மனோ...'' என்றான் ரவி. அவள் திரும்பிப் பார்த்தாள்.

''நீங்கள் நல்லாக் கொழுத்திட்டியள் ..''

''நீ அப்படியேதான் இருக்கிறாய் நான் தான் மாறிட்டன்...''

இருவரிடையேயும் மௌனச் சுவர்.

மனோ சுவரை உடைத்தாள்.

''உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?''

''இரண்டு...''

''பெண்களா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒன்று பெண் .. மூத்தது! மற்றது ஆண்...''

''நீங்கள் சந்தோசமாக இருக்கிறியளா?''

''இருக்கிறன், மனோ. ஆனால் இப்ப இல்லை. உன்னை அன்றைக்கு கல்லூரி முகப்பில் கண்டதில் இருந்து நான் நிம்மதி யிழந்து விட்டேன்...''

''நான் சந்தோசமாகத் தான் இருக்கிறன். ரவி. உங்கள் இனிய நினைவுடன் சந்தோசமாகத்தான் ..'' வார்த்தைகளை அவள் நிறுத்திக் கொண்டாள். அவள் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. அவன் இப்போது அவள் சொத்தல்ல. இன்னொருத்தி யின் சொத்து. உரிமை. கண்கள், 'படக்' கென்று கலங்கின. முகத்தைத் திருப்பி, கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.

ரவி கலங்கிய அவள் கண்களைக் காணத் தவறவில்லை. இதயத்தில் சுரீரென முட்கள் தைத்தன. சுவரை அழுத்திப் பற்றிக்கொண்டான்.

''மனோ .. நீ விரும்பினால் ..''

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள். 'சொல்லுங்கள்' என்பது போல விழிகள்.

''நீ விரும்பினால் என்னுடன் வந்திடு மனோ...''

அவள் அவனை வியப்புடன் பார்த்தாள். அவள் முகத்தில் ஆயிரம் உணர்வுகள். உணர்ச்சிக் கலவைகள். அவள் உதடுகளில் புன்னகை கீறியது. சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய் மனோ?''

''இதற்குச் சிரிக்காமல் என்ன செய்வார்கள்? நான் விரும்பினாலும் உங்களுடன் அழைத்துச் செல்லக் கூடிய நிலையிலா நீங்கள் இருக்கிறியள்?''

''மனோ ..''

''விசர்...விசர் . உங்களை நம்பி ஒரு மனைவி இருக்கிறாள். இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. அவர்கள் நிலை என்ன? ஊர் என்ன செல்லும்? விசர்...'' என்றபடி அவள் சிரித்தாள்.

அவன் அவளை ஆழமாகப் பார்த்தான்.

''நீ என்னை இன்னமும் புரிந்து கொள்ளவில்லை, மனோ! என் மனைவியை நீ புரிந்து கொள்ளவில்லை......அவள்...''

''சொல்லுங்கள்.''

''என் மனைவிக்கு எல்லாம் தெரியும். நீ எழுதிய அத்தனை கடிதங்களையும் அவள் படித்திருக்கிறாள். உன்னையும் என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் புரிந்திருக்கிருள். உன்னை நான் அழைத்து வந்தால் கூட அவள் மறுப்புத் தெரிவிக்க மாட்டாள். இப்படியொரு பெண்ணு என்று நீ அதிசயப்படலாம். அவள் அப்படிப்பட்ட ஒரு பெண் தான்."

அவள் வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

"முருகனுகப் பாக்கிறியள்" என்று சிரிக்க முயன்ருள்.

"நீ நம்பமாட்டாய். அது எனக்குத் தெரியும்... ஆனுல் என்ருவது ஒருநாள்..."

"இப்பிறப்பில் அப்படி ஒருக்காலும் நடக்காது. சமூகம்—சொந்தம்—பந்தம்—ஐயா—அம்மா..."

"இவற்றையெல்லாம் என்ருவது நீயாக உடைத்தெறிந்துவிட்டு வர நேரும்போது உன்னை வரவேற்க என் குடும்பம் காத்திருக்கிறது என்பதை மறந்திடாதை மனே?"

அவளுக்குச் சிரிப்பதைத் தவிர வேறெதுவும் செய்யத் தெரியவில்லை. அப்படி நடக்கக் கூடியதுதானு? எங்காவது நடந்திருக்கிறதா? அவர் குடும்பஸ்தர் என்னையும் வரட்டாம.

"ரவி நீங்கள் குழந்தையல்ல, பல்கலைக்கழக இளைஞனுமல்ல. பொறுப்பில்லாமல் பேசுகிறீர்கள் ரவி! நடககக் கூடியதாகப் பேசுங்கள்"

"நடக்கக்கூடியது என்ருல் நீ கலியாணம் செய்து கொள் மனே!"

அவள் விரக்தியுடன் சிரித்தாள்.

"அதுமட்டும் நடக்கக்கூடியதல்ல ரவி. என் வாழ்வு நான் இப்போது நடக்கின்ற பாதைதான். நான் படிப்பிப்பதிலேயே நிம்மதி கண்டு கொண்டிருக்கிறேன்."

"உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டிருக்கிருய் மனே."

"அப்படியும் இருக்கலாம். ஆனுல், என்னளவில் நடந்து முடிந்தவை எந்தவொரு பெண்ணுக்கும் இனி நடக்கக்கூடாது இந்தச் சமூகம் கெட்டது. பணத்திற்காகத் தரிவது என் பெற்ருேர்—என் அண்ணன்—அன்று ஏன் எங்கள் கலியாணத்திற்கு மறுத்தார்கள்? வறுமை! ரவி அவர்களுக்குத் தேவையாக இருந்த என் உழைப்பு பணம்! ரவி. பாசத்தைவிட பணம்தான் இன்று இந்த உலகத்தில் ஆதிக்கம் செலுத்துவது. என் நல்வாழ்வைவிட அவர்களின் வறுமை, பற்ருக்குறைதான் அவர்களுக்குப் பெரிதாகத் தெரிந்திருக்கிறது. என் ஒருத்தியின் அழுகையில் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நிம்மதியாக இருக்கிருர்கள். அவர்களுக்கு இன்று பணப் பிரச்சினை இல்லை. சந்தோஷமாக இருக்கிருர்கள். அந்த சந்தோஷத்தை நான் எனக்காக கலேக்கக்கூடாது. என் கண்ணீரில் அவர்கள் மகிழ்ச்சி மலரும் என்ருல், நான் இப்படியே இருந்து விடுகிறேன் ரவி.''

ரவீந்திரன் திகைப்புடன் அவளேப் பார்த்தான். பின்னர் திடமாகச் சொன்னுன்.

''மனே! உனக்காக என் வீட்டுக் கதவு என்றும் திறந்திருக்கும்! அங்கே பார்! காரில் இருந்தபடி என் மனேவி எங்களேப் பார்த்துக் கொண்டிருக்கிருள். அவளே சாட்சி.''

மனே விக்கித்துப்போய் வீதியைப் பார்த்தாள். ரவீந்திரனின் சிவப்புக் கார் கார்பார்க்கில் நின்றிருந்தது. அதன் முன் சீற்றில் ஒரு பெண் அமர்ந்திருந்தாள். அவள் இவர்களேச் சர்வசாதாரணமாகப் பார்த்தபடி இருந்தாள். மனே குற்ற உணர்வுடன் பார்த்தாள். காரில் இருந்த அப்பெண்மணி, சிரித்தபடி அவளுக்குத் தன் கரத்தை அசைத்து அறிமுகம் செய்து கொண்டாள்.

அவளுடைய பெருந்தன்மையை அவள் ஒரு கணத்தில் உணர்ந்து கொண்டாள்'

அவள் கரம் அசைந்தது.

''நான் வாறன் மனே, நான் சொன்னவை நிச்சயமான வார்த்தைகள்.''

அவன் விடைபெற்றுக் காரில் ஏறினுன். மனே மனச் சுமையுடன் சந்தைக்குள் நுழைந்தாள்.

● ●



நல்லூர் சிவன் கோயிலில் மல்லிகாவிற்கும் சுப்பிரமணியத்திற்கும் கலியாணம் அமைதியாக நடந்தது. மனேன் மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலிற்குச் செல்லவில்லை. மல்லிகாவின் கலியாணத்திற்கு வந்திருந்தவர்களின் வாய்களில் மனோவின் பெயர்தான் அதிகம் நெரிபட்டது.

''இதென்ன...? தமக்கை இருக்கத்தக்கதாக தங்கச்சிக்குக் கலியாணம். நல்ல முறைதான்.''

இந்தக் காலத்தில் உப்பிடித்தான் நடக்குது.

''மனோவிற்கும் வயது வட்டிற்குள்ள போயிட்டுது. இனி என்ன கலியாணம்.''

''அவள்தான் உழைச்சுத் தங்கச்சிக்குச் சீதனம் கொடுக்கிறாளாம்.''

''ஓமோம்.. பொறுப்பில்லாத மனிசர்கள்; கடமை தெரியாத ஜென்மங்கள்...''

மனோ வீட்டில் நின்றிருந்தாள். கலியாணத்திற்கு வருபவர்களும் போகிறவர்களுமாக வீடு கலகலப்பாக விளங்கியது. இப்போது கோயிலில் மல்லிகாவின் கழுத்தில் தாலி கட்டப்பட்டிருக்குமென மனோ எண்ணிக் கொண்டாள்.

அவள் நெஞ்சில் ஒரு நெருடல்.

அவளால் கோயிலிற்குச் செல்ல முடியவில்லை. உரிய விதத்தில் அவளால் அங்கு நிற்கமுடியாது. அவள் நின்றாலும் வந்திருப்பவர்கள் இரங்கத்தக்க பிராணியைப் பார்ப்பது போலத்தான் அவளைப் பார்ப்பார்கள்.

அவள் இரங்கத்தக்கவள் தானோ?

அவள் தன் பழைய கல்லூரி ஆசிரியைகள் யாவருக்கும் கலியாண அழைப்பிதழ் அனுப்பி வைத்திருந்தாள்; சிலர் வந்திருந்தார்கள்.

அவளுடன் கற்பிக்கும் ஆசிரியை பத்மா வந்திருந்தாள். முப்பத்தாறு வயதாகின்றது. கலியாணமாகவில்லை.

''மனோ... எப்படியிருக்கிறீர்?''

''ஏன் பத்மா நல்லாத்தான் இருக்கிறன். உமக்கு... இன்னமும்...?''

பத்மாவின் விழிகளில் ஏக்கம்.

''என் அப்பனைக் கொல்ல வேண்டும்'' என்றாள் பத்மா. அவளை மனோ வியப்புடன் பார்த்தாள். பத்மா சிரித்தாள்.

''ஓம் மனோ... என் அப்பனை மட்டுமல்ல, என் அப்பனைப் போல இருக்கிற எல்லா அப்பன்களையும் கொல்லவேண்டும்... நடுத்தெருவில் வைத்துச் சுடவேண்டும்! பெற மட்டுந் தெரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறது நல்லதொரு வாழ்வைத் தேடித்தர மட்டும் தெரியவில்லை.''

''சீதனம் என்று ஒன்றிருக்கிறதே பத்மா !''

வெறுப்புடன் பார்த்தாள் பத்மா.

''அது காரணமல்ல மனோ. என் அப்பன் பெரிய உத்தியோகத்திலிருந்து ரிட்டயரானவர் செலவாளி. எல்லா வகையிலும் இப்பவும் அவருக்குப் பெண் தேவை. என் உழைப்பு அவருக்குத் தேவை; கலியாணம் பேசிச் செய்து வைக்கத் திறனில்லை —மனமில்லை — அக்கறையில்லை. பழம்பெருமை பேசிக் கொள்வார். ஒரு தடவை என்னைப் பெண் கேட்டு ஒரு பகுதியினர் வந்தனர். என்னிடம் வந்து பெண் கேட்க இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது ? என்று ஏசிக் கலைத்துவிட்டார் கட்டுப்பாடு; கடும் கட்டுப்பாடு. நான் எவருடனும் பேசக்கூடாது; பறையக்கூடாது. ஒரு நாளைக்கு என்ன செய்கிறன் என்று பார் !''

மனோ எதுவும் பேசாமல் பத்மாவைப் பார்த்தாள். பத்மா மட்டுந்தானா இந்த உலகத்தில் இப்படி ? எத்தனையோ பத்மாக்களும் மனோக்களும் !

சீதனம் — சாதிக் கட்டுப்பாடு — அக்கறையின்மை — சுயநலம் - பழம் பெருமை என்று எத்தனையோ தடைகள் ஒரு பெண்ணிற்கு நல்வாழ்வு கிடைப்பதற்குத் தடைக்கற்கள்.

''இஞ்ச பார் மனோ நான் விசர்க்கதை கதைக்கிறன் கலியாண வீட்டிற்கு ஆக்கள் வருகினம்; கவனியும் ..''

கனகம்மா ரீச்சர் வந்திருந்தாள்.

''என்ன மனோ ஒருமாதிரி இருக்கிறீர் ?''

அவள் சரியாகத்தான் இருக்கிறாள் கனகம்மா ரீச்சர் தன் மன எண்ணத்தை அவளிடம் காண முயல்கிறாளோ ?

''நான் சரியாகத்தான் இருக்கிறன் ரீச்சர்'' என்றாள் மனோ.

மத்தியான நேரம்தான் நாள். அதனால் மணமக்கள் வீட்டிற்கு வரும்போது இரண்டு மணி ஆகிவிட்டது. அம்மா மகிழ்வுடன் ஓடியாடித் திரிந்தாள். அவளைப் பார்க்க மனோவிற்கு ஏனோ எரிச்சலாக இருந்தது.

கலியாணக் கலகலப்பு அடங்கியது. இரவு ஏழு மணி இருக்கும். மாப்பிள்ளை — பெண், மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டுவிட்டார்கள். மனோ கட்டிலில் ஓய்வாகப் படுத்திருந்தாள்.

ஏன் ரவி வரவில்லை ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அவனுக்கும் அறிவித்திருந்தாள். நிச்சயமாக வருவானென்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது ஏன் அவள் அவனை எதிர்பார்க்கிறாள்?

''அக்கா...'' என்றபடி லீலா வந்தாள். ''ராஜ ரீச்சர் வந்திருக்கா ..''

''ராஜியா ..'' என்றபடி மனோ விரைந்து எழுந்தாள். அதே வேளை ராஜியே அவள் அறைக்கு வந்துவிட்டாள்.

''இரு இரு வெளியில் ஆக்கள். இங்கேயே இருந்து கதைப்பம்.''

ராஜி கட்டிலில் வந்து அமர்ந்தாள்.

''என்னடி ?''

மனோ சிரித்தாள்.

''உன் சிரிப்பில் மகிழ்ச்சியில்லை !''

''நீயும் அப்படி நினைக்கிறாயா ராஜி ?''

''இல்லையடி .. உன்னைப் பார்க்க அப்படியிருக்குது...'' என்றாள் ராஜி.

''விசர் ..''

''உனக்கொரு விசயம் தெரியுமா, மனோ ?...

''என்ன... ?''

ராஜி பெரிதாகச் சிரித்தாள்.

''என்னடி ? ..''

''எனக்கும் சிவத்திற்கும் எழுத்து .. ரிஜிஸ்றேசன் முடிசிஞ்சு...''

வியப்புடன் அவளை மனோ பார்த்தாள், கண்களில் சந்தேகம்.

''உண்மையாகத்தான், மனோ ..''

''ஏனடி...''

''உதென்ன கேள்வி...?''

''நீங்கள்தான் ஏனோ கடமை, இலட்சியம்... அது இது என்றியள் ? உனக்கு அக்காமார் கலியாணம் செய்யாமல் இருக்கினம் ''

''ஏன் நீ இருக்க உன் தங்கச்சிமார் கலியாணம் செய்யவில்லையா ? அப்படித்தான்''

''அது சரியடி... நீ இப்படி அவசரப்பட என்னதான் ..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜி கவலையுடன் மனோவைப் பார்த்தாள்.

''அதுதானடி இந்த முறை பிழைத்துவிட்டது கவன மாகத்தான் இருந்தோம் .. பிழைத்துவிட்டது. ஏன் என்று தெரிய வில்லை. அதனால் வேறு வழி... றிஜிஸ்றேசனை முடிச்சிட்டம்''

மனோ இப்போது சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய் மனோ?'' ராஜியின் குரலில் வியப்பு.

''சமூகத்திற்கு யார் பயப்படுகிறது கூ கெயர்ஸ் என்றெல்லாம் சொன்னியே? இப்ப அந்தச் சமூகத்திற்குப் பயந்து தான் நீ ரிஜிஸ்றேசனை முடிச்சிருக்கிறாய்?''

ராஜி மனோவை ஏறிட்டுப் பார்த்தாள். பின்னர் தலை யைக் குனிந்து கொண்டாள்.

''சமூகத்தைப் பழிவாங்குகிறது என்பது கஷ்டம், ராஜி நாங்களும் அதற்குள்ளதான் கட்டுப்பட்டுக் கிடக்கிறது... கட்டுப்பாட்டை மீறுகிறது என்பது சிரமம்தான் சரிசரி என் வாழ்த் துக்கள், ராஜி''

அதன் பின்னர் அவர்கள் பலவற்றைப் பேசித் தீர்த் தார்கள். மனோ ரவிச்சந்திரனைச் சந்தித்த நிகழ்ச்சியைச் சொன் னாள்.

''தன் மனைவி என்னையும் அவரையும் புரிந்திருக்கிறா ளாம். என்னை அவர் அழைத்து வந்தால் கூட அவள் மறுக்க மாட்டாளாம். எப்படியிருக்கிறது பார்த்தாயா? சொந்தம் பந்தம் என்பவற்றை எப்ப நீயாக உடைத்தெறிந்துவிட்டு வர நேரு கிறதோ அப்ப வா என் வீட்டுக் கதவுகள் உனக்காகத் திறந்தி ருக்கும்' என்றார் ராஜி.''

''நம்பமுடியாமல் இருக்குடி'' என்று வியப்பைக் காட் டினாள் ராஜி.

மனோ அறை மூலையை வெறிக்கப் பார்த்தாள்.

''மனோ .. ஏன் அப்படிச் செய்யக்கூடாது?''

''உனக்கென்ன விசரா, ராஜி அப்படி நடக்க முடி யுமா? மை கோட்''

''நடந்தால் என்னடி''

''அந்தக் கதையை விட்டிட்டு வேறு கதைக்கு வா'' லீலா அறைக்கு வந்தாள்.

''அக்கா யாரோ பெரிய காரில் வந்திருக்கினம் .. அவ அண்ணியோட படிச்சவளாம் கூட வந்தவர் உங்களை விசாரிக்கி றார்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ துடித்து எழுந்தாள். கண்ணாடியைப் பார்த்து தலையைச் சீர்படுத்திக் கொண்டாள். கட்டியிருந்த சேலை கசங்கி யிருப்பதுபோலப்பட்டது. வேறு சேலை அணிந்து கொண்டாள்.

ராஜி அவளை வியப்புடன் பார்த்தாள்.

''ரவி வந்திருக்கிறாரடி'' என்றாள் மனோ பரபரப்புடன்.

''உன்னால் அவரை மறக்க முடியவில்லை... முகமெல் லாம் எண்ணெய் வடியுது. பவுடர் கொஞ்சம் பூசிக்கொள்ளடி''

மனோவிற்குத் தன்னிலை புரிந்தது. அவள் ஏன் இவ்வ ளவு பரபரப்புடன் அலங்கரித்துக் கொண்டாள்? ஏன்? மனோ அப்படியே கட்டிலில் பொத்தென அமர்ந்து கொண்டாள்,

''என்ன மனோ உனக்கு விசரா? எழுந்து போ''

அவர்கள் இருவரும் அறையைவிட்டு வெளியில் வந்த னர். வீட்டு ஹோலில் அவர்கள் அமர்ந்திருந்தனர்.

ரவீந்திரனும் அவன் மனைவியும் அண்ணி அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தாள். மனோ வந்ததை அவள் கவனிக்கவில்லை.

''அதில்லை சுசி... மனோ முந்தி யூனிவேசிற்றியில் படிக் கேக்க ஒருத்தனைக் காதலிச்சவ, ஆடித்திரிஞ்சா. இப்ப அவன் அவளை ஏமாத்திப்போட்டான். நாங்கள் எத்தனை இடத்தில் கலி யாணம் பேசினம். வேண்டாம் என்றிட்டு இருக்கிறா. என்ன செய் கிறது? அதுதான் அவர் மல்லிகாவிற்குக் கலியாணம் செய்து வைச்சவர்.'' அண்ணியின் வார்த்தைகள் கூரிய முட்களாக மனோ வின் மார்பில் தைத்தன.

''அண்ணி...'' என்று தன்னை அறியாமல் மனோ கத் தினாள். அண்ணி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். மனோவின் உடல் நடுங்கியது. அவமானத்தால் குமைந்தாள்.

''மனோவே...?'' என்றாள் அண்ணி.

''என்ன சொன்னியள் அவவுக்கு? ..'' என்று மனோ சினத்துடன் கேட்டாள்.

''உன்னைப் பற்றித்தான் சொன்னனான். நான் சொன் னதில் என்ன பிழை?''

மனோ ரவியை நிமிர்ந்து பார்த்தாள். அவன் அமைதி யாக அமர்ந்திருந்தான்.

''நான் ஆடித்திரிஞ்சனா... நீ ஆடித்திரிஞ்சியா?'' மனோவை அறியாமல் வார்த்தைகள் வெளிவந்து விட்டன. அண்ணி பெரிதாகக் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தாள். அண்ணன் ஓடி வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் ஆடினனும் இவள் சொல்கிருள்...''

அண்ணன் மனோவைச் சுட்டெரித்து விடுவது போலப் பார்த்தான்.

''உவளுக்கு அமர்... தங்கச்சி கலியாணம் கட்டிட்டாள், தான் கட்டவில்லை என்று அமர்.'' என்று அண்ணி கத்தித் திட்டினுள்.

''பொத்தடி வாயை ..'' என்று மனோ சத்தமிட்டாள்.

''நீ பொத்தடி முதலில் வாயை... மரியாதை இல்லாத கதையள்'' எனறபடி அம்மா ஓடி வந்தாள். ''ஆக்கள் வந்திருக்கினம் இவள் மரியாதையில்லாமல் மூதேவி எனக்கென்று வந்து பிறந்துதே தரித்திரம் ..''

'அம்மா ' என்று விக்கித்து நின்ருள். மனோ, தாயின் வார்த்தைகள் அவளை உயிரோடு புதைத்த வேதனையைத் தந்தன.

''உனக்கு இன்றைக்கு ஒன்று சொல்லுறன் நீ வர வர பெரியவர்களை மதிக்காமல் பேசத் தொடங்கிவிட்டாய்.. உழைக்கிருய் என்ற மமதை. மரியாதையா இருக்கிறதாயிருந்தால் இரு இல்லை ..'' என்ருன் அண்ணன்.

''இது என்ர வீடு'' என்று மனோ வீரிட்டாள். ரவியின் குடும்பம். அவர்கள் முன் அவளுக்கு இப்படி ஒரு அவமானமா ?

''இது உன்ர வீடல்ல. இப்ப மல்லிகாவின் வீடு தெரிஞ்சுகொள்''— அண்ணி. 'ஓ' என்று வீரிட்டாள். மனோ அவள் தான் விரும்பி, மல்லிகாவிற்கு எழுதிக் கொடுத்தாள்.

''பிளீஸ் மனோ... அமைதி'' என்ருன் ரவி அவளைப் பார்த்து.

மனோ அவனைப் பார்த்தாள். அப்பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள்.

''பார்த்தீர்களா, ரவி பார்த்தீர்களா .. ? என்னைத் தூக்கியெறிந்துவிட்டார்கள், நான் இவர்களுக்குத் தேவையில்லை... மனோ அழுதாள்.

அவர்களுக்கு ரவியைத் தெரியவில்லை.

''இவள் இப்படித்தான் பாருங்கோ அடங்காள், தவருக எண்ணுதீர்கள்'' என்ருன் அண்ணன், ரவியிடம்.

''உங்களிலும் பார்க்க எனக்கு மனோவை நல்லாத் தெரியும்'' என்ருன் ரவி சூடாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''போடி கத்தாமல் உள்ளே'' என்ருள் அம்மா.

வெறியுடன் மனோ, தாயைப் பார்த்தாள்.

ராஜி மனோவின் தோள்களில் கரம் பதித்தாள். மனோ அவளை அணைத்துக்கொண்டு அழுதாள்.

''பைத்தியம் ஏன் அழுகிருயடி, இதுகள் சுயநலச் சின்னங்கள் ''

விம்மி விம்மி அழுதாள், மனோ. ரவியின் மனைவி மெதுவாக எழுந்தாள். மனோவின் கரத்தை மெதுவாகப் பற்றினுள்.

''மனோ'' .....

மனோ திரும்பிப் பார்த்தாள்.

''எங்களுடன் வந்திடுங்கள்... உங்களை நல்லா நான் புரிஞ்சிருக்கிறன் மனமறியச் சொல்லுறன் .. எங்களுடன் வந்திடுங்கள்''

ரவியும் எழுந்திருந்தான். ''மனோ இனியும் நீ இங்கிருந்தது காணும், வந்திடு''

அண்ணனுக்கும் மற்றவர்களுக்கும் அப்போதுதான் வந்திருப்பது யார் எனப்புரிந்தது.

அண்ணன் கோபத்துடன் கத்தினுன்.

''அவளைக் கூட்டிப்போகவா வந்தியள் . நீ தானு அவன்?''

''ஓம் மிஸ்ரர் ராசதுரை நான்தான் ரவி. அவளைக் கூட்டிக் கொண்டு தான் போகப்போகிறம்.''

''போடா வெளியில'' என்று அண்ணன் கத்தினுன்.

''சும்மா கத்தாதையும், ராசதுரை. நீர் உம் தங்கைக்குச் செய்ததை எனக்குத் தெரியும். உழைச்சுத் தின்றதுக்காக நாங்கள் வந்து பெண் கேட்டபோது தட்டிக்கழிச்சியள். உங்களுக்காக அவள் என்னுடன் வர மறுத்தாள், இப்ப......''

அண்ணன் கோபத்துடன் ரவியை அடிக்க ஓடிவந்தான். ஓங்கிய கரத்தை ரவி திடமாகப் பற்றினுன்.

''ஜாக்கிரதை... என்னில் தொட்டால், நடக்கிறது வேறை. இயலுமானுல் உன் தங்கச்சியை மறிக்கப் பாரும்.''

மனோ எல்லாரையும் பார்த்தாள்.

''போயிடு, மனோ'' என்ருள் ராஜி

''போயிடுவாயாடி, அவன் கலியாணம் கட்டியவன். ஊர் என்ன சொல்லும்'' என்று அம்மா ஒப்பாரி வைத்தாள்.

''ஊரும் உலகமும் கூ கெயார்ஸ்'' என்ருள் மனோதிடத்துடன்

ராஜி அவளை இப்போது வியப்புடன் பார்த்தாள்.

''மானம் மரியாதை எல்லாத்தையும் வித்திட்டு ஓடப்போறியாடி?''

''வந்திடுங்கள் மனோ'' ரவியின் மனைவி.

மனோ எல்லோரையும் கவலையுடன் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ போயிடு அக்கா" என்றாள் லீலா. மனோ திடுக்கிட்டுப் போனாள். லீலாவா சொல்லுகிறாள்? பன்னிரண்டு வயதுச் சிறுமி அவள்? அவளா...?

"லீலா?"

"நீ அவர்களுடன் போயிடு அக்கா. நீ பட்ட கஷ்டம் போதும்" லீலாவின் விழிகள் கலங்கின. அவ்வீட்டில் இன்னொரு மனோ உருவாகிக்கொண்டிருக்கிறாளா?

திகைப்பு, பயம், ஏக்கம், ஏமாற்றம் முடிவு.?

"வந்திடுங்கள், மனோ அவவைக் கூட்டிவாருங்கள்" என்றாள் ரவியின் மனைவி சுசி.

ராஜியின் கண்களுக்கு அவள் புதுமைப்பெண்ணாகத் தெரிந்தாள்.

ரவி மனோவின் அருகில் வந்தான். அவள் தோளில் அவன் வலக்கரம் பதிந்தது. "வா மனோ வா ..."

அவன் அவள் மீது கரம் பதித்தான். மனோ அப்படியே சிலையாக நின்றாள்.

உற்றார் பெற்றார் அண்ணன்.. அண்ணி தங்கைகள்...... சமூகம்... இவ்வளவும் அவளை வாழவிடவில்லை.

அவள் தன் முகத்தில் கரங்களால் அறைந்து கொண்டு அழுதாள்.

"மனோ பிளீஸ்... பிளீஸ்..." என்றபடி ரவி அவளைத் தன்னுடன் அணைத்துக்கொண்டான்.

"விடடா அவளை ..." ரவி ராசதுரையை ஏறிட்டுப் பார்த்தான். பின்னர் நடக்கத் தொடங்கினான்.

அவன் அணைப்பில் கட்டுண்டு மனோ கூடவே நடந்தாள் அவர்களைச் சுசி தொடர்ந்தாள். சமூகம்... சம்பிரதாயம்...... கட்டுக்கள் எல்லாம் அவர்களைத் தடுக்க முடியவில்லை.

ரவீந்திரன் காரின் கதவைத் திறந்து விட்டான். மனோ காரினுள் காலடி வைக்க முயன்றவள் ஒருகணம் தயங்கி நின்றாள்.

வீட்டைத் திரும்பிப்பார்த்தாள். ஐயா, அம்மா, அண்ணன்... எல்லோரும் திக்பிரமை பிடித்தவர்களாக நிற்பது தெரிந்தது. அம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் மனோவின் இதயத்தில் ஆயிரம் குழப்பங்கள் தெளிவில்லை.

அவளால் காரினுள் ஏறிச் செல்ல முடியவில்லை. விம்மலுடன் அழுகை பொங்கியது.

அப்படியே—

"மனோ"...

வீட்டிற்குள் பாய்ந்து ஓடினாள். கட்டிலில் விழுந்து அழத் தொடங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சுஜாதா பப்ளிக்கேஷன் ஸ்தாபனத்தாரின் "சாந்தி" இலக்கிய கர்த்தாக்களின் கன்னி முயற்சி. நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் தொழிலதிபர்களுடன் பயன்மிக்க நேரர் சந்திப்பை ஏற்படுத்தி அவர்களை இலக்கிய வாசகர்கள் சந்திக்கக் கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளோம்)

# தொழிலதிபருடன் ஒரு நாள்

(சாந்தி வாசகர்கள் சந்திக்கும் முதற் தொழிலதிபர். S. P. சாமி & Co நிறுவனத்தின் உரிமையாளர் S. P. சாமி.)

"வியாபாரத் துறை, நாடகத் துறை, திரைப்படத் துறை, அச்சகத் துறை, வெளியீட்டுத் துறை மருத்துவத் துறை ஆகிய பல்வேறு துறைகள் மூலம் மக்கள் மத்தியில் பிரபலமாகியுள்ளவர்'' திரு. எஸ். பி. சாமி-

அயராத உழைப்பு, தளராத மனவுறுதி, ஆழ்ந்த சிந்தனை, நுட்பமான அறிவு இவைகள் தான் திரு. எஸ். பி சாமி அவர்களின் உயர்வின் ஏணிப்படிகளாக அமைந்திருக்கின்றன.

' வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு எஸ். பொன்னுச்சாமி அவர்களின் உழைப்பின் வெற்றி சுமார் இருபது வருட கால எல்லைக்குள் பல்வேறு தொழில் நிறுவனங்களின் உரிமையாளர் எஸ். பி. சாமியாக மாற்றியது, அவரது தங்கமான மனம் தான்.''

யாழ். மாவட்ட விவசாயிகளின் காவலனாக நின்று அவர்கள் உற்பத்தி பொருட்கள் கொள்வனவு செய்த S. P. சாமி அன் கோ நிறுவனத்தை வானொலி கலைஞர்களுடன் ரசிகர்களைக் கவர்ந்த குளறி கந்தையாவையோ, புறக்கோட்டை கண்டி மாநகர், மரிக்கார் லங்காவையோ யாழ். நகர் சென்றல் கிளினிக்கையோ உங்கள் கைகளில் தவழும் பாரதி வண்ண இதழையோ, பல் வர்ணங்களில் வண்ணப் பிரதிகளை உருவாக்கும் லித்தோ பிறின்டிங்கையோ வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அத்தகைய நிறுவனங்களை உருவாக்கித் தந்த எஸ். பி. சாமி அவர்கள் சாந்திக்கு அளித்த பேட்டி இதோ:

சுதா: உங்கள் வியாபாரத் துறையின் பிரவேசத்தைப் பற்றி குறிப்பிட முடியுமா?

எஸ். பி : ஒவ்வொரு மனிதனும் தனது எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள ஏதாவது ஒரு துறையில் ஈடுபட்டே ஆக வேண்டும் இல்லையா? அந்த வகையில் நான் முதன் முதலாக தேர்ந்தெடுத்த துறை தான் வியாபாரத்துறை. எனது சுய முயற்யைக் கொண்டே இத் துறையில் ஈடுபட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

? தங்கள் வியாபாரத் துறையின் ஆரம்பம்?

1962இல் தான் வியாபாரத் துறையில் பிரவேசித்தேன்.

? தங்கள் வியாபாரத் துறையின் முக்கிய திருப்புமுனை?

நான் ஈடுபடும் ஒவ்வொரு துறையும் எனக்கு ஒரு திருப்புமுனை தான். எல்லாமே வியாபாரமும் அல்ல......

? தங்களுடைய திரையுலக பிரவேசம் பற்றி?

நான் குறிப்பிட்ட திருப்புமுனைகளில் இதுவும் ஒன்று. இதை நான் வியாபாரமாக இல்லாமல் சவாலாக ஏற்றுக் கொண்டேன். படத் துறையில் ஈடுபட்டவர்கள் பாடெல்லாம் கஷ்டம் என்று பரவலாக பேசப்பட்டு வந்த காலகட்டத்தில் தான் நான் இதில் காலடி எடுத்து வைத்தேன். வெற்றியும் கண்டேன். திட்டமிட்டு எதைச் செய்தாலும் தோல்வி கிடையாது என்ற உண்மையை நான் உணர்ந்து கொண்டதுடன் பலருக்கும் தெரியப்படுத்தினேன்.

? யாழ். மாவட்டத்தில் தங்களால் உருவாக்கப்பட்டுள்ள வைத்திய நிலையம் சிகிச்சைப் பிரிவு ஆகியவை பற்றிக் கூற முடியுமா?

யாழ். நகர் மக்களுக்கு சிறந்த மருத்துவ வசதி கிட்டும் வகையில் இதனை அமைத்து இருக்கின்றேன். இவற்றை ஒரு தொண்டாக நினைத்து ஆரம்பித்தேன். எனது பணியை விட அங்கு பணியாற்றும் டாக்டர்கள், தாதிகள் மற்றும் அனைத்து தொழிலாளர்களினதும் பணியை நான் பெரிதும் மதிக்கிறேன்,

? பாரதி சஞ்சிகையை ஆரம்பித்ததன் நோக்கம்?

இந்தியாவில் இருந்து எத்தனையோ சஞ்சிகைகள் எத்தனையோ வகையாக வந்து கொண்டு இருக்கின்றன. அச் சஞ்சிகைகள் இலங்கை வாசகர்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கம். அத்தகைய வர்ணங்கள் இலங்கையில் எப் பத்திரிகையிலும் இல்லை என்பதனாலேயே என்பது என் எண்ணம். ஆகையால் அச்சக வசதியுள்ள நாம் இப்படியொரு சஞ்சிகையை ஆரம்பித்தால் என்ன என்ற ஆதங்கம். அழகான வர்ணப் பத்திரிகையாக பாரதியை உருவாக்கினேன். இலங்கை வாசகர்களும் இப்படியும் பத்திரிகை உருவாக்கலாம் என்ற மகிழ்ச்சி பெற்றுள்ளார்கள் என்பதனை என்னால் உணர முடிந்தது.

? பல சமூக சேவை இயக்கங்களில் தாங்கள் ஈடுபட்டுள்ளீர்கள் என அறிந்தேன். அது பற்றி விளக்கமாக கூற முடியுமா?

நிச்சயமாக முடியாது. நான் ஈடுபட்டு இருக்கும் சமூக சேவை இயக்கங்களின் பெயர்களையும் விளக்கினால் அது எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபதுகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்காலத்தில் கைலாஸ் அரச ஆதரவாளனுகவும் - சீன நண்பனுகவும் விளங்கினுர். அந்தஸ்துடன் பிரகாசித்தார். யாழ். பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதில் முன்னின்று உழைத்து, அதன் தலைவராகவும் விளங்கினுர்.

கம்யூனிஸ்ட் கட்சி அரசியலுக்குத் துணை போவதை மட்டுப்படுத்த பலதுறைகளிலும் கவனம் செலுத்தினுர். நாவலர் பெருமான் முதல் இன்று 'நாட்டியம்' பயில்பவர் வரை ஆய்வுகள் செய்து எழுதினுர். நடன அரங்கேற்றங்களுக்குக் கூட பிரதமவிருந்தினராகச் சென்று நடனக்கலை குறித்து நவீன கருத்துகள் சொன்னுர். எல்லா மேடைகளிலும் அவர் குரல் ஓங்கி ஒலித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி முடிந்து இன்றைய ஆட்சி பீடத்தினர் வந்த பின்பும் கைலாஸ் ஓதுங்கி விடவில்லை. அவர் புகழுடன் திகழ்ந்தார். பல விடயங்களில் அரசுக்குக் கூட ஆலோசனை சொல்லக்கூடியவராக இருந்தார்.

சீனுவில் தலைவர் மாஓ மறைவுக்குப் பின்பு ஆட்சி பீடத்துக்கு வந்தவர்கள், மாஓவின் கொள்கை நடை முறையில் பல மாற்றங்களை அங்கு செய்து அமெரிக்காவுடன் நெருங்கிப்போன பின்பும் கைசாஸ் சீன நண்பனுகவே விளங்கினுர்.

அமெரிக்காவுக்குச் சென்று அங்கு சில மாதங்கள் பணி புரிந்தார். பின் சீனுவுக்கு குடும்பத்துடன் சென்று மாஓ மறைக்கப்படும் சிரமியும் சீனுவை சுற்றிப்பார்த்தார்.

சீனப்பிரயாணம் குறித்து புத்தகம் எழுதினுர். தொடர்ந்தும் சீனநண்பனுகவே விளங்கினுர்.

கைலாஸ் பண்டித பரம்பரையிடமிருந்து வளவளா விமர்சகர்களிடமிருந்து தமிழ் இலக்கியத்தைப் படித்து உரைத்துப் பார்த்த ஆய்வாளன். மாக்சிச - லெனிலிச - மாஓ வாதி எனக் கூறப்பட்ட கைலாஸ், ' நாவலரைச் சாதிவெறிக்காவலர் ' என அவர் சார்ந்த இயக்கத்தினர் கூறிய போதும், நாவலர் பெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது சேவைகளை ஆய்ந்து கூற பின்னிற்கவில்லை. அவர் யாரையும் பகைத்துக் கொண்டவரல்ல. பண்டித பரம்பரையையும் அவர் பகைத்துக் கொள்ளவில்லை. பகைமை பாராட்டவில்லை. பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் ஆசி அவருக்கென்றும் உண்டு.

இறுதிக்காலத்தில் கைலாஸ் தமது சமூக அரசியல் கருத்துக்களால் மாற்றம் கொண்டிருந்தாரெனச் சிலர் கூறிவருகின்றனராயினும் பலர் கூறுவது போல கைலாஸ் என்றும் தமது நிலையில் சரியாகத்தான் நடந்து வந்திருக்கிறார்.

கைலாசைத் தெய்வமாக்காது, அவர் விட்டுச் சென்ற பணியை அவரது வழியில் தொடர்பவர்கள் முன்னெடுக்க வேண்டியதே கைலாசிற்குச் செய்யும் கைமாருகும்!

○ ○ ○

---

● சுஜாதா பப்ளிக்கேஷன்ஸ் சார்பில், யாழ்ப்பாணம் அபிராமி பிரிண்டர்சில் அச்சிட்டு வெளியிடுபவர்: முத்தையா தர்மராஜன், 50/29, வைரவர் கோவில் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். ● ஆசிரியர் குழு: யாழூர் துரை, குமரன், கதிர் சுதாகர் ● ஓவியம்: லங்கா ● வண்ணப் படம்: கவிதாலயா போட்டோ ● ஆக்கங்கள் யாவற்றுக்கும் படைப்பாளிகளே பொறுப்பாவர். ● பதிப்புரிமை வெளியீட்டாளருக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments from:

Bata


MARIKKAR (LANKA) LTD.

COLOMBO-11.

&

KANDY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org